# தேமதுரத்
# தமிழோசை

# தேமதுரத் தமிழோசை

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960
MADURAI

நாமக்கல் கவிஞர்

வெ. இராமலிங்கம் பிள்ளை

கவிஞர் பதிப்பகம்

ராஜ வீதி :: கோயமுத்தூர்.

முதற் பதிப்பு—ஜூன், 1957.
இரண்டாம் பதிப்பு—மார்ச், 1959.

விலை ரூ. 2-00

மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், 76, எல்லிஸ் ரோடு, சென்னை-2.

# பதிப்புரை

கவிஞர்கள் ஒரு நாட்டின் கண் போன்றவர்கள். நாட்டினரின் பண்புக்குப் பாதுகாப்பாளிகள் அவர்கள். நாட்டினரின் பண்பு சீர்கெட நேரும்போது அதைச் சீர்திருத்தி அன்னாரின் ஒழுக்கத்தை உருப்படுத்துபவர்களும் அவர்களே. அப்படிப்பட்ட கவிஞர்கள் மரபில் வந்த நாமக்கல் கவிஞரும், இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் பூசல்களுக்கு ஒரு முடிவு காணத் துடிக்கிறார். அத்துடிப்பின் விளைவே 'தேமதுரத் தமிழோசை.' சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் நடுநிலை நின்று அவர் கூறும் கருத்துக்கள் தமிழர்களின் சிந்தனையைக் கிளறி அல்வழி தவிர்த்து நல்வழி செலுத்தும் என்பது எங்கள் ஆழ்ந்த நம்பிக்கை.

தமிழின் தோற்றம், வளர்ச்சி, அதன் இன்றைய நிலை, எதிர்காலத்தில் அஃது எய்த வேண்டிய நிலை இவை பற்றிய தெள்ளிய கருத்துக்களைக் கவிஞர் தமக்கே உரிய எளிய இனிய நடையில் எடுத்தியம்புகின்றார்கள். தமிழ் மொழியின் பெருமையை, தமிழினத்தின் பெருமையை உள்ளங்கை நெல்லிக்கனி என உணர்த்தி மொழியின் பேரால், பண்பின் பேரால் எங்ஙனம் தமிழர் யாவரும் ஒற்றுமை

யுடன் வாழவேண்டும் என்ற உயரிய கருத் தினைப் பாமரரும் அறியும் வண்ணம் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். அவரது கருத்துக் கள் இன்றைய தமிழரிடை—சிறப்பாக மாண வரிடை உலவிவரும் வேற்றுமை உணர்ச்சிகளை வேரறுத்து ஒற்றுமைக்கு வழிகோலும் என்பது எங்கள் திடமான நம்பிக்கை.

கவிஞரின் சிந்தனையில் உதித்த இச்சிறு ஆராய்ச்சி நூல் பண்டிதர்க்கும் பாமரர்க்கும் ஒருங்கே பயன்படும் முறையில் அமைந் துள்ளது பாராட்டுதற்குரியது. படிப்பவருள் ளத்தில் தமிழின் மேலும், தமிழரின் தனிப் பண்பின் மேலும் ஆராக் காதலை எழுப்பிவிடும் முறையில் அமைந்துள்ளது அவரது சொல் லோவியம். தமிழின் பெயர் பற்றியும், தமிழ் இனம் பற்றியும், தமிழரின் பண்பு பற்றியும் அவர் கூறும் புதுமைக் கருத்துக்கள் படிப் போரின் அறிவுக்கு ஓர் அரிய விருந்தாகு மென்பதில் ஐயமில்லை.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் அடிச் சுவட்டைப் பின்பற்றிக் கவிபாடும் நாமக்கல் கவிஞர், தமிழரின் அறிவுக்கு விருந்தளிப்ப தோடுநல்உணர்ச்சிகளுக்கும் உணவளிக்கிறார். அந்தப் பாரதி கூறிச் சென்ற 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வோம்' என்ற தாரக மந்திரத்தை அடிக்கடி அவர் தமிழர்களுக்கு நினைப்பூட்டி,

தமிழில் நிரம்பியுள்ள என்றும் நின்று நிலவும் மெய்ஞ்ஞானச் செல்வங்களை உலகமெங்கும் வாரி வழங்கும்படி அவர்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுக்கிறார். அவ் வேண்டுகோளைத் தமிழர்கள் விரும்பி ஏற்பர் என்பதும் அவ் வேண்டுகோளை நடை முறையில் நிறைவேற்றக் கங்கணம் கட்டிக் கொண்டு உழைப்பர் என்பதும் எங்கள் நம்பிக்கை.

இவ்விதம் இக்காலத் தமிழ் மக்களுக்கு, சிறப்பாக மாணவ உலகத்துக்கு ஏற்றதொரு அமிழ்தமாய், அருமருந்தாய் இந்நூல் அமையுமென்ற எண்ணத்துடன் இந்நூலைப் பெருமையுடன் தமிழன்னையின் இணையடிகளில் சமர்ப்பிக்கிறோம். இதுபோன்று இன்னும் பல நூல்களை வெளியிட்டு நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்பது எங்கள் அவா. எங்களுக்கு நல்ல முறையில் மக்கள் ஆதரவு தந்து ஊக்கமளிப்பரென நம்புகிறோம்.

—பதிப்பகத்தார்.

LIBRARY MADURAI

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| தேமதுரத் தமிழோசை | ... | 8 |
| தமிழ்ப் பற்று | ... | 28 |
| இன வேற்றுமை | ... | 47 |
| தமிழின் தொன்மை | ... | 56 |
| தென் மொழியும் வட மொழியும் | ... | 72 |
| தமிழ் மரபு | ... | 85 |
| தொல்காப்பியம் | ... | 95 |
| 'தமிழ்' என்ற பெயர் | ... | 138 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# தேமதுரத் தமிழோசை

'அமிழ்தம்' என்று ஆன்றோர் அருந்திய தமிழ் மொழி; கணக்குக்கு எட்டாத காலத்திலிருந்து "கன்னித் தமிழ்" என்று கற்றுணர்ந்த பெரியோர்கள் களிப்புடன் போற்றும் தமிழ் மொழி; 'சேரன் தம்பி சிலம்பை இசைத்த தமிழ் மொழி; 'தெய்வ வள்ளுவன் வான்மறை செய்த' தமிழ் மொழி; 'என்று முள தென் தமிழ்' என்று கவிச் சக்கரவர்த்தி கம்பன் பாடிய நம் மொழி. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி பரவும் பழந்தமிழ் மொழி.

போப், கால்ட்வெல், பர்சிவியல் முதலியபல ஐரோப்பியர்கள் விரும்பிக் கற்றுப் புகழ்ந்து போற்றிய பொன் மொழி.

இதாலி நாட்டிற் பிறந்து, பல ஐரோப்பிய மொழிகளையும் ஆராய்ந்துவிட்டு, கிறிஸ்துவ மதப் பிரசாரம் செய்யத் தமிழ் நாட்டுக்கு வந்து, தமிழ்—வடமொழி—தெலுங்கு — மலையாளம் முதலிய மொழிகளையும் கற்று ஆராய்ந்தபின், தாம் கற்ற எல்லா மொழிகளிலும் தமிழ் மொழிதான் மிகவும் சிறந்தது என்று தமிழின் மறுமலர்ச்சிக்கே தம்மை அர்ப்பணம் செய்து, 'சதிரகராதி

என்ற பெயரில் முதன்முதல் தமிழுக்கு அகராதி இயற்றி, 'தேம்பாவணி' என்ற மிகச் சிறந்த தமிழ்க் காவியத்தையும் மற்றும் இருபது இலக்கிய இலக்கண நூல்களையும் இயற்றியவரான 'கான்ஸ்டண்ட் பெஸ்கி' என்ற இயற்பெயரும் 'வீரமா முனிவர்' என்ற சிறப்புப் பெயரும் கொண்ட தவசி வாழ்த்தி வணங்கிய தமிழ்மொழி.

வேறு எந்த மொழியிலும் காணமுடியாத அளவில் தெய்வத்தை வணங்க உதவும் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருவருட்பா, திருப்புகழ் முதலிய பக்திப் பாடல்கள் மிகுந்த தமிழ் மொழி.

மற்ற எந்த மொழியிலும் இயற்ற முடியாத சந்தங்களையும் யமகம், திரிபு,முதலிய அமைப்புகளையும் எளிதில் செய்யக்கூடிய இலக்கணமும் சொல்லாட்சியும் உள்ள தமிழ் மொழி. இந்தச் சந்தங்களும், யமகம் திரிபு முதலிய கவிபுனையும் வித்தைகளும், இக்காலத்தில் இகழ்ந்து பேசப்படுகின்றன. அப்படி இகழ்ந்து பேசுவதற்கு முக்கிய காரணம், யமகமாகவோ, திரியாகவோ சித்திரக்கவியாகவோ நல்ல கருத்துக்களை அமைத்துக்கவி புனையும் கலைத்திறம் உடையார் ஒருவரும் இப்போது இல்லாததே. மேலும் இப்படிப்பட்ட கவிகளிலுள்ள கலைத் திறமையை அறிந்து அனுபவிக்கக்கூடிய அளவில் தமிழறிவு படைத்த சமுதாயமோ, சபைகளோ இக்காலத்தில் இல்லாதிருப்பதும், அத்தகைய கவிதைகளை அவமதிப்பதற்கு ஒரு காரணம் எனலாம். யமகமோ, திரிபோ, சித்திரக்கவியோ இயற்றுவது,எண்ணியெண்ணி வார்த்தைகளைப் பொறுக்கி அடுக்கினாலும் எளிதாகச் செய்யக் கூடியனவல்ல. அப்படியிருக்கவும் இப்படிப் பட்ட கவிகளை இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்றபடி

நினைத்தவுடன் பாடியபுலவர்கள்பலர் இருந்திருக்கிருர்கள். அப்படிப்பட்ட பாடல்களைப் பாடுவதற்கு ஆழ்ந்த கல்வியறிவும் மிக்க சொல்லாட்சியும் சமயோசித சாமர்த்தியமும் வேண்டும். இந்தக் கவிகள் அறிவு புகட்டவோ, அறங்களை போதிக்கவோ பயன்பட மாட்டா என்ருலும் அவற்றிலுள்ள கலைத்திறன் மிகவும் மெச்சத்தக்கது. ஒரு 'சர்க்கஸ்'காரன் மிகவும் வியக்கத்தக்க விதத்தில் தன்னுடைய உடலையும் உறுப்புகளையும் வளைத்து நெளித்து வித்தை செய்கிருன். அது நமக்கு அறிவு புகட்டவோ அறங்களை நினைப்பூட்டவோ ஒரு சிறிதும் உதவாது. ஆனுலும், அதைக் கண்டு நாம் ஒரு வித இன்பம் அடைகின்ருேம். அதைப் போலவே சித்திரக் கவிகளும் வியப்பூட்டி இன்பம் பயக்கமட்டும் கருதிய வித்தைகளே. அப்படிப்பட்ட வித்தைகள் வாழ்க்கைக்கு அவசியந்தாஞ அல்லவா என்பதைப் பற்றி இப்போது விவாதிக்க வேண்டியதில்லை.

அது எப்படியானுலும் 'திருப்புகழ்' போன்ற சந்தக்கவிகளையும் யமகம், திரிபு, சித்திரம், வித்தாரம் என்ற கவிகளையும் இயற்றுவதற்கு இடந்தரக்கூடிய எழுத்தியல்பும், சொல்லியல்பும் புணர்ச்சி, சந்தி, விகாரம் முதலிய இலக்கண உரிமைகளும் உடைய ஒரு மொழி தமிழ்தான் என்பது பல மொழிகளையும் ஆய்ந்தறிந்த அறிவுடையோர் தீர்ப்பு.

அத்துடன் பிறமொழிகளில் உள்ள நல்லறிவுகளைக் கூசாமல் கூட்டிக் கொள்ள வேண்டும் என்ற பரந்த நோக்கத்துடன், எந்தத் திசையிலுள்ள எந்த மொழிச் சொல்லையும் சொந்தமாக்கிக் கொள்வதற்கென்றே தன்னுடைய இலக்கண நூலில் 'திசைச் சொல்' என்ற

பகுதியை இணைத்துள்ள மொழி தமிழ் மொழிதான். உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் அவைகளுக்குச் சொந்தமல்லாத பிற மொழிச் சொற்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்கென்றே தன்னுடைய இலக்கண நூலில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துள்ளது தமிழ் மொழிதான்.

எனவே, தமிழ் மொழியானது எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அழகுறஅமையப் பெற்றது. சரித்திர ஆராய்ச்சிகளுக்கு எட்டாத காலத்திலிருந்து இன்றளவும் செழுமை குறையாமல் இருந்து வருவது. மனித வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இன்றியமையாத எல்லா நல்லறிவுகளையும் தெளிவாகச் சொல்லுவதில் இணையற்ற இலக்கியம் என்று பிறமொழி அறிஞர்கள் அனைவரும் போற்றுகின்ற திருக்குறளைத் தந்த பெருமையுடையது. கதை சொல்லும் அழகிலும், கற்பனைச் சிறப்பிலும், கவி நயத்திலும், அறங்களை வலியுறுத்தும் ஆற்றலிலும் நிகரற்ற தான கம்பன் காவியத்தைப் யெற்றது. சத்திய சாந்த சன்மார்க்கமே குறியாகத் தெய்வத்தை நினைப்பூட்டிக் கொண்டிருக்கும் பக்திப் பாடல்கள் நிறைந்தது.

அப்படிப்பட்ட தமிழ் மொழிக்குத் தமிழர்களாகிய நாம் நெடுங்காலமாக ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்,......நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு வாழ்ந்திடுதல் நன்றோ' என்று பாரதியார் பாடிப் புலம்புகின்றார்.

ஆம் ; கடந்த இருநூறு ஆண்டுகளுக்கும் அதிகமாக ஆங்கில மொழியின்மீது மோகங் கொண்டவர்களாகித் தமிழில் பேசவும் முடியாத ஊமைகளாக வாழ்ந்து விட்டோம்.

தமிழ் மொழி இலக்கியங்களைக் கற்றறிந்தவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திஞல் அந்தச் சொற்பொழிவுகளில் அற ஒழுக்கங்களையும் ஆன்ம விசாரணையையும் பக்தி மார்க்கத்தையும் பற்றியே அதிகம் பேசுவார்கள். ஆன தால் அப்படிப்பட்ட பேச்சுகளைக் கேட்டு ரசிக்க முடியாத செவிடர்களாகவே வாழ்ந்து வந்தோம்.

ஆங்கில மொழி 'நாவல்'களையும், தமிழ் மொழியில் வரக்கூடிய காதல் கதைகள் இருந்தால் அவைகளையும் படித்துக் கொண்டு, நம்முடைய வீடுகளில் நம் முன் ஞேர்கள் வைத்துப் போன தமிழிலக்கியச் சுவடிகள் இருந்ததையும் காண முடியாத குருடர்களாக இருந்து விட்டோம். அதஞல் பல நல்ல இலக்கியச் சுவடிகள் இருந்த இடம் தெரியாமல் மக்கி மறைந்து போயின. தமிழ்த் தாத்தா எனப்படும் மகாமகோபாத்தியாயர் திரு. உ. வெ. சுவாமிநாத ஐயரவர்கள், மற்றவர்களைப் போல், பழைய இலக்கியங்களுக்குக் குருடராக இருந்துவிடாமல் கூர்ந்து பார்த்துத் தேடி எடுத்ததஞல், மண் தின்றுவிடும் படி மறைந்து கிடந்த இலக்கியச் சுவடிகளிற் சிலவேனும் நமக்கு மிஞ்சின.

இதஞல் நாம் ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்ந்ததாகப் பாடியதில் உண்மை யிருக்கின்றது.

அப்படி வாழ்ந்துவிட்ட பழியைப் போக்கிக் கொள்ள பாரதியாரே நமக்கு வழி சொல்லுகின்ருர். அந்த வழி என்னவென்ருல் :

நாம்,

**'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய' வேண்டும்.**

அதன் மூலம்

**தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை**
**செய்தல் வேண்டும்'**

என்பதுதான்.

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வது என்ருல் என்ன? தெருக்களிலே வசிக்கின்ற மக்கள் அனைவரும் தமிழிலேயே பேசவேண்டும், பாடவேண்டும் என்பது மட்டும் பொருளல்ல. தமிழ் மொழியில் அடங்கி யுள்ள நல்லறிவும், நல்ல பழக்க வழக்கங்களும், தெய்வ நம்பிக்கையும், உபகார குணங்களும் எல்லா மக்களிடை யும் விளங்கும்படிப் போதிக்கப்பட வேண்டும் என்பது தான் பொருள்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும் என்பது, தமிழ் இலக்கியங்களின் சிறப்பையும் அவற்றிலுள்ள தமிழ்ப் பண்புகளையும் உலகத்திலுள்ள மற்ற நாடுகளிலுள்ள மக்கள் உணரும் படி செய்து மகிழ்வதுதான். மற்ற நாட்டவர் நம்முடைய இலக்கியங்களில் அடங்கியுள்ள நல்லறிவையும் நாகரீகத் தையும் உணர்ந்து,

**'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம்**
**செய்தல் வேண்டும்'**

என்று பாரதியார் பாடியபடி அவர்கள் நம்முடைய மொழி யைப் பாராட்டி வணங்கி வரவேற்பதில் நாம் நியாய மான பெருமிதமடைந்து பூரிக்கவேண்டும். அத்துடன், அந்த வெளிநாட்டார் அறிந்திராத நல்ல இலக்கியங்களை அவர்களும் அறிந்து அனுபவித்துப் பயனடையச் செய் தோம் என்ற சேவையும் சேரவேண்டும் என்பதாம்.

பண்டைத் தமிழர்கள் நெடுந்தூரங்களில் இருந்த நாடுகளுக்கும் திரவியம் தேடத் திரைகடல் ஓடினார்கள். அப்போது அவர்கள் பிறநாடுகளிலிருந்து திரவியங்களை மட்டும் கொண்டு வரவில்லை. அங்கங்கே உள்ள கலையறிவுகளையும் கட்டிக் கொண்டு வந்தார்கள். மேலும் அவர்கள் விலைக்கு விற்கக் கூடிய தங்களுடைய பண்டங்களை மட்டும் கொண்டு போனவர்கள் அல்ல. அப்பண்டங்களோடு தங்களுடைய 'தேமதுரத் தமிழ் ஓசை'யையும் தமிழ்ப் பண்புகளையும் கொண்டுபோய் அங்கங்கே பரவும் வகை செய்தார்கள். அப்படிப் பரவச் செய்ததற்குச் சான்றுகளாகக் கடல் கடந்தபல வெளிநாடுகளில் தமிழர்கள் கட்டிவைத்தக் கோயில்களும், சிற்பங்களும், தமிழ்ப் பழக்க வழக்கங்களும் இன்றைக்கும் அங்கங்கே இருக்கின்றன.

ஆனால், அது நெடுங்காலத்துக்கு முன்னால் இருந்த தமிழர்கள் செய்தது. அவர்களுக்குப் பின்னால் வந்த தமிழர்கள் அப்படிப்பட்ட பெருஞ் செயல்களை மேற்கொள்ள வசதியும் திறமையும் இல்லாதவர்களாகி விட்டது போலத் தெரிகின்றது. அதற்குக் காரணம் தமிழ் நாட்டு மன்னர்களுக்குள் ஓயாத போர்களும், உள் நாட்டுக் குழப்பங்களுந்தான் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. உறுதியும் அமைதியும் சேர்ந்த உள்நாட்டு அரசாங்கத்தின் ஆதரவு இல்லாவிட்டால், வெளிநாடுகளுக்குப் போய் வியாபாரம் செய்து சிறப்புடன் திரும்புவது எப்படி?

அதனால் இன்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே தமிழர்கள் திரைகடலோடித் திரவியம் தேடுவதும் அதன் காரணமாகத் 'தேமதுரத் தமிழோ

சையை' அயல்நாடுகளில் பரவச் செய்வதும் நின்று போய் விட்டன. அதற்குப் பிறகு, தமிழ் இலக்கியங்களின் சிறப்பை வெளிநாட்டார் உணரும்படித் தமிழ் ஓசையை அன்னிய நாடுகளில் பரவச் செய்யும் முயற்சியைத் தமிழ்நாட்டிற் பிறந்த எவரும் மேற்கொள்ளவில்லை.

ஆனால், தமிழ் நாட்டில் பிறவாமல், இதாலியில் பிறந்து, தமிழ்த் தாய்க்குத் தத்துப் புத்திரனாக வலிய வந்து தமிழுக்கு அரும்பெரும் பணிகள் புரிந்த கான்ஸ்டண்ட் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் சுமார் 220 ஆண்டுகளுக்கு முன்னால் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை' செய்தார். தமிழின் சிறப்பை ஐரோப்பிய நாடுகள் அறியும் பொருட்டு 'தமிழ்—லத்தீன்' அகராதி ஒன்றையும் 'தமிழ்—போர்த்துகீய' அகராதி ஒன்றையும் 'தமிழ்—லத்தீன்—போர்த்துகீய' மும்மொழி அகராதி ஒன்றையும் வெளியிட்டு மேலை நாடுகளுக்கு வழங்கியதோடு தமிழ் மொழியின் தனிச் செல்வமாகிய திருக்குறளை மேல்நாட்டு மொழிகளில் முதன் முதல், மொழி பெயர்த்துதவியவர் அவரேயாவார். அதுமட்டும் அல்லாமல் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திவாகரம், தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி, அகநானூறு, புறநானூறு, தத்துவ விளக்கம், நன்னூல், ஞானமிர்தம் முதலிய பல தமிழ் இலக்கியங்களையும் ஔவையாரின் நீதிக் களஞ்சியங்களான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, கல்வியொழுக்கம், நல்வழி, பந்தனந்தாதி, நன்னூற் கோவை, நான்மணிக் கோவை, அருந்தமிழ்மாலை, ஞானக்குறள், பிடகநிகண்டு, ஒழிவிலொடுக்கம் முதலிய நூல்களையும் மேனாட்டு மொழி

களிலே வெளியிட்ட மாபெரும் துறவியான வீரமாமுனிவர்தான் 'தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை, 'முயன்று, தமிழ் மொழியிலுள்ள திறமான புலமைதனை வெளிநாட்டார் வணங்கும்படியான முயற்சியை முதலிற் செய்தவர்.

இதாலி தேசத்திற் பிறந்து, தமது முப்பது வயது வரையிலும் தமிழ் என்னவென்றே தெரியாதவராக இருந்து, பிறகு தமிழ்நாட்டுக்கு வந்து, கிறிஸ்துவ மதப் பிரசாரத்திற்காகத் தமிழைக் கற்றுக்கொள்ள நேர்ந்து, தமிழின் இனிமையும் தமிழிலக்கியங்களின் பெருமையையும் கண்டு, தமிழுக்குப் பணிபுரிவதே தவமாகக் கொண்டு, தமிழின் சிறப்பை வெளிநாடுகளில் பரவச் செய்வதற்கு அவர் செய்துள்ள திருத்தொண்டு தமிழ்த் தாய் பெருமை கொள்ளத் தக்கதுதான். ஆனால், தமிழ் நாட்டில் பிறந்து தமிழில் வளர்ந்த தமிழர் யாரும் இதைச் செய்யவில்லையே என்பது வெட்கப்பட வேண்டிய காரியம்தான். தாமரை மலரின்மேல் உட்கார்ந்திருந்த தவளை அந்த மலரிலுள்ள தேனை அருந்தி அனுபவிக்கத் தெரியாதிருக்க, எங்கிருந்தோ வந்த வண்டு அந்தத் தேனை நாடித் தேடித் துருவித் துளைத்து உண்டு மகிழ்வதைப் போலத்தான் இது.

போனது போகட்டும். சூழ்நிலைகளின் காரணமாக நமது முன்னோர்கள் தமிழைப் புறக்கணித்து விட்டதைப் பற்றிப் புலம்புவதை நிறுத்திக் கொண்டு இனிமேல்

**சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வோம்,**

இறந்த காலம் மறைந்துவிட்டது. நிகழ்காலமும் எதிர்காலமும் இருக்கின்றன. அத்துடன் இறந்த காலம்,

நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலமும் சேர்ந்த 'என்றுமுள தென்றமிழ்' நம்முடன் இருக்கிறது. புது வீறுகொண்டு தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்து, தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம். தமிழுக்கு மறுமலர்ச்சி காலம் வந்திருக்கிறது. அந்த வாய்ப்புகளை நழுவவிடாமல் தமிழ் மொழியைத் தழைக்கச் செய்து, தமிழ்ப் பண்புகளைப் பரவச் செய்து, அந்த பண்புகளின் சிகரங்களாகிய சீவகாருணிய ஒழுக்கத்யையும் பக்தி நெறியையும் பாது காத்து, தமிழ் சமுதாயம் உலக சமாதானத்துக்கு உற்ற துணையாக நின்று நிலவச் செய்வோம்.

சுப்ரமணிய பாரதியார் தமிழ் மொழியின் பெருமையை மறந்திருக்கும் தமிழர்களை நோக்கி,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்.

என்றும், தமிழ் இலக்கியங்களின் பெருமையை மறந்திருந்ததற்காக.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை ; வெறும் புகழ்ச்சி இல்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்.

என்றும் கடிந்து பாடினார். பாடல்களில் இப்படி இடித்துரைத்த பாரதியார் தமது வசன நூலில், தமிழனுடைய

பெருமைகளை நினைப்பூட்டி அவனைத் தட்டிக் கொடுத்து தைரியம் சொல்லுவதைப் பாருங்கள்:

“தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே உனக்கு நல்ல காலம் வருகின்றது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங் கண்ட கவிகள், அற்புதமான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல மணிகள் தோன்றியிருக்கிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துக் கொண்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார். நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம் கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

தமிழா பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ‘ஜாதி இரண்டொழிய வேறில்லை’ என்ற பழந்தமிழ் வாக்யத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமையென்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை ‘வாழ்க்கைத் துணை’ என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப்

பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள்போல் நடந்து கொள்ளாதே........"

'தமிழா, தெய்வத்தை நம்பு; பயப்படாதே; உனக்கு நல்லகாலம் வருகின்றது."

என்று பாரதியார் சொன்ன நல்லகாலம் இப்போது வந்து கொண்டிருக்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தயார் செய்து கொள்வோம். அதற்காகத் தமிழ் மொழிக்குள்ள தனிச் சிறப்பை நினைப்பூட்டிக் கொண்டால் தமிழ் மொழியில் நமக்கு இருக்க வேண்டிய பற்று பலம் பெறும்.

நிதானமாக ஆராய்ந்து நினைத்துப் பார்த்தால் தமிழில் நல்ல இலக்கியங்களும் இலக்கணங்களும் உருவான காலங்களில் தமிழ்நாட்டில் வலிமையுள்ள அரசர்கள் நீதியான முறையில் அமைதிமிக்க அரசு நடத்திவந்திருப்பதாகத் தெரிகிறது. மொழியும் கல்வியும் கலைகளும் வளர்ச்சி யடைவதற்கு அமைதியுள்ள—அதாவது சமாதான வாழ்க்கையுள்ள சமுதாயம் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சமுதாயம் அமைவதற்கு நெறிமுறைகளைப் பாதுகாக்கும் அரசாங்கம் நீடித்து ஆட்சியில் இருக்க வேண்டும். போர்களாலும் புரட்சிகளாலும் அடிக்கடி மாறுகின்ற அரசின் கீழ் அமைதியும் இருக்க முடியாது ; இலக்கியங்களையும் எண்ணவோ எழுதவோ முடியாது. தமிழ் மொழியை வளர்த்த தமிழ்ச் சங்கங்களில் பல நல்ல இலக்கியங்கள் அரங்கேற்றப்பட்டதாக, அங்குமிங்குமாக இப்போது நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளால் அனுமானிக்கவாவது முடிகின்றது.

உதாரணமாக 'இறையனார் அகப்பொருள்' என்ற நூலுக்குள்ள உரையில் 'தலைச் சங்கம்', இடைச் சங்கம்', கடைச்சங்கம்' என்ற புலவர்களின் சபைகளைப் பற்றிச் சொல்லப் படுகிறது. 'தலைச் சங்கத்தைக்' காய்சினவழுதி என்ற பெயருடைய பாண்டிய மன்னன் முதலாக 'கடுங்கோன்' என்ற பாண்டிய மன்னன் ஈருக 89 பாண்டிய அரசர்கள் வாழையடி வாழையாக ஆதரித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்படி 89 பாண்டியர்களின் தலைமுறைகளிலும் இந்த தலைச் சங்கம் நடந்துவந்த ஆயுட்காலம் 4440 ஆண்டுகள் என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் தலைச் சங்கத்தில் தமது புலமையை அரங்கேற்றிப் புகழ் பெற்ற புலவர்கள் 4449 பேர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. இந்தக் கணக்குகளில் சரித்திர உண்மை எவ்வளவு இருக்கிற தென்று எவராலும் சொல்ல முடியாது. சரித்திர உண்மை சிறிதும் இல்லையென்றும் சொல்லிவிட முடியாது. புள்ளிகள் மிகைப்படுத்தப் பட்டனவாக இருந்தாலும் அமைதியுள்ள அரசு நடத்திய பல அரசர்கள் தொடர்ச்சியாக ஆதரித்து வந்ததால்தான் அந்தச் சங்கம் அவ்வளவு சிறப்படைந்திருக்க முடிந்தது என்பதையேனும் எளிதில் ஏற்றுக் கொள்ளலாம்.

இந்த தலைச் சங்கத்தை ஆதரித்தது போலவே இடைச் சங்கத்தையும் ஐம்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள் தொடர்ச்சியாக ஆதரித்ததாகச் சொல்லப் படுகிறது. இடைச்சங்கம் மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகள் நடந்து கொண்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு ஒரு புலவர் இச்சங்கத்தில் தமது காவியத்தை அரங்கேற்றி வரிசை பெற்றாரோ என்று எண்

ணும்படி இந்த இடைச் சங்கத்தில் தமது இலக்கியத்தை அரங்கேற்றிய புலவர்களின் எண்ணிக்கையும் மூவா யிரத்து எழுநூருகவே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கைகளும் மிகையாக இருக்கலாம்.

இனி, 'கடைச்சங்கம்' என்ற மூன்ருவது சங்கத்தை 49 பாண்டியர்கள் தொடர்ச்சியாக நடத்தி வந்தார்கள் என்றும் அச்சங்கத்தில் தமது நூல்களை அரங்கேற்றிய புலவர்கள் 449 பேர்கள் என்றும் அந்தச் சங்கம் 1850 ஆண்டுகள் நடந்துவந்தது என்றும் சொல்லப்படுகிறது. இந்தக் கணக்குகளும் மிகையாக இருக்கலாம்.

ஆனுல், அமைதிமிக்க ஆட்சி நடத்திய பல பாண்டிய மன்னர்கள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து ஆதரித்ததால்தான் அந்தச் சங்கங்கள் நீண்டகாலம் நிலைத்திருந்து மொழி வளர்ச்சிக்குப் பாடுபட முடிந்தது என்பது மிகையாது.

இதில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்ருல், ஒரு நாட்டின் மொழியும் கல்வியும் கலைகளும் வளர்ச்சியடைய வேண்டுமானுல், அந்த நாட்டில் சமாதானம் நிலவும்படி காவல் புரியக்கூடிய திடமான வல்லரசு இருக்கவேண்டும்; அத்துடன் அந்த மொழிக்கும் கல்விக்கும் கலைகளுக்கும் இடையருத ஆதரவு தரக்கூடிய அரசாங்கமாகவும் அது அமைய வேண்டும் என்பதே. பாண்டிய மன்னர்கள் தமிழ் வளர்ச்சிக்கு இடையருத ஆதரவளித்தார்கள் என்பது மட்டுமின்றி அவர்களிற் பலர் தாமே புலவர்களாக அந்த சங்கங்களின் அங்கத்தினர்களாகவும் இருந்திருக்கிருர்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

பாண்டிய மன்னர்களின் தாய்மொழி தமிழாக இருந்தது. அவர்களுடைய ஆட்சி முழுதும் தமிழில் நடந்தது. அதனுல் அவர்கள் தமிழ்மொழி வளர்ச்சியில் அக்கறைகொள்ளும் ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்கள்.

சங்கத்தில் அரங்கேறிய நூல்கள் எண்ணிறந்தன வென்று எண்ணச் செய்கிறது. அவைகள் நமக்குக் கிடைக்காமற் போயின. என்ருலும், திருக்குறளும் சிலப் பதிகாரமும், மணிமேகலேயும், சிந்தாமணியும் சங்கம் வளர்த்த தமிழின் பயன்களே.

இவைகளுக்குப் பின் இப்படிப்பட்ட இலக்கியங்கள் தோன்றவில்லே யென்ருலும் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய தெய்வ பக்திப்பாட்டுகள் தோன்றித் தமிழை செழிக்கச் செய்தன. அப்போது சமயப் பிணக்குகள் இருந்தன தென்ருலும், தமிழ் நாட்டு மன்னர்கள் தெய்வ நம்பிக்கையிலும் சமய நெறிகளிலும் பற்றுடையவர்களாக இருந்ததால் தெய்வீகப் பாடல்கள் மலிந்த பெருமை தமிழுக்குக் கிடைத்தது. மதவேற்றுமை களேப் பொருட்படுத்தாமல் தெய்வ பக்தியை மட்டும் மனதிற்கொண்டு பார்த்தால், இப்படி உள்ளத்தை உருக் கக் கூடிய பக்திப் பாடல்கள் உலகிலுள்ள வேறு எந்த மொழியிலும் இவ்வளவு இல்லேயென்பது தெரியவரும்.

இந்த பக்திப் பாடல்களுக்குப் பின், சங்க நூல்களி லுள்ள வீரம், காதல் முதலிட பண்புகளும், திருக்குறளி லுள்ள அறம், பொருள் இன்பங்களும், சிலப்பதிகாரத்தி லுள்ள பாடல், ஆடல், பக்க மேளங்கள் முதலிய கலேகளும், அந்த இலக்கியத்தின் ஜீவனுகிய கற்புத் தெய்வத்தின் சக்தியும், மணிமேகலேயிலுள்ள துறவு, தவம்

முதலியவற்றின் பெருமையும், சீவகசிந்தாமணியிலுள்ள கற்பனையும் ஆகிய இவைகள் அனைத்தையும் வடித்தெடுத்துத் தனக்கேசொந்தமான சுவைகளையும் சேர்த்துக் கம்பன் பாடிய அற்புதக் காவியம் தோன்றியது. அப்போது சோழநாட்டில் அமைதி மிக்க நல்லரசு நடந்து வந்தது. பாண்டியர்கள் செய்ததுபோல சங்கம் நடத்தித் தமிழை வளர்க்கவில்லையென்றாலும் தமிழ்ப் புலவர்களுக்கு அரசனுடைய ஆதரவு இருந்துவந்தது.

கம்பர் காலத்துக்குப்பின் தமிழ் நாட்டில் அமைதியின்மை ஆட்சிகொண்டது. அரசர்களுக்குள் பொறாமையும் பூசலும் போர்களும் அடிக்கடி தோன்றலாயின. அரசாட்சி ஓரே அரசன்கீழ் நீடித்து நிலைகொள்ள முடியவில்லை. அதனால் அப்போதிருந்த அரசர்கள் மொழி வளர்ச்சியைப்பற்றி நினைக்கவும் நேரமில்லாமற் போய்விட்டது. கம்பருக்குப் பின் சுப்ரமண்ய பாரதியார் காலம் வரையில் வெளி நாட்டார் வணங்கத்தகுந்த இலக்கியங்கள் தமிழில் இல்லாதுபோனதற்குக் காரணம் நாட்டில் அமைதியில்லாதிருந்ததே. அவ்வளவு குழப்பங்களுக்கிடையிலும் தமிழ்ப் புலமை சிதைந்து ஒழிந்துவிடவில்லை. மறைவாகவேனும் அங்கங்கே இருந்துகொண்டுதான் இருந்தது. புலவர்கள் அரசர்களின் ஆதரவை அடைய முடியாதவர்களாகிவிட்டாலும் அவர்களைச் சிற்றரசர்களும் பாளையக்காரர்களும் செல்வவான்களும் ஆதரித்து வந்தார்கள். ஆனல், அப்படிப் புலவர்களை ஆதரித்த செல்வவான்களிற் பெரும்பாலும் தோத்திரப் பிரியர்களாகவே இருந்தார்கள். அதனல்தான் அக்காலத்துப் புலவர்கள் பலரும் தம்மை ஆதரிக்கும் செல்வர்கள் மீது பிரபந்தங்கள் பாடுவதில் ஈடுபடவேண்டியிருந்தது.

வயிற்றுப் பிழைப்புக்காக இந்தப் புலவர்கள் மனிதர்களைப் புகழ்ந்து பாடவேண்டியவர்களாக இருக்க நேர்ந்து விட்டாலும், அவர்களிற் பலர் மிகச் சிறந்த கல்வியும் கவித் திறமையும் உள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்தப் புலவர்கள் காலங்களில் அரசர்களுக்குள் குழப்பங்கள் இருந்தாலும் ஆட்சிமொழி தமிழாகவும் ஆதரித்த புரவலர்கள் தமிழர்களாகவும் இருந்ததனால்தான் இவர்கள் இந்தப் பிரபந்தங்களையாவது பாட முடிந்தது.

இதற்குப் பின்னுள்ள காலத்தில் தமிழ்நாட்டின் அரசாட்சி, மகமதியர்களிடத்தும், மராட்டியரிடத்தும், தெலுங்கர்களிடத்தும், பிரஞ்சுக்காரர்களிடத்தும், ஆங்கிலேயர்களிடத்தும் மாறி மாறி சிக்கிக்கொண்டதால், தமிழ் தன்னுடைய ஆட்சிபீடத்தை இழந்துவிட்டது. கடைசி ஆங்கிலேய ஆட்சி வேரூன்றியபின், ஆங்கிலமே நாட்டின் இன்றியமையாத மொழிபோல் ஆகிவிட்டது. ஆங்கிலேய அரசாங்கம் தமிழுக்குத் தீங்கு செய்யும் நோக்கத்துடன் எதையும் செய்துவிடவில்லை. என்றாலும் ஆட்சிமொழி ஆங்கிலம் ஆகிவிட்டதால், அரசாங்க அலுவல்களுக்கு ஆங்கிலம் படித்தவர்களே உத்தியோகஸ்தர்களாக இருக்கவேண்டிய அகத்தியம் ஏற்பட்டது. அந்த உத்தியோகங்களுக்குத் தகுதியுள்ளவர்களை உண்டாக்கவென்றே கல்லூரிகளின் கல்வித் திட்டமும் உருவாக்கப்பட்டது. அதனால் ஆங்கிலமே பள்ளிக்கூடங்களில் முதலிடம் பெற்றது. தமிழும் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டதென்றாலும், தமிழ் மற்றப் பாடங்களோடு ஒட்டாமல் தனித்திருக்க வேண்டியதாகி விட்டது. மேலும் தமிழ்ப் பாடங்களில் மாணவர்கள் வாங்கும் 'மார்க்கு'கள் தேர்வுகளில் மதிக்கப்படுவதில்லை. தமிழில் எவ்வளவு அதிகமான மார்க்கு

கள் வாங்கியிருந்தாலும் ஆங்கிலத்தில் குறைவான மார்க்குகள் பெற்ற மாணவனுக்குத் தேர்வு கிடைக்காது. ஆங்கில மொழியிலும் அம்மொழியில் கற்பிக்கப்படும் சரித்திரம், பூகோளம், கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்களிலும் போதிய மார்க்குகள் வாங்கினால்தான் உத்தியோகங்களுக்குத் தகுதியான பட்டம் பெறமுடியும். அதனால் பள்ளிக்கூடங்களில் தமிழ் வகுப்புக்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் மாணவர்கள் சட்டை செய்வதில்லை. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தமிழ்ப் பண்டிதர் மாணவர்களுக்கு ஒரு ஏளனப் பொருளாகத்தான் இருப்பார். அவருக்குக் கிடைக்கும் சம்பளமும் மற்ற ஆசிரியர்களுக்குக் கிடைப்பதைவிட மிகமிகக் குறைவாகத்தான் இருக்கும்.

இன்றளவும் அந்த நிலைதான் இருந்து வருகிறது. பல்கலைக் கழகங்களில் 'தமிழ் ஆராய்ச்சித் துறை' என்று சில தமிழறிஞர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் ஆங்கிலத்திலும் உயர்ந்த பட்டங்கள் பெற்றவர்களாக இருக்க வேண்டும். தனித் தமிழ் மட்டும் கற்றவர்கள் அதற்குத் தகுதியாக மாட்டார்கள். இதற்கெல்லாம் ஒரே காரணம் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்ததுதான்.

தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்றும், தமிழரசு நடக்க வேண்டுமென்றும், தமிழ்மக்கள் பல ஆண்டுகளாக இடைவிடாது செய்துவந்த கிளர்ச்சியை அறிந்து நம்முடைய மாகாண அரசாங்கம் தமிழை ஆட்சி மொழியாக்கத் தீர்மானித்து அதற்கான சட்டத்தையும் செய்துவிட்டார்கள்.

அதனால்,

'தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது'

என்று பாரதி சொன்ன நல்ல காலம் இப்போது உதயமாகப் போகிறது. ஆம் அந்த நல்லகாலம் உதயமாகப் போகிறதற்கு அறிகுறியாக மெள்ள, மெள்ள கிழக்கு வெளுக்கிறது. இதுவரையிலும் தமிழன்னையின் அழகைக் கண்டு மகிழ முடியாதபடி நம்மைச் சூழ்ந்திருந்த இருள் விரைவில் விலகிவிடும். நல்ல வெளிச்சத்தில் தமிழ்த் தாயின் அருமை பெருமைகளைக் கண்டறிந்து, அவளுக்கு இணையான அழகும் அன்பும் உள்ளவர்கள் யாரும் இல்லை என்பதை அறிய, பாரதியார் 'கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய் நின்று பார்' என்று சொன்னபடி நான்கு பக்கங்களிலும் பார்ப்போம். பிறகு நமது அன்னையின் சாயல் நம்மிடத்தில் இருப்பதையும் ஒரு நிலைக்கண்ணாடி முன் நின்று பார்ப்போம். அப்படிப் பார்த்தால் நம் தாயின் மீது பற்றுக் கொள்வோம். அதன் பின்னும் முன்போல் அவளை நாம் மறந்திருக்க முடியாது. அவள் நெடுநாளைக்கு முன் இழந்துவிட்ட அரியணையில் அவளை அமரச் செய்து அவளுடைய நாட்டை அவளே ஆட்சிபுரிவதற்கான பணிகள் அனைத்தையும் மேற்கொள்வோம். அதனால் இனிமேல்தான் தமிழ் மக்களும் தமிழன்பர்களும் தமிழ் மொழிக்குப் புரியவேண்டிய பணி அதிகம் இருக்கின்றன.

# தமிழ்ப் பற்று

"தமிழ் ஆட்சி மொழியாகும்'' என்ற சட்டத்தைச் சரியானபடி அமுல் நடத்தித் 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யவும்' 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யவும்' 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல்' செய்யவும் தமிழ் மக்களுக்குத் தமிழின் மீது ஆழ்ந்த பற்று உண்டாகச் செய்ய வேண்டும்.

'மொழிப்பற்று இருக்கக்கூடாது' என்று சிலர் வெளிப்படையாகவும், வேறு சிலர் மறை முகமாகவும் சொல்லுகிறார்கள். அதெப்படி? பற்றில்லாமல் எந்தக் காரியத்தைச் சாதிக்க முடியும்? உலக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மனிதன் பற்றுக்கொண்டு செயல் புரிவதனுல் தானே உலகியல் நடந்து வருகிறது? பற்றில்லாமல் குடித்தனம் எப்படி நடக்கும்? கணவன் மீது மனைவிக்கும், மனைவி மீது கணவனுக்கும் பற்றில் லாமல் எப்படி ஒருவர் நலத்துக்கு மற்றவர் உதவ முடியும்? குழந்தை மீது பற்றில்லாவிடில் அது எப்படி வளரும்? உற்றார் உறவினர் மீது பற்றில்லாவிடில் சமுதாயம் எப்படி நடக்கும்? படிக்கும் பாடத்தின் மீது

பற்றில்லாத மாணவ மாணவிகள் கல்வி கற்பது எப்படி? நாம் நட்டு வைத்த ஒரு செடியானாலும் அதன் மீதுபற்றில் லாமல் அது எப்படிச் செழிக்கும்? நாம் வளர்க்கும் ஆடு, மாடு, குதிரை, நாய், கோழி, கிளி, முயல் மான் முதலிய எதுவானாலும் அவை நம்முடையன என்று ஓரளவேனும் பற்று வைக்காமல் எப்படி வளர்க்க முடியும்? கொன்று தின்பதற்கென்றே பிராணிகளை வளர்க்கிறவனும் கூட, அவற்றைக்கொல்லுகிற வரைக்கும் எவ்வளவு பற்று அவற்றின் மீது வைத்துப் பாதுகாக்கிறான்! உயிரற்ற கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்ட வீடும்கூட நம்முடை யது என்ற பற்றுள்ளவர்கள் இல்லாவிட்டால் பாழடைந்து பழுதாகி இடிந்து விழுந்து விடுமே! பலபேர் கூடுகின்ற ஒரு சபைக்குப் போய் அங்கே வாசலில் விட்டுப்போன நம்முடைய செருப்பு, கூட்டத்துக்கு வந்த மற்றவர்கள் செருப்புகளோடு கண்டுபிடிக்க முடியாமல் கலந்து போகிறது. அந்தச்செருப்பையும் கூட நம்முடைய செருப்பு என்ற பற்றுவைத்துத்தான் தேடவேண்டியிருக்கிறது. 'நம்முடைய செருப்பு' என்ற பற்றுதலை விட்டுவிட்டு அங்கே கிடக்கிற வேறு செருப்புகளை மறந்துபோய்க் காலில் மாட்டிக்கொண்டாலும் அவை நம்முடைய கால் களுக்குப் பற்றுவதில்லை. அல்லது பெரியனவாக நழுவு கின்றன. அல்லது நடக்க முடியாமல் உறுத்துகின்றது. இப்படி எவ்வளவோ உதாரணங்கள் சொல்லலாம்.

அதனால் பற்றில்லாமல் வாழ முடியாது. 'பற்று' என்பதற்குக் கெட்ட ஆசை என்பது பொருளல்ல. பற்று என்பதற்கு இங்கே நாம் கருதும் பொருள் நியாயமான உறவு' அல்லது 'உரிமையான உறவு' என்பதுதான். உலகிலுள்ள உயிர்கள் மட்டுமல்ல; கல்லும் மண்ணும்

மரமும்கூட இந்தப் 'பற்று' என்ற பாசத்தால்தான் உருக் குலையாமல் உருப்படியாக இருக்கின்றன. அணுவும் அணுவும் பற்றிக்கொண்டிருப்பதுதான் உருவம். அந்த அணுக்களின் பற்றுகளைப் பிளந்து உருவைக் குலைப்பது தான் அணுகுண்டு செய்யும் நாசம். வாழ்க்கையில் இருக்க வேண்டிய நியாயமான பற்றுகளை நீக்கினால் வாழ்க்கை நாசம்தான். அதன் பிறகு சமூகம் இல்லை; சமுதாயம் இல்லை; நாடில்லை; அரசாங்கம் இல்லை.

நாம் இங்கே பேசுவது பற்றற்று வீடுபெற முயலும் துறவியைப் பற்றியல்ல. அல்லது பற்றற்று கர்மயோகம் செய்ய முயலும் தத்துவத்தைப் பற்றியும் அல்ல. மேற் சொன்ன முயற்சிகளில் உண்மையாகவே ஈடுபடக்கூடிய வெகு சிலரை விட்டுவிட்டுத் தினசரி வாழ்க்கை நடத்தும் பெருமக்களையும் அவர்கள் செய்யவேண்டிய காரியங் களில் ஒன்றான இலக்கிய வளர்ச்சியைப் பற்றியும்தான் நாம் சிந்திக்கவேண்டும்.

பொன்னையும், மண்ணையும், இன்பத்தையும் துன் பத்தையும், நன்மையையும் தீமையையும், சுகத்தையும் துக்கத்தையும், பகலையும் இரவையும், நண்பர்களையும் பகை வனையும் சமனாகக் கருத முயலும் துறவிகள் பற்றற்று வாழ்வதைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமுண்டு. அவர்கள் உலக ஆசைகளில் பற்றுக் கொள்ளாமல் உலக இயல் புக்குப் புறம்பாக இருக்க முயல்கின்றவர்கள். அவர்கள் உலக வாழ்க்கையிலுள்ள மண், பெண், பொன் என்ற மூன்றிலும் பற்றில்லாமல் இருக்கவேண்டும் என்று சொன்னாலும் அவர்களும் அவர்கள் விரும்புகிற 'பிறப் பறுத்தல்' என்பதிலேனும் பற்றுடையவர்களே. அந்தப் பற்று என்னவென்றால் உலக ஆசைகளில் பற்றில்லாம

விருக்கக் கடவுளிடத்தில் ஆசைவைத்து அவரைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதே.

> பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றை
> பற்றுக பற்று விடற்கு

என்பது, 'துறவு' என்பதன் நோக்கத்தைச் சொல்லுகின்ற குறள். இதன் பொருள்; (பிறப்பறுக்க வேண்டுமாளுல்) பற்றற்றவனுகிய பகவானுடைய உறவைப் பற்றிக் கொள்ள வேண்டும். அந்தப் பற்றினை விடாது பற்றிக் கொண்டே யிருக்கவேண்டும். அப்போதுதான் உலக ஆசைகளில் பற்று விடும்—என்பது. பற்றற்றவனுகிய பகவானிடத்தில் இடைவிடாத பற்று வைத்தால்தான் உலக ஆசைகள் விட்டொழியும் என்பது. இதனுல் பற்றில்லாதவன் கடவுள் ஒருவனே என்பதும் மனிதன் என்னதான் முயன்ருலும் முத்தியடைகிற வரையிலும் பற்றுடையவனுகத்தான் இருக்க முடியும் என்பதும் தெளிவாகின்றன.

துறவிக்கே அவனுடைய துறவு பயனளிக்க ஒரு பற்றுதல் வேண்டுமென்ருல் மற்றவர்கள் பற்றில்லாமல் எதைச் செய்து முடிக்கக் கூடும்? இங்கே பேசப்படுவது, பிறப்பறுக்க வென்று அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் உண்மையான துறவியைப்பற்றித்தான். இந்தத் துறவி உலகப்பற்றுகளிலிருந்து விடுபடவென்றே இல்வாழ்க்கையைத் துறந்தவன். இவனுக்கும் ஒரு பற்று இருக்கவேண்டியது அவசியமென்ருல் பணத்தாசை, பெண்ணுசை, பதவியாசை, மண்ணுசை முதலிய எண்ணிறந்த பற்றுகளில் ஒரு பற்றைக்கூட விடாதவர்கள் மொழிப் பற்றை விட்டுவிட வேண்டும் என்பது விசித்திரந்தான்.

எந்த மொழிக்காரர்களாக இருந்தாலும் அவரவர் களுடைய தாய்மொழிதான் அவரவர்களுடைய அறிவைப் பெருக்கிக்கொள்ள உதவும். தம்முடைய மொழியில் இல்லாத பிறமொழி அறிவைக் கற்றுக்கொள்ள உதவு வதும் தாய்மொழிதான். தாய்மொழியின் உதவியைக் கொண்டு பிற மொழியைக்கற்றுக் கொண்டவன் அந்தப் பிற மொழியில் தான் கண்ட நல்லறிவைத் தன் இனத் தாருக்கு எடுத்துச் சொல்லவும் தாய்மொழிதான் வேண் டும். தமிழாகிய தாய்மொழியின் உதவியினுல் ஆங்கிலத் தில் புலமைபெற்றஒருவன் தன்னைப் போலவே ஆங்கிலத் தில் அறியாத பாமர மக்களை மதிப்பதில்லை. பாமரமக்களை மட்டுமா? ஆங்கிலம் தெரியாத பண்டிதர்களையும் மதிப்ப தில்லை. தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்கள் என்னவென்றே அறியாமலும் கூட, வீட்டிலும் வெளி யிலும் இளமையில் பேசிக் கற்றுக்கொண்ட தமிழ்ச் சொற்களைக் கொண்டே ஆங்கிலத்தைக் கற்று அம்மொழி யிலுள்ள இலக்கியங்களைப் பார்த்துவிட்டுத் 'தமிழில் என்ன இருக்கிறது' என்று கேட்கிருர்கள். ஒரு விருந் துக்குப் பின், கற்றறிந்த சில நண்பர்கள் சல்லாபித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஆங்கிலப் புலமை மிக்க ஒரு தமிழர் பேச்சோடு பேச்சாக,

"தமிழ் எதுக்கு உதவும்" என்ருர்.

அவர் உயர்ந்த சம்பளம் வாங்கும் ஒரு'எஞ்சினியர்'. அருகில் இருந்த ஒரு தமிழ்ப்பண்டிதர் மிக்க வருத்தத் துடன் "அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்! தமிழ் எதுக்கு உதவாது?" என்ருர்.

"ஓ! தமிழ்ப்பண்டிதருக்குக் கோபம்வந்துவிட்டதா? மன்னிக்கவேண்டும். தமிழில் இந்தக் காலத்துக்கு

வேண்டிய அறிவு என்ன இருக்கிறது?" என்றார் 'எஞ்சினியர்.'

" இந்தக் காலத்துக்கு மட்டுமல்ல; எந்தக் காலத் துக்கும் வேண்டிய அறிவுகளும் தமிழில் நிரம்ப இருக்கின்றன. என்ன இல்லை?" என்றார் பண்டிதர்.

" தமிழில் " எஞ்சினியரிங் " அறிவு இருக்கிறதா? மருத்துவக் கல்விக்கு வேண்டிய அறிவு இருக்கிறதா? ரஸாயன' அறிவு இருக்கிறதா? மற்ற பௌதிக விஞ்ஞான நூல்கள் இருக்கின்றன? தமிழைப் படித்துவிட்டு ஆகாயக் கப்பல் கட்டிவிட முடியுமா? மோட்டார் வண்டிகளைச் செய்துவிட முடியுமா? அணுசக்தியை அறிந்துகொள்ள முடியுமா? பல தொழில்களுக்கும் வேண்டியிருக்கிற மின்சாரத்தைப்பற்றித்தெரிந்துகொள்ள முடியுமா?—" என்று இன்னும் பல நவீன சாதனங்களை அடுக்கிக்கொண்டே போய்க் கடைசியில் " சும்மா தமிழ் தமிழ் என்று பெருமை யடித்துக்கொள்வதில் என்ன பயன்?" என்றார்.

பண்டிதர் அதற்குப் பதில் சொல்ல முடியாமல் திகைப்பார் என்றுதான் மற்றவர்கள் அவர் பக்கம் திரும்பி ஞர்கள். பண்டிதர் வெகு நிதானமாக.

" கருணை கூர்ந்து பொறுமையுடன் கேட்பதானல் விடை சொல்லுகிறேன் " என்றார்.

" சொல்லுங்கள், சொல்லுங்கள் " என்று மற்ற வர்கள் துடித்தார்கள். ஆனல் ' எஞ்சினியர் ' மட்டும்,

" விடை சொல்ல என்ன இருக்கிறது? இதெல்லாம் தமிழில் இல்லையென்பதை ஒத்துக்கொள்வதை விட வேறென்ன விடை இருக்கிறது." என்று வெற்றிக் குரலில் சொல்லிச் சிரித்தார். பண்டிதர் பேசாமல் இருந்

தார். மற்றவர்கள் 'எஞ்சினியரைப்' பார்த்து "நீங்கள் கொஞ்சம் சும்மா இருங்களேன். பண்டிதர் சொல்லட்டும்" என்று பண்டிதரைப் பார்த்தார்கள். பண்டிதர் அதன் பிறகும் சும்மா இருந்தார். அதைக்கண்ட 'எஞ்சினியர்' பண்டிதரைப் பார்த்து,

"சொல்லுங்கள். நான் பொறுமையுடன் கேட்கிறேன். நான் என் மனதிலுள்ளதை அழுத்தமாகச் சொன்னதற்கு வருத்தப்படக் கூடாது" என்ருர்.

அதன் பிறகு பண்டிதர் எஞ்சினியரைப் பார்த்துப் புன்சிரிப்போடு சொல்லலானுர்: "தாங்கள் கடைசியாகச் சொன்ன விஞ்ஞானக் கருவிகளைப்பற்றிய நூல்கள் தமிழில் இல்லை. உண்மைதான். ஆனல், இந்த விஞ்ஞானக் கருவிகளெல்லாம் கடந்த நூறு ஆண்டுகளுக்குள் கண்டு பிடிக்கப்பட்டவை. கடந்த இரு நூறு ஆண்டுகளாக ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்து உயர்தரக் கல்விகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே கற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தபடியால் அந்த விஞ்ஞான அறிவுகளின் நூல்களெல்லாம் ஆங்கிலத்திலேயே உருவாயின. தங்களைப் போன்ற அறிஞர்களும் அந்த விஞ்ஞான நூல்கள் தமிழில் இருக்கவேண்டுமே என்று நினைக்கவும் உரிமையற்றவர்களாக இருந்துவிட்டார்கள். அதனுல் அப்படிப்பட்ட நூல்கள் தமிழில் இல்லாமற்போனது தமிழ் மொழியின் தப்பிதமல்ல. தமிழராகப் பிறந்தும் தமிழில் அந்த நூல்களை இயற்ற முடியாமலிருந்துவிட்டது நம்முடைய குற்றம். ஆங்கிலம் கற்ற தமிழர்கள் அந்த நூல்களைத் தமிழில் உண்டாக்கியிருக்கலாம். ஆனல் ஆங்கிலப்படிப்புதான் அரசாங்கத்தில் பெரிய சம்பளங்கள் பெறக்கூடிய உயர்ந்த உத்தி

யோகங்களைக் கொடுக்கும் என்ற நிலைமையினால் ஆங்கிலம் படித்தவர்கள் தமிழைப் பயனற்ற மொழியாகக் கருதிவிட்டார்கள். அதனால் விஞ்ஞான நூல்களைத் தமிழில் இயற்றவேண்டுமென்ற எண்ணமே இல்லாதவர்களாகி விட்டார்கள். எண்ணியிருந்தால் ஆங்கிலம் படித்த தமிழர்கள் அதைச் செய்திருக்கமுடியும். ஆங்கிலத்திலுள்ள நுண்கலை அறிவுகளெல்லாம் இப்போது தமிழிலும் இருக்கும். ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞான அறிவுகளும் அவற்றால் உண்டான கருவிகளும் எல்லாம் ஆங்கிலேயர்களே கண்டு பிடித்தவை அல்ல. வேறு பல ஐரோப்பிய மொழிகளிலும் இருந்த விஞ்ஞான அறிவுகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொண்டுதான் ஆங்கிலேயர்கள் தங்களுடைய தாய்மொழியை வளமுள்ளதாக்கிக்கொண்டார்கள். அதற்குக் காரணம், அவர்களுடைய தாய்மொழி அவர்கள் நாட்டின் ஆட்சிமொழியாக இருந்ததும் அவர்களுடைய தாய்மொழியின்மீது அவர்கள் மிகுந்த பற்றுடையவர்களாக இருந்ததும்தான். நம்முடைய நாட்டில் தாய்மொழி ஆட்சிமொழியாக இல்லாதுபோய், ஆங்கிலம் படித்த தமிழர்களுக்குத் தமிழ்மீது பற்றும் அற்றுப்போய்விட்டது. தாங்கள் தமிழில் இல்லையென்றும் ஆங்கிலத்தில் இருப்பனவென்றும் சொன்னவற்றுள் கடைசியில் சொல்லப்பட்ட ஆகாயக் கப்பல், மோட்டார் வண்டி, அணுசக்தி முதலான யாவும் தமிழ்மொழி ஆட்சி மொழியாக இல்லாதிருந்த இருநூறு ஆண்டுகளுக்குள்ளேதான் கண்டு பிடிக்கப்பட்டவை என்பதை மறந்துவிடக்கூடாது......"

"உண்மைதான் உண்மைதான்" என்று மற்றவர்கள் முனகினார்கள். எஞ்சினியர் வியந்தவர் போல் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தார்.

பண்டிதர் தொடர்ந்தார்: "விஞ்ஞான அறிவினால் செய்யப்படுகிற மேற்சொன்ன கருவிகளைப் பற்றிய அறிவு தமிழில் இல்லாததற்கு நான் சொல்லக்கூடியது அவ்வளவு தான். இனி தாங்கள் தொடக்கத்தில், "எஞ்சினியரிங்" கல்வி, 'மருத்துவக்' கல்வி, 'ரசாயனக் கல்வி' முதலியவைகளைப் போதிக்கக் கூடிய நூல்கள் தமிழில் இருக்கின்றனவா என்று கேட்டதற்கு விடை சொல்லு கிறேன்.

தாங்கள் கற்றுக்கொண்ட மாதிரி "எஞ்சினீயரிங்" கற்பிக்கும் முறையோ, பாட நூல்களோ தமிழில் இல்லை தான். அத்துடன் இக்காலத்தில் "இஞ்சினியரிங்" தொழி லுக்குப் பயன்படுகிற பொறிகளும் தமிழில் இல்லை. ஆனால், 'எஞ்சினியரிங்' என்ற சொல் எந்த அறிவைக் குறிக்கிறதோ அந்த அறிவு தமிழ் நாட்டில் எண்ணிறந்த ஆண்டுகளாக இருந்துதான் வந்திருக்கிறது. கருவிகள் தான் புதியன், அறிவு அதேதான். அந்த கருவிகளும் நாம் அன்னிய மொழிக்கு அடிமைப்பட்டபின் உண்டானவை.

"எஞ்சினியரிங்" அறிவு இல்லாமலா தமிழர்கள் ஐரோப்பிய எஞ்சினியர்கள் இன்னும் வியந்து புகழ்கின்ற வானளாவிய கோபுரங்களை அக்காலத்தில் கட்டியிருக் கிறார்கள்? வெகு சமீப காலத்தில் கட்டப்பட்ட பாலங் களும் கட்டிடங்களும் நம் கண்ணுக்கு முன்னால் இடிந்து போக, ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னால் கட்டப் பட்டவைகள் இன்னும் இருந்து வருவது "எஞ்சினியரிங்" அறிவு இல்லாமல் நடக்கக் கூடியதா? காவிரியாற்றுக்குக் கரை போட்டதும் கால்வாய்கள் வெட்டியதும் 'எஞ்சினி யரிங்' அறிவைச் சேர்ந்தவை அல்லவா?

இதைப் போலவே மருத்துவ அறிவும் (மெடிகல்) ரசாயன அறிவும் தமிழ் நாட்டில் நெடுங்காலத்துக்கு முன்னாலேயே இருந்திருக்கின்றன. ஒரு உதாரணம் சொல்லுகிறேன்: தமிழுக்கு மிகவும் விரிவான ஒரு இலக்கணத்தை முதன்முதல் உருவாக்கினவர் அகத்தியர் என்று அறியக்கிடக்கிறது. அகத்தியருக்கு முன்னும் தமிழ் மொழி சிறப்புடன் இருந்திருக்கிறதாகத்தான் தெரிகிறது. அகத்தியருக்கு முன்னாலும் தமிழுக்கு இலக்கண நூல்கள் இருந்திருக்கலாம். ஆனால், அகத்தியருக்கு முன்னால் இலக்கண நூல்கள் இருந்தனவென்பதற்கு நமக்கு ஆதாரமில்லை. தமிழுக்கு இலக்கணம் என்று முதன் முதல் நமக்குத் தட்டுப்படுவது 'அகத்தியம்' என்ற இலக்கணத்தைப்பற்றித்தான். இந்த 'அகத்தியம்' என்ற இலக்கணமும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், பின்னால் வாழ்ந்த உரையாசிரியர்கள் அகத்திய இலக்கணத்திலிருந்த சூத்திரங்களைத் தம்முடைய உரைகளுக்கு மேற்கோள்களாக அகத்திய இலக்கணத்தில் இருந்த படியே எழுதியிருப்பதால் அதைப்பற்றி அறிய முடிகின்றது. அப்படி அங்கங்கே உரையாசிரியர்கள் வெவ்வேறு துறைகளில் அகத்திய இலக்கணச் சூத்திரங்களை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்கள். அதனால் இந்த அகத்தியம் என்ற இலக்கணம் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் மிக விரிவான நூலாக இருந்திருக்க வேண்டுமென்று தீர்மானிக்க இடமிருக்கிறது. இந்த இலக்கணம் மொழியைப் பற்றியதாகமட்டும் இல்லாமல் கலைகளைப் பற்றிச் சொல்லுவதாகவும் தெரிகிறது.

இந்த அகத்தியருடைய காலம் சரித்திரத்துக்கு மட்டுமன்றி அனுமானத்துக்கும் அகப்படாததாக இருக்

கிறது. அப்படிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னு லிருந்த காலத்தில் அவர் இயற்றிய இலக்கணத்திலுள்ள ஒரு சூத்திரம் தமிழர்கள் எவ்வளவு நாகரிகமடைந்தவர் களாக இருந்திருக்கிருர்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. அந்தச் சூத்திரம்,

**வயிர ஊசியும் மயன்வினே இரும்பும்**
**செயிரறு பொன்னேச் செம்மைசெய் ஆணியும்**
**தமக்கமை கருவியும் தாமாம்; அவை போல்**
**உரைத்திறம் உணர்த்தலும் உரையது தொழிலே**

இதன் பொருள்: ஒரு வயிர ஊசியும் தொழிலாளியின் இரும்பு ஆயுதமும்தங்கத்தைஉரைத்து மாற்றறியும் உரை கல்லும் எப்படித்தாம் தேய்க்கின்ற பொருளின் தன்மை யைக் காட்டும் போதே தம்முடைய தன்மையையும் காட்டுகின்றனவோ அப்படியே ஒரு சொல் அதன் பொருளேக் குறிக்கும்போதே தன்னுடைய குணத்தையும் காட்டுவதுதான் சரியான செல்லாகும்—என்பது.

இதன் கருத்து என்னவென்ருல்: வயிரத்தைத் தேய்த்து அதற்குப் பட்டைபோட்டு ஒளியுண்டாக்க வயிரச் சாணேதான் வேண்டும். வயிர ஊசிதான் வயிரத்தை அறுக்கும். ஆனல், வயிர ஊசி, தான் பிற வயிரத்தை அறுக்கும் போதே, தான் அறுபடாத தன்மையைக் காட்டுகிறது. அதைப் போலவே ஒரு இரும்புப் பொருளே இன்ஞெரு இரும்புச் சுத்தியைக் கொண்டே உருவாக்கும் போது, அந்தச் சுத்தி தானே தன் இனத்தை உருவாக்கித்தான் உருக்குலேயாமல் இருக் கிறது. அப்போது தானே தனக்குக் கருவியாக இருந்து தன் உறுதித் தன்மையைக் காட்டுகிறது. தங்கத்தை உரைக்கிற கல்லும் தங்கத்தைத் தேய்த்துவிட்டுத் தான்

தேயாமல் இருக்கிறது. அதனால் தங்கத்தைத் தேய்க்கும் போதே தன் குணத்தையும் வெளிப்படுத்துகிறது.

இந்த உபமானங்களைப் போல தன்னுடைய ஓசையினால் ஒரு குறிப்பிட்ட பொருளின் வடிவத்தைக் காட்டும்போதே தன் வடிவத்தையும் காட்டுவதுதான் சொல்—என்பது. இது சொல்லிணக்கத்தைப் பற்றியது.

இதுதான் சூத்திரத்தின் சொற்களிலிருந்து நாம் அறியக்கூடிய பொருள். இதைத் தெளிவாக்கக் கூடிய மற்ற எல்லாச் சொல்லிலக்கணச் சூத்திரங்களும் நமக்குக் கிடைக்கவில்லை. அதனால் இதற்கு விளக்கம் அவரவர் மனோதர்மத்தின்படி பலர் பலவிதமாகச் சொல்ல இடமிருக்கிறது.

நாம் இப்போது குறிப்பிட வேண்டியது என்னவென்றால், அகத்தியர் காலத்திலேயே வயிர ஊசியும், இரும்பை உருவாக்கும் கருவிகளும், தங்கத்தின் மாற்றுக் காட்டும் உரைகல்லும் தமிழர் வாழ்க்கையில் இருந்திருக்கின்றன என்பதேயாம்.

வயிர ஊசி என்ற சொல்லிலிருந்தே பூமியிலிருந்து வயிரக் கற்களைத் தோண்டி எடுப்பதும், பின் மண்ணும் கல்லுமாக இருக்கும் வயிரக் கற்களைச் சாணையில் தேய்த்துப் பட்டை போடுவதும் அதன் பின் அந்த வயிரத்தின் பயன்களும் அந்தக் காலத்திலும் இருந்தன வென்பது தெளிவாகின்றன.

அதே போல் இரும்பைக் கொண்டு இரும்பை அடித்துத் தேய்த்து உருவாக்குவதையும், தங்கத்தை உரைத்து மாற்று அறிவதையும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறபோதே இரும்பையும் தங்கத்தையும் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கும் வேலையும், வெட்டி.

யெடுத்த மண்ணிலிருந்து அவற்றைப் பிரித்து உருப்படியாக்குவதற்குச் செய்யவேண்டிய பல தொழில் முறைகளும் அதன்பின் அவற்றை உபயோகப்படுத்துகிற பல விதங்களும் அக்காலத்திலேயே தமிழருக்குத் தெரிந்தவை தாம் என்பது தெரியவில்லையா?

அப்போதே என்ருல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே என்பதுதான். இறையனர் அகப்பொருள் உரையில் காண்கின்றபடி அகத்தியர் இருந்த காலம் ஏறத்தாழப் பனிரண்டாயிரம் (12,000) ஆண்டுகளுக்கு முன்ஞல் என்று சொல்லவேண்டியிருக்கிறது. இறையனர் அகப்பொருள் உரையைச் சரித்திரமாகக் கொள்ள முடியாது. அதஞல் 12,000 ஆண்டுகள் என்பது மிகவும் அதிகப் படுத்திச் சொல்லப்பட்டது என்ருலும், அகத்தியருடைய காலம் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று சொல்லப் போதிய ஆதாரம் இருக்கிறது.

தொல்காப்பியர் அகத்தியருக்கு வெகு காலத்துக்குப் பின் வந்தவர். தொல்காப்பியருடைய காலத்தைச் சில ஆராய்ச்சிக்காரர்கள் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும் வேறு சில ஆராய்சிக்காரர்கள் அதற்கு அதிகப்பட்டது என்றும் சொல்லுகிருர்கள். ஒரு ஆராய்ச்சிக்காரர் 9000 ஆண்டுகளுக்கு முதற்பட்டது என்று வாதிக்கிருர். இதன் உண்மை ஈசனுக்குத்தான் தெரியும்.

ஆஞலும், தொல்காப்பியம் திருக்குறளுக்கு வெகு காலத்துக்கு முற்பட்டது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. திருக்குறள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதுதான் பெரும்பாலும் ஆராய்ச்சிக்காரர்களின் தீர்ப்பு. அதஞல் தொல்காப்பியர் காலத்தை மிகவும் குறைந்தபட்சமாகக் கணித்தாலும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று சொல்லலாம்.

அதனால் அகத்தியர் காலம் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகம் முற்பட்டதாகத்தான் இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. அந்த அதிகம் என்பதை எவ்வளவு குறைவாகக் கொண்டாலும், அகத்தியருடைய காலம் கிட்டத்தட்ட ஐயாயிரம் ஆண்டுகளுக்கு அப்பாற்பட்டது என்று அனுமானிக்கலாம்.

எனவே, அகத்தியர் இலக்கணச் சூத்திரத்தினால் அறியக் கிடக்கிற தமிழர் நாகரீகம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தது என்றால் அது மிகையாகாது.

மற்றும் வைத்தியத்தைப் பற்றிய வாகட முறைகளும் ரசவாதமும் தமிழில் வெகுகாலமாக இருக்கின்றன. ரசாயனத்தைச் சேர்ந்த பல திராவகங்களையும், உப்புகளையும், சுண்ணங்களையும் அவற்றின் உபயோகங்களையும் பழந்தமிழர்கள் அறிந்தே இருந்தார்கள். அவைகளைப் பற்றிச் சொல்லும் பழைய சுவடிகள் இன்றும் அங்கங்கே இருக்கின்றன. இந்த அறிவுகளையெல்லாம் இக்காலத்துக்கு வேண்டிய நவீன முறைகளில் வளர்க்க முடியாமற் போனதற்குக்காரணம் தமிழ் ஆட்சிமொழியாக இல்லாமற் போனதுதான்.

இதுவரையிலும் சொன்ன எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமாகச் சிந்திக்கவேண்டியது ஒன்றுண்டு. தாங்கள் 'தமிழில் இந்தக் காலத்துக்கு வேண்டிய அறிவு என்ன இருக்கிறது?' என்று கேட்டீர்கள். அதற்கு விடைதான் இதுவரையிலும் சொல்லப்பட்டது. இனி எந்தக் காலத்துக்கும் வேண்டிய அறிவைப் பற்றி நினைப்பூட்டுகிறேன்.

இத்தக் காலத்து அறிவுகள் என்று கருறப்படுகிற விஞ்ஞான அறிவும் அதனால் உண்டாக்கப்படுகிற எந்திர,

தந்திர, வாகன வசதிகளும் மாறிவிடக் கூடியவை. வருங் காலத்தில் இருக்கக்கூடிய விஞ்ஞான அறிவும் அதன் எந்திர தந்திர சாதனங்களும் இப்போது உள்ளனவற்றை முற்றிலும் பயனற்றவை யாக்கிவிடலாம். அதற்குப்பின் வருங்காலத்தில் இருக்கக்கூடிய விஞ்ஞான அறிவு முன்னிருந்த அறிவைவிடப் புதுமையுள்ளதாக இருக்க லாம். இப்படியே காலம் போகப்போக விஞ்ஞானம் விருத்தியடையலாம். இன்றுள்ள மோட்டார் வண்டி களும் ஆகாய விமானங்களும் நீராவிக் கப்பல்களும் பழங் காலத்திலிருந்த கட்டைவண்டிக்கும், காற்றுடிப் பட்டங் களுக்கும், கடலில் மீன்பிடிக்கும் கட்டுமரங்களுக்கும் சமானமாகக் கருதக்கூடிய காலம் வரலாம். இன்று உலகத்தை நடுங்கச் செய்து கொண்டிருக்கிற அணு குண்டும் ஹைட்ரோஜன் குண்டும் பறக்கும் வெடி குண்டும் வெறும்பனை ஓலையாற் செய்யப்பட்ட பட்டாசு களுக்குச் சமானமாக எண்ணக்கூடிய நிலைமை எதிர் காலத்தில் ஏற்படலாம். என்னென்ன விஞ்ஞான அற்புதங்கள் எதிர்காலத்தில் ஏற்படலாம் என்பதை எவராலும் சொல்ல முடியாது.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களிலும் அடங்கியிருக்கும் ஆற்றல்களைச் சிறிதளவு அறிந்து, மனிதன் அந்த ஆற்றல்களைத் தன் எண்ணத்தின்படி ஏவிவிடத் தெரிந்துகொண்டிருப்பது 'விஞ்ஞான அறிவு' என்பது. பஞ்சபூதங்களில் அடங்கி யிருக்கும் அந்த ஆற்றல்கள் ஆராய ஆராய அதிகமாக வெளிப்படுகின்றன என்ற உண்மையை, விஞ்ஞானக் கருவிகள் நாளுக்கு நாள் புதுமைகள் மிகுந்தனவாக உண்டாவதே காட்டுகின்றது. அதனால் அந்த பூதங்களில்

அடங்கியுள்ள ஆற்றல்கள் அளவிட முடியாதனவாக இருக்கின்றன. இந்த ஐம்பூத ஆற்றல்கள் எங்கிருந்து வருகின்றன, எங்கே போய் முடிகின்றன என்று ஆராயும் போது இந்த ஐந்து பூதங்களும் ஒன்றுக்கொன்று தொடர் புடையனவாகவும் ஒன்றுக்குள் ஒன்று ஒளிந்திருப்ப தாகவும் விஞ்ஞானம் காட்டுகின்றது. இந்த உண்மை யைத் தொடர்ந்து ஆராயும்போது இந்த ஐந்து பூதங்களும் சேர்ந்து ஒளிந்துகொண்டிருக்கும் இடமாக வேருெரு பொருள் இருப்பது தட்டுப்படுகிறது. அந்த வேருெரு பொருள் இந்த பஞ்சபூதங்களுக்கும் அப்பாற்பட்டதாக அறியக்கிடக்கிறது! அந்தப் பொருள்தான் இந்த ஐந்து பூதங்களையும் ஆண்டுவரும் 'பரம்பொருள்' என்றும் 'கடவுள்' என்றும் 'தெய்வம்' என்றும் சொல்லப் படுகிறது.

ஐந்துபூதங்களையும் தன் இச்சையின்படி ஏவக்கூடிய ஆற்றல் கடவுளுக்குத்தான் உண்டு என்பதை ஒத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படியானுல் மனிதன் சிறிதளவேனும் அந்த ஐந்து பூதங்களையும் ஏவக்கூடிய ஆற்றலுள்ளவனுக இருக்கிருனே, அதெப்படி? சிந்திக்க வேண்டியதுதான். சிந்தித்துப்பார்த்தால் மனிதனிடத் திலும் அந்தக் கடவுளின் தன்மை துளியளவேனும் இருக்கத்தான் வேண்டும் என்றுதான் தீர்மானிக்கவேண் டிருக்கிறது. அதனுல்தான் மனிதன் தெய்வத்தன்மை யுள்ளவன் என்று சொல்லப்படுகிறது.

பஞ்சபூதங்களின் தன்மைகளை அறிந்துகொள்ள முயல்வது, 'விஞ்ஞானம்.' அந்த ஐந்து பூதங்களுக்கும் அதிகாரியாக அவைகளுக்கு அப்பால் இருக்கிற தெய் வத்தின் தன்மையை அறிந்துகொள்ள முயல்வது

'மெய்ஞ்ஞானம்.' விஞ்ஞானம் என்பது மெய்ஞ்ஞானத்தின் முற்பகுதிதான். ஆனால் வெறும் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்தை அறிய முடியாது. ஏன் என்றால் ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்டுள்ள மனித தேகத்திலுள்ள ஐந்து இந்திரியங்களும் அந்த ஐந்துபூத சக்திகளையும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளின் மூலமாகப் பிரத்தியட்சமாக அனுபவிக்க முடிகின்றது. ஆனால் ஐந்து பூதங்களுக்குள் அடங்காமல் அவைகளுக்கு அப்பால் இருக்கிற பரம்பொருளை மனிதனுடைய ஐந்து பூத இந்திரியங்களும் உணர முடியாது அதனால் ஐந்து பூதங்களுக்கும் அப்பாலுள்ள பரம்பொருளை ஐந்து இந்திரியங்களுக்கும் அப்பாலுள்ள ஆன்மாதான் உணர முடியும் என்பதில் ஐயமென்ன? எனவே ஆன்ம உணர்ச்சிதான் மெய்ஞ்ஞானம் என்பது.

மெய்ஞ்ஞான உணர்ச்சிதான் மனிதனுக்கு, அவனுள் இருக்கும் தெய்வத் தன்மையை நினைப்பூட்டி அவனைக் கருணைமூர்த்தியான கடவுளின் பிரதிநிதியாக வாழச் செய்வது. அன்பு, அருள், ஜீவகாருண்யம், பரோபகாரம், சாந்தம், சத்தியம், தியாகம் என்ற எல்லா நற்குணங்களுக்கும் ஆதாரம் மெய்ஞ்ஞானம்தான்.

விஞ்ஞான அறிவு எவ்வளவு அதிகப்பட்டாலும் இந்த மெய்ஞ்ஞான உணர்ச்சி இல்லாவிட்டால் மனிதன் வெறும் பூதம்தான். மனிதன் மனிதனாக வாழ்ந்து சமுதாயம் சமாதானமுள்ளதாகவும் சந்தோஷமுள்ளதாகவும் நடைபெறுவதற்கு மெய்ஞ்ஞானத்தோடு விஞ்ஞானம் வளரவேண்டும். இப்போது உலகில் விஞ்ஞானம் வளர்கின்றது. ஆனால் மெய்ஞ்ஞானம் தளர்கின்றது. விஞ்ஞானம் மனித வர்க்கத்தையே நிர்

மூலமாக்கத் துடித்துக் கொண்டிருக்கிறது. தளர்ந்த நிலையிலும் மெய்ஞ்ஞானம் அந்த அழிவைத் தடுத்துக் கொண்டிருக்கிறது.

'தமிழில் இக்காலத்துக்கு வேண்டிய அறிவு என்ன இருக்கிறது?' என்று கேட்டீர்கள். இக்காலத்துக்கு வேண்டியது என்று கருதப்படுகிற விஞ்ஞான அறிவு தமிழில் இல்லை யென்றாலும் எக்காலத்துக்கும் இன்றியமையாத மெய்ஞ்ஞான அறிவு தமிழில் நிரம்ப இருக்கின்றது'' என்று முடித்தார் பண்டிதர். (இடையிடையே பல கேள்விகளுக்கு விடை சொல்லிக்கொண்டு துண்டு துண்டாகப் பண்டிதர் சொன்னவற்றை யெல்லாம் சேர்த்துத் தொடர்ச்சியாக இங்கே தரப்பட்டிருக்கிறது).

பண்டிதர் சொன்னதை யெல்லாம் கேட்ட பின்னும் அந்த எஞ்சினீயர் ''இப்படி வேதாந்தம் பேசிப் பேசித் தான் நம்முடைய நாடு இந்தக் கதியாகிவிட்டது. வெறும் வேதாந்தம் வாழ்க்கை நடத்த உதவுமா?'' என்று மட்டும் சொல்லிவிட்டு எழுந்துவிட்டார். பேச்சு அத்துடன் முடிந்து விட்டது.

இந்த உரையாடல் ஆங்கிலப் படிப்பால் தாய் மொழியில் பற்று விட்டுப்போன ஒரு தமிழருடைய மனப்பான்மையையும், பிறமொழி ஒன்றையும் அறியாதவராய்த் தமிழ் இலக்கியங்களில் பற்றுகொண்டுள்ள ஒரு தமிழருடைய மனப்பான்மையையும் எடுத்துக் காட்டுகின்றது. பண்டிதருடைய பேச்சைப் பாராட்டாமல் அதை வெறும் வேதாந்தம் என்றுவிட்டு அப்பொறியியல் வல்லுநர் எழுந்து போய்விட்டாலும் மற்றவர்கள் பண்டிதர் சொன்னதைப் பாராட்டினார்கள். இக்காலத்துக்கு வேண்டிய விஞ்ஞான நூல்கள் ஏன் தமிழில்

இல்லாமற் போயின என்பதற்குப் பண்டிதர் சொன்ன நியாயங்கள் எவரும் மறுக்க முடியாதவை.

தமிழில் விஞ்ஞான நூல்கள் வளர வேண்டுமானாலும் நமக்குத் தமிழ் மொழியின் மீது பற்று இருக்க வேண்டும். விஞ்ஞான மோகம் வெறியாகி உலகத்தில் அழிவு செய்யா திருக்கும்படி அதை அடக்கியாண்டு நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள மெய்ஞ் ஞானத்தை நினைப்பூட்டிக் கொண்டிருக்கத்தக்க பழைய தமிழ் நூல்களிலும் நமக்குப் பற்று இருக்கவேண்டும். அப்போதுதான் அகில உலக அரங்கில் தமிழ் இனத் துக்குச் சிறப்பான இடம் கிடைக்கும்.

ஆம் தமிழ் இனம் என்பது ஒரு தனி இனம்.

# இன வேற்றுமை

இன வேற்றுமை என்பது இகழத் தக்கதல்ல. இங்கே 'இனம்' என்ற பதத்தால் குறிக்கப்படுவது மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பித்து, மக்களைப் பிரித்து வைக்கும் ஜாதி வேற்றுமையையல்ல. தீண்டத் தகுந்தவன் தீண்டத் தகாதவன் என்ற வேறுபாடல்ல. இனம் என்பது ஒரு குறிப்பிடத் தகுந்த குணமோ, இயல்போ, கொள்கையோ, நோக்கமோ பொதுவாக உள்ள பல பேர் சேர்ந்த தொகையைக் குறிப்பது. இந்த இன வேற்றுமை இயற்கையாலும் ஏற்படலாம்; செயற்கையாலும் ஏற்படுத்தலாம். இது மனிதர்களுக்குள் மட்டுமன்றி மற்றப் பிராணிகளுக்குள்ளும் மரம், செடி, கொடிகளுக்குள்ளும் உண்டு. ஏன்? ஒரே பூமியைச் சேர்ந்த பல பகுதிகளான மண்ணிலும் உண்டு.

வேறு சில வேற்றுமைகள் இருந்தாலும் சில ஒற்றுமைகளால் ஒரே இனமாவதுண்டு. உதாரணங்களாக மா, வாழை, தென்னை முதலிய மரங்களையும் நெல் கம்பு, சோளம் முதலிய பயிர் வகைகளையும் குறிப்பிடலாம். மாமரத்தில் பல வகைகள் உண்டு. ஒவ்வொரு வகையின் பழங்களும் உருவத்திலும், மணத்திலும்,

சுவையிலும் வேறுபட்டனவாக இருக்கின்றன. ஆனாலும் சில முக்கிய அடையாளங்களால் ஒரே இனத்தைச் சேர்ந்தவைகளாகின்றன. அதைப் போலவே வாழை மரமும், தென்னை மரமும் மற்றப் பழமரங்களும்.

நெல் தானியத்தில் பலவகைகள் இருபபது தெரியும். அதிலும் ஒரு வகை நெல்லிலேயே பலவிதங்கள் இருக்கின்றன. சம்பா, சீரகச் சம்பா, மிளகுச் சம்பா, கிச்சிடிச் சம்பா என்பன போன்று. ஆனாலும் எல்லா நெல்வகைகளும் அவற்றிற் கிடையிலுள்ள சில முக்கியமான ஒற்றுமைகளால் ஒரே இனமாகின்றன.

இப்படியே ஊர்வன, நடப்பன. பறப்பன, நீந்துவன வாகிய சீவராசிகளிலும் இன வேற்றுமைகள் இயற்கையாகவே இருக்கின்றன. அப்படி எண்ணிறந்த இனங்களும், அந்த இனங்களுக்குள் பலவிதங்களும், அந்த விதங்களுக்குள் பல கிளை விதங்களும் இருப்பதுதான் உலகத்தின் சித்திரமும் இயற்கையின் விசித்திரமும் என்று வியக்கின்றோம். அத்துடன் இயற்கையினால் உண்டாக்கப் பட்டுள்ள இந்தப் பல்வேறு இனங்களும் அவற்றின் இயல்பு கெடாமல் அப்படியே இருந்துவரவேண்டும் என்றும் ஆசைப்படுகின்றோம். மனிதனையே கொன்று தின்றுவிடக் கூடிய கொடிய விலங்கினங்களையும் அவற்றின் இனம் இல்லாமல் பூண்டற்றுப் போய்விடக் கூடாதென்று விரும்புகின்றோம். அதற்காக வனங்களுக்கும் வேலியிட்டு அந்த விலங்குகளை யாரும் வேட்டையாடிவிடாதபடி சட்டங்கள் இயற்றி அவற்றைப் பாது காக்கவும் பரிவு காட்டப்படுகிறது.

இயற்கையால் உண்டாக்கப்பட்ட இனவேற்றுமைகள் ஒருபுறமிருக்கச் செயற்கையாலும் புதுப்புது இனங்

களை உண்டாக்கலாம். உதாரணமாகத் தாவர தத்துவங்களை அறிந்த ஒருவன் வெவ்வேறு வகையான இரண்டு அல்லது மூன்று மரஞ்செடிகளை ஒன்றோடொன்றைக் கட்டிச் சேர்ந்து ஒரு புது இனமாகிய கட்டு மாம்பழம் உண்டாகச் செய்கிறான். இந்தக் கட்டு மாம்பழம் வேறு எந்த வகை மாம்பழத்திலும் இல்லாத ஒரு தனி மணமும் சுவையும் உள்ளதாக இருக்கிறது. இபபடியே நெல் முதலிய தானியங்களிலும் செயற்கை இனங்களை உண்டாக்கலாம்.

மனிதன் இயற்கையால் உண்டாக்கப்பட்டபடி ஒரு விலங்குதான். ஆனால், மற்ற விலங்குகளுக்கு இல்லாத ஒரு சிறப்பு மனித விலங்குக்கு இருக்கிறது. அந்தச் சிறப்பைத்தான் பகுத்தறிவு என்று சொல்லுவது. உலகத்திலுதித்த எல்லா மனிதர்களும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களே என்றாலும், உருவத்தாலும் நிறத்தாலும் மிகவும் வேறுபட்டவர்களாக ஆரியர், மங்கோலியர், நீகிரோவர் என்ற வெவ்வேறு இனங்களானார்கள். நிறத்தாலும் வடிவத்தாலும் மிகுந்த வேறுபாடுகள் இயற்கையாக உள்ள இந்த இனங்கள் காலப்போக்கில் ஒன்றோடொன்று கலந்து ஒரு புது கலப்பினத்தையும் உண்டாக்கக்காண்கிறோம். இந்தப் புது இனம் உருவத்திலும் நிறத்திலும் அசல் இனங்களுக்கு மிகவும் வேறுபட்டதாக இருக்கிறது. இது இரத்தம் கலந்து உண்டான இனம்.

இரத்தக்கலப்பு இல்லாமலும் வெவ்வேறு இனங்கள் ஒன்றோடொன்று நெருங்கிப் பழகி கல்வியும் கலைகளும் பழக்க வழக்கங்களுமாகிய இவைகள் மட்டும் கலந்து உண்டாகும் புது இனங்களும் உலகத்தில் உண்டு. இரத்தக் கலப்பால் உண்டாகும் புது இனத்துக்கும்

இரத்தக் கலப்பில்லாமல் வெறும் பழக்க வழக்கக் கலாசாரக் கலப்பால் உண்டாகும் புது இனங்களுக்கும் உதாரணங்கள் பார்ப்போம். ஆங்கிலேயர் இந்தியாவை அரசாண்ட காரணத்தால் ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் இரத்தக் கலப்பு ஏற்பட்டு உண்டான இனம் 'ஆங்கிலோ இந்தியர்' என்ற சட்டைக்காரர்கள்.

இரத்தக் கலப்பில்லாமலும் ஆங்கில மொழியைக் கற்று ஆங்கில உடை நடைகளையும், பழக்க வழக்கங்களையும் பின்பற்றி வாழும் கலாசாரக் கலப்பினமும் இருக்கிறது. இந்தக் கலாசாரக் கலப்புள்ள இனம், தன்னுடைய சொந்த இனத்தின் கலாசாரங்களை முற்றிலும் இகழ்ந்துவிடாமல் அதிலுள்ள நல்லனவற்றை வைத்துக் கொண்டு, அவற்றுடன் பிற இனங்களில் காணப்படும் நல்லனவற்றையும் சேர்த்துக்கொண்டு ஒரு சிறப்பான இனம் ஆகலாம்.

அந்த இனத்தில் பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம்; பல மதத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம்; பல மொழிகளைப் பேசுகின்றவர்களும் இருக்கலாம். இவர்கள் எல்லாரும் போற்றுகின்ற சில பொதுக் கொள்கைகளால் இவர்கள் ஒரே இனம் ஆகின்றார்கள். அந்தப் பொதுக் கொள்கைகள் மனித சமுதாயத்துக்கு நன்மை உண்டாக்குவதாகவும் வேறு எந்த இனத்துக்கும் தீமை உண்டாக்காதவைகளாகவும் இருந்தால் அந்த இனம் குன்றிவிடாதபடி பாதுகாக்கப்பட வேண்டியதல்லவா ?

தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து கடல் கடந்த பல நாடுகளுக்கும் சென்று அங்கங்கே உள்ள பலவித மக்களுடனும் பழகித் தங்களுடைய அறி

வைப் பெருக்கிக் கொண்டவர்கள். பல மொழிகளையும் ஆய்ந்து, பலவித கலாசாரங்களையும் பார்த்துத் தங்களுடைய வாழ்க்கைமுறைகளை வகுத்துக்கொண்டவர்கள். அதற்கிணங்கத்தம்முடைய இலக்கியங்களை வளமுள்ளனவாகச் செய்து கொண்டவர்கள். இப்படியாகத் தலைச் சங்கம் ஏற்பட்ட காலத்துக்கு முன்னுலிருந்து தொடர்ச்சியாக வளர்ந்துவந்தத் தமிழறிவின் முத்தாய்ப்புதான் 'திருக்குறள்.'

திருக்குறள் போதிக்கின்ற அறிவு தெய்வநம்பிக்கை, கொல்லாமை, பொய்யாமை என்ற மூன்று கொள்கைகளுக்குள் அடங்கிவிடும். மனிதனுக்கு வேண்டிய நல்லறிவுகளை எப்படியெல்லாம் பிரித்துப் பிரித்து, என்னென்ன விதமாக மாற்றி மாற்றிச் சொன்னுலும், அவை அனைத்தும் இந்த மூன்று தலைப்புகளுக்குள் அடங்கும். தெய்வநம்பிக்கை, கொல்லாமை,பொய்யாமை ஆகிய இந்த மூன்றும்தான் மிக மேலான கொள்கைகள் என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கிணங்க வாழ்க்கை நடத்த முயன்றவர்களே தமிழர்கள். செய்கையில் தவறி விட்டபோதும், இந்த மூன்று கொள்கைகளிலும் நம்பிக்கை விட்டதில்லை. தமிழ் நாட்டில் எத்தனையோ சமயப் புரட்சிகள் நடந்திருக்கின்றன; எத்தனையோ சமுதாயக் குழப்பங்கள் நேர்ந்திருக்கின்றன. எத்தனையோ அரசியல் போர்கள் இருந்திருக்கின்றன. அவைகள் அனைத்திலும் நடுநாயகமாக இந்த மூன்று கொள்கைகளிலும் தமிழ் மக்களுக்குள்ள நம்பிக்கை பங்காமல் இருந்து கொண்டே வந்திருக்கிறது.

தமிழனுடைய தெய்வ நம்பிக்கைக்குத் தமிழ்நாட்டில் எங்கெங்கும் காணப்படும் தேவாலயங்களின் வான

ளாவிய கோபுரங்களே போதிய சான்றுகள். கொல்லாமை பொய்யாமை என்ற இரண்டிலும் தமிழனுக்குள்ள நம்பிக்கையை எல்லாத் தமிழிலக்கியங்களும் எளிதிற் காட்டும்.

அத்துடன் குழந்தைகளின் ஆரம்பப் பாடமாக, 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' 'புலையும் கொலையும் களவும் தவிர்' என்பனவே போதிக்கப்பட்டு வந்ததும், முதியவர்களுக்கு முற்றிய போதனையாக,

**கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்—என்றும்**
**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று**

என்றும் சொல்லப்பட்டதெல்லாம் எதைக் காட்டுகின்றன? கல்வி கற்பதன் நோக்கமே மக்களுக்குத் தெய்வ நம்பிக்கை, கொல்லாமை, பொய்யாமை ஆகிய மூன்று கொள்கைகளையும் புகட்டத்தான் என்பதைக் காட்டுகின்றது.

தமிழ் இலக்கியங்களில் நாடு, அரசு, போர், வீரம், காதல், அறம் முதலிய பலவற்றைப் பற்றியும் நிரம்பச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பொருளும் அதற்குரிய ஏற்றத்தோடு போற்றப்பட்டிருக்கிறது. என்றாலும் இன்றளவும் கற்றோரால் மதிக்கப்படுகிற எல்லாத் தமிழ் இலக்கியங்களையும் ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் தெய்வ பக்திக்கும், கொல்லாவிரதத்துக்கும், பொய் சொல்லா நோன்புக்கும் கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு மற்ற எதற்கும் இல்லை என்பது தெரியவரும்.

ஆதலால் மேற்சொன்ன மூன்று கொள்கைகள் தாம் தலை சிறந்த மனிதப் பண்புகள் என்ற நம்பக்கையைத் தம் முடைய பரம்பரைப் பாடமாகக் கொண்டவர்களைத்தான் 'தமிழ் இனம்' என்று குறிப்பிடுவது. இப்படி நாம் சொல்லும்போது, இந்த மூன்று பண்புகளையும் நம்புகிற வர்கள் தமிழர்களைத் தவிர வேறு யாரும் இல்லையென்று சொல்லுவதாக எவரும் எண்ணி விடக்கூடாது. இந்த மூன்று கொள்கைகளையும் உச்சமான மனிதப் பண்பு களாக நம்பியும், போதித்தும், வாழ்க்கையில் நடந்து காட்டியும் வருகிறவர்கள் இப்போது எல்லா நாடுகளிலும் இருக்கிறார்கள்.

இங்கே நாம் சொல்லப் புகுந்தது கடந்த இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னிலிருந்து இந்த மூன்று கொள்கைகளையுமே அடிப்படையாகக் கொண்டு இலக் கியங்களை வளர்த்து வியக்கத் தக்க ஆலயங்களைக் கட்டி அறங்களை வகுத்துப் பெரு வாழ்வு வாழ்ந்த இனம் தமிழ் இனம் என்பதுதான். அப்படிப்பட்ட இனத்தில் வந்த தமிழர்கள் அந்த இனப் பெருமையை மறந்துவிடக் கூடாது என்பதுதான் குறிக்கோள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, இருந்த இடம் தெரியாதிருந்த இனங்களும், முன்னே தாழ்ந்திருந்த இனங்களும் உயர்ந்து விட்டதாகச்சொல்லுகின்ற இப்போது, முன்னே மிக உயர்திருந்த நாம் இப்போது தாழ்ந்து விடக்கூடாது என்பதை நினைப்பூட்டவே இந்த இனப் பெருமை பேசப் படுகிறது. அதனால்

**தமிழன் என்றொரு இனமுண்டு**
**தனியே அவற்கொரு குணமுண்டு**

அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்.

என்பது மிகவும் உண்மை. ஆம், தமிழ் மொழி அமிழ்தம். தமிழனுடைய வாழ்க்கைவழி அன்பு. 'அமிழ்தம்' என்பது எப்படி 'தமிழ்' ஆகும் என்பதைப் பின்னல் விளக்கு வோம். முதலில் 'தமிழன் என்ருெரு இனம் உண்டு' என்பதைக் கவனிப்போம். பாரதியார் தமிழனைப் பார்த் துச் சொன்னதை மீண்டும் இங்கே நினைப்பூட்டிக் கொள்வோம். அவர் சொன்னது "தமிழா. தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது. உன் ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிருர்கள். தெய்வம் கண்டகவிகள், அற்புதமான சங்கீதவித்வான் கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல்வல்லவர், பல மணிகள் தோன்றியிருக்கிருர்கள். அச்ச மில்லாத தர்மிஷ்டர் பெருகு கின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதர்களாக அவதரித்திருக்கிருர்கள். கண்ணை நன்ருகத் துடைத்துக் கொண்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணுடியிலேபோய்ப் பார். நமது நாட்டு ஸ்திரிகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிருர் கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன." என்பது.

இதில் பாரதி 'தமிழா, உன் ஜாதியிலே' என்றதில் உள்ள 'ஜாதி' என்ற சொல் நாம் இதுவரை சொல்லி வந்த 'தமிழ் இனம்' என்பதையே குறிப்பது. பாரதி சொன்னதன் கருத்து தமிழன் மிக உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவன் என்பதை உணர வேண்டும் என்பதே. பாரதியார், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, பார்ப்பான்,

பறையன் என்ற ஜாதிக் கொடுமைகளை மிகவும் வன்மை யாகக் கண்டித்துப் பாடி, வாழ்க்கையிலும் ஜாதி பேதங் களை விலக்கியவர்.

ஜாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்வு சொல்லல் பாவம்

என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர். அவர், தமிழன் உயர்ந்த தர்மிஷ்டர் இனத்தைச் சேர்ந்தவன் என்று பெருமை கொள்ள வேண்டு மென்று செல்லுவதன் நோக்கம் என்னவென்பதைச் சிந்திக்க வேண்டும்.

அது நமக்கு மொழிப் பற்றும் இனப்பற்றும் இருக்க வேண்டும் என்பதேயாகும். மொழிப் பற்று என்பதும் இனப்பற்று என்பதும் பிற மொழிகளையும் பிற இனத்த வரையும் குறைத்துப் பேசுவதல்ல. நம் மொழியிலுள்ள சிறந்த அறிவையும் நம் இனத்தவர்கள் மேற் கொண்டு வாழ்ந்த சிறந்த கொள்கைகளையும் நாம் மறந்து விடக் கூடாது என்பதேயாம்.

# தமிழின் தொன்மை

தமிழ் மொழியின் ஆரம்ப காலம் எதுவென்று அனுமானிக்கவும் கூடவில்லை. தமிழுக்கு முதல் இலக்கணம் செய்தவரென்று தெரியக்கிடக்கிற அகத்திய முனிவர் பொதிகை மலைக்கு வருவதற்கு வெகு காலத்துக்கு முன்னாலேயே தென்னாட்டில் தமிழ் மொழி வளம் பெற்று வழங்கி வந்திருந்ததாகத் தெரிகிறது.

வடக்கே கைலாய மலையில் சிவகணங்களோடு இருந்த அகத்தியமுனிவர், தென்னாட்டுக்குப்போய் அங்கே வசிக்க விரும்பியதாகவும், தென்னாட்டுக்குப் போனால் அங்கே வழங்கும் தமிழ் மொழியை அறியாமல் வாழ முடியாது என்பதை உணர்ந்து அவர் தமக்குத் தமிழ் மொழியைக் கற்பித்து உபதேசித்தருள வேண்டுமென்று பரமசிவனை வேண்டிக் கொண்டதாகவும் அதற்கிணங்க பரமசிவன் அவருக்குத் தமிழை உபதேசித்துத் தென்னாட்டிற்கு அனுப்பியதாகவும் அகத்தியரைப் பற்றிய கதைகள் சொல்லுகின்றன.

அப்படித் தெற்கே வந்துப் பொதிகை மலையில் தமது ஆச்சிரமத்தை ஏற்படுத்திக் கொண்ட அகத்தியர் தமிழ் மொழியை நன்றாக அறிந்துகொண்டு அதை மேலும்

வளமுள்ளதாக்கும் ஆராய்ச்சியைத் தொடங்கினர். சில தமிழர்களைத் துணை சேர்த்துக்கொண்டு பொதிகையிலேயே ஒரு தமிழாராய்ச்சிக் கழகத்தை ஏற்படுத்தினர். அந்தக் காலத்தில் தென்னாட்டில், பாண்டிய மன்னர்கள் தாம் சிறப்புற்றிருந்ததாகத் தெரிகிறது. அந்தப் பாண்டிய மன்னருள் ஒருவன், பொதிகை மலையில் அகத்தியர் உண்டாக்கிய தமிழாராய்ச்சிக் கழகத்தின் தொடர்புள்ளவனானன். அவன் மூலமாகப் பல தமிழ்ப் புலவர்கள் பொதிகை மலைக்கு வந்து போகும் வழக்கம் உண்டாகி அந்தத் தமிழ்க் கழகம் நாளுக்கு நாள் பெருகிச் சிறப்புற்றது. ஒரு தவசியினுடைய ஆச்சிரமத்தில் அவ்வளவு பெரிய கழகம் நடந்துவரப் போதிய வசதிகள் இல்லாததனால் பாண்டிய மன்னனுடைய ஆதரவில் அதைப் பாண்டிய நாட்டின் தலைநகரமாகிய மதுரையிலேயே நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காக அகத்திய முனிவரும் மதுரைக்கே தன் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார். மதுரைக்கு வந்தபின் அந்தக் கழகம் முன்னிலும் பெரியதாகி 4,449 புலவர்கள் வரிசைபெற்ற சங்கம் ஆயிற்று. இந்தச் சங்கம் 4440 ஆண்டுகள் 89 பாண்டிய மன்னர்களால் வழி வழியாக ஆதரிக்கப்பட்டு நடந்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. இந்தச் சங்கத்தில் தான் அகத்தியர் தம்முடைய ‘அகத்தியம்’ என்ற இலக்கண நூலை அரங்கேற்றியதாகச் சொல்லப்படுகிறது. இந்த சங்கம்தான் பிற்காலத்தில ‘தலைச் சங்கம்’ என்று பெயர் பெற்றது.

இந்த தலைச்சங்கம் நடந்துவந்த மதுரைமாநகரம், இப்போதுள்ள மதுரைக்குத் தெற்கே வெகு தூரத்தில்

இருந்ததாம். அது கடற்கரைத் துறைமுகப் பட்டினமாக இல்லாதிருந்தபடியால், கப்பல் வியாபாரத்துக்குத் தகுதி யற்றதாக இருக்கிறதென்று 'வெண்டேர்ச் செழியன்' என்ற பாண்டிய மன்னன் தனது தலைகராக இருந்த அந்த மதுரையை விட்டுவிட்டு அதற்கு வடக்கே கடற் கரைத் துறைமுகமாயிருந்த கபாடபுரம் என்ற இடத்தைத் தலைநகரமாக்கிக் கொண்டான். அதனால் அந்த மதுரையில் நடந்துவந்த தமிழ்ச் சங்கமும் கபாடபுரத்துக்கு மாற்றப் பட்டது.

இந்தக் கபாடபுரத்தில் நடத்தப்பட்ட சங்கம்தான் இடைச் சங்கம் என்று பெயர் பெற்றது. இச்சங்கத்தைத் தொடர்ச்சியாக ஆதரித்த பாண்டிய மன்னர்கள் ஐம்பத் தொன்பது பேர் என்றும், இதில் தம்முடைய இலக்கி யங்களை அரங்கேற்றிய புலவர்கள் மூவாயிரத்து எழுநூறு பேர் என்றும் இச்சங்கம் 3700 ஆண்டுகள் வாழ்ந்திருந்தது என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

முதற் சங்கத்தைத் தொடக்கி வைத்த அகத்தியர் இந்த இடைச் சங்கத்திலும் இருந்ததாக இறையனார் அகப்பொருள் உரையில் கூறப்படுகிறது. அது எப்படியோ தெரியவில்லை. முதற்சங்கம், ஆரம்பிக்கப்பட்டபின் 89 பாண்டியர்களின் தலைமுறைகளில் 4440 ஆண்டுகள் நடந்ததாகச் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு இந்த இடைச்சங்கம் கபாடபுரத்தில் 3700 ஆண்டுகள் நடந்த தாகச் சொல்லப்படுகிறது. இடைச்சங்க ஆரம்பத்தில் தான் அகத்தியர் இருந்தாரென்றுசொன்னாலும்,அகத்தியர் 4440 ஆண்டுகளுக்கும் அதிகமாக வாழ்ந்திருந்தார் என்று ஆகிவிடுகிறது. வடநாட்டிலிருந்து வந்து பொதிகை யில் தங்கிய அகத்தியர் அவ்விடத்திலேயே தமிழ் ஆராய்ச்

சிக்கழகத்தை ஆரம்பித்தார். அங்கே அந்தக் கழகம் பல ஆண்டுகள் நடைபெற்றுப் புகழடைந்த பிறகுதான் அது மதுரைக்கு மாற்றப்பட்டுத் தலைச்சங்கம் ஆனது. அந்த சங்கம் 4440 ஆண்டுகள் நடந்தபின் கபாடபுரத்தில் இடைச்சங்கம் தொடங்கியது. இதிலும் அகத்தியர் இருந்தார் என்பது எப்படி ?

அகத்தியர் கடலையே தம்முடைய உள்ளங்கையில் அடக்கிக் குடித்துவிட்ட தவமுனி என்பதைக்கொண்டு வெறும் பக்தியினால், பதில் பேசாமல் ஏற்றுக்கொண்டாலன்றி இதைச் சரித்திரமாகக்கொள்ளமுடியாது. ஆனால், இதில் ஏதேனும் உண்மை மறைந்திருக்குமோ என்று ஆராய்ந்தால் 'அகத்தியர்' என்ற பெயரும் 'சங்கராச்சாரியார்' 'ஜீயர்' 'ஆதீன மடாதிபதி' என்பனவற்றைப் போலத் தலைமுறை தலைமுறையாகச் சூட்டப்படும் பட்டப் பெயராக இருக்குமோ என்று எண்ணச் செய்கிறது.

அது எப்படியிருந்தாலும் இந்த இடைச்சங்கம் கபாடபுரத்தில் நடந்தது என்று கொள்ளப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. இடைச் சங்கத்தில் அரங்கேறிய இலக்கியங்கள் எத்தனை யென்பதும் என்னென்ன வென்பதும் அறிய தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனாலும், தமிழ் மொழிக்கும் தமிழருடைய சமுதாய வாழ்க்கைக்கும் தலைசிறந்த இலக்கண நூலாகக்கொள்ளப்படுகிற 'தொல்காப்பியம்' இந்த இடைச்சங்க காலத்தில் உண்டானது என்று தெரியவருகின்றது. தலைச் சங்கம் இடைச்சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களிலும் அரங்கேறியிருக்க வேண்டிய எண்ணிறந்த இலக்கியங்களில் இந்தத் தொல்காப்பியம் ஒன்றுதான் உருப்படியாக நமக்குக் கிடைத்துள்ளது. தலைச்சங்கத்தில் அகத்தியர்

ERSITY EXTENSION

அரங்கேற்றிய 'அகத்தியம்' என்ற இலக்கணமும் நமக்குக் கிடைக்கவில்லை. பிற்காலத்திய உரையாசிரியர்கள் அகத்தியம் என்ற இலக்கிணத்திலிருந்து மேற்கோள்களாகக் காட்டுகின்ற சில சூத்திரங்களைக் கொண்டுதான் 'அகத்தியம்' என்ற இலக்கணநூல் இருந்ததென்பதையும் அது மிக விரிவான நூலாக இருந்திருக்க வேண்டும் என்பதையும் அனுமானிக்க வேண்டியிருக்கிறது.

இடைச் சங்கம் கபாடபுரத்தில் நடந்துவந்த காலத்தில் முடத்திருமாறன் என்ற பாண்டியன் அரசாண்டு கொண்டிருந்தபோது பாண்டிய நாட்டில் பூகம்பம் உண்டாகிப் பாண்டிய நாட்டின் சில பகுதிகள் கடலுக்குள் அமிழ்ந்துவிட்டன. அதனால் தலைச்சங்கம் நடந்த தென் மதுரையும் இடைச் சங்கம் இருந்த கபாடபுரமும் இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கேயிருந்த குமரி நதியும் அதற்கும் தெற்கிலிருந்த பஃறுளியாறும் கடலில் முழுகி மறைந்தன வென்று இறையனார் அகப்பொருள் உரை சொல்லுகின்றது. வேறு பல சான்றுகளால் கபாடபுரம் பாண்டிய நாட்டின் தலைநகராக இருந்ததும் அது மறைந்துபோனதும் உண்மைகளாகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இப்படிக் கபாடபுரம் அழிந்தபோது அதுவரைக்கும் இருந்த சங்க இலக்கியங்களும் கடலில் முழுகி மறைந்து போயின என்றுதான் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. தொல்காப்பியம் தப்பிப் பிழைத்திருப்பது எப்படியென்றால், அதன் பிரதியோ மூலமோ கடலில் முழுகிய பகுதிகளுக்கு அப்பால் இருந்திருக்கவேண்டும். அல்லது அந்த பூகம்பத்திலிருந்து தப்பிப் பிழைத்து வடக்கே ஓடிய முடத்திருமாறன் என்ற பாண்டியனே அல்லது அவ

னுடன் தப்பி ஓடினவர்களோ தொல்காப்பியத்தையும் கொண்டுபோயிருக்கவேண்டுமோ என்றுதான் ஊகித்துக் கொள்ள வேண்டும்.

பூகம்பத்திலிருந்து தப்பிய முடத்திருமாறன் இப்போதுள்ள மதுரையைத் தன் தலைநகராக்கிக் கொண்டான். தலைநகரம் ஆவதற்குமுன் அந்த இடத்திற்கு வேறு பெயர் இருந்ததாகவும் ஆனால் தலைச்சங்கம் வளர்ந்த முழுகிப் போன மதுரையின் நினைவில் அதற்கு 'மதுரை' என்ற பெயரையே சூட்டிப் புது அரசிருக்கையை உண்டாக்கியதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த மதுரையில் மூன்றாவது தமிழ்ச் சங்கம் முடத்திருமாறனால் நிறுவப்பட்டது. இதைத்தான் பிற்காலத்தில் 'கடைச் சங்கம்' என்று சொன்னது. இச்சங்கம் 49 பாண்டியர்களால் தொடர்ச்சியாக ஆதரிக்கப்பட்டு 1850 ஆண்டுகள் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. இதில் அரங்கேற்றிய புலவர்கள் 449 பேர். இவர்கள் இயற்றிய பல இலக்கியங்களுள் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை. பதினெண்கீழ்க் கணக்கு என்ற முப்பத்தாறு நூல்களே இப்போது உள்ளவை.

தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்ற மூன்று தமிழ்ச் சங்கங்களைப் பற்றித் தமிழ் இலக்கியங்களிலிருந்து நாம் அறியக்கூடிய செய்திகள் இவ்வளவுதான். மேலே சொல்லப்பட்ட எல்லாம் சரித்திர உண்மைகள் என்று சொல்லமுடியாது. ஆனாலும் தமிழ் அகத்தியருக்கு முன்னாலும் இருந்த மிகப் பழமையான மொழி என்பதைக் காட்டப் போதுமான உண்மைகள் இவற்றுள் அடங்கியிருக்கின்றன. அத்துடன் தமிழ் பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்ச்சியாக நடந்த ஆராய்ச்சி

களால் வளர்ந்து வளம்பெற்றது என்பதையும் காட்டுகின்றன.

அகத்தியரும் அவருடைய மாணவர் என்று கொள்ளப்படுகிற தொல்காப்பியரும் செய்ததெல்லாம் காலத்துக் கேற்ற இலக்கணங்களை வகுத்து மொழியை வளமுள்ள தாக்கித் தமிழ் மக்களின் அறிவை வளரச் செய்ததேயாம்.

அகத்தியரைப் பற்றிக் கம்பர்,

'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்'

என்று பாடுகின்றார் இந்த வாக்கியத்தின் பொருள்' என்றைக்கும் உள்ளதான தென்னாட்டுத் தமிழ் மொழியைப் பேசிப் புகழ் பெற்றவன் (அகத்தியன்) என்பது. இதுதான் அதிலுள்ள பதங்களுக்கு நேரான பொருள். 'இயம்பி' என்பதற்கும் 'பேசி' அல்லது 'சொல்லி' என்றுதான் பொருளாகும்.

அகத்தியர் தாம், தமிழ்மொழிக்கு முதல் இலக்கணம் செய்தவர் என்ற பெருமைக்காக 'இயம்பி' என்ற பதத்தோடு 'இலக்கணம்' என்பதைக் கூட்டிக்கொண்டு 'என்றைக்கும் உள்ளதான தென்னாட்டுத் தமிழில் இலக்கணம் சொல்லிப் புகழ்பெற்றவன்' என்று பொருள் கொண்டாலும் பொருந்தும். ஆனால், தமிழ் மொழியை உண்டாக்கினவன் அகத்தியன் என்று பொருள் கொண்டு விடக் கூடாது.

தமிழ் மொழியை, உண்டாக்கின மனிதன் யார் என்பதும் எப்போது உண்டாக்கப்பட்டது என்பதும் நாம் கண்டறியக் கூடியவாக இல்லை. அதனால்தான் அனாதி காலமாக இருந்துவரும் தமிழை அனாதிகாலமாக இருந்து

வரும் கடவுள் உண்டாக்கினதாகச் சொல்லப்படுவது. இதைக் கம்பர் இதற்கு முன்னுலுள்ள ஒரு கவியில் அகத்தியரை,

> 'நிழற்பொலி கணிச்சி மணி நெற்றியுமிழ் செங்கண்
> தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்.'

என்று குறிப்பிடுகிருர். இதன் பொருள்:—ஒளிபொருந் திய மழுவாயுதத்தையுடையவனும் அழகான நெற்றியில் நெருப்பைக் கக்கக்கூடிய சிவந்த நெற்றிக்கண் என்னும் அக்கினிக் குழியை உடையவனுமாகிய பரமசிவன் உண்டாக்கிய தமிழ்மொழியைத் தந்தவன் (அகத்தியன்)- என்பது.

இதே கருத்தைப் பாரதியாரும் "என்னை ஆதிசிவன் பெற்ருன். அகத்தியன் என்ற வேதியன் இலக்கணம் கற்பித்தான்" என்று தமிழ்த்தாய் தன் மக்களைப் பார்த்துச் சொல்லுவதாகப் பாடியிருக்கிருர்.

இப்படித் தமிழ் மொழியைப் பரமசிவன் உண்டாக் கினுர் என்று சொல்லுவதற்குக் காரணம் அந்த மொழி எப்பொழுது உண்டானது என்பதைக் கண்டறியமுடியா திருப்பதுதான். அகத்தியர் தமிழுக்கு ஒரு இலக்கணம் செய்ததாகத்தான் தெரியக்கிடக்கிறது. இலக்கியம் உள்ள மொழிக்குத்தான் இலக்கணம் செய்ய முடியும். அகத்தியர் செய்த இலக்கண நூலில் இருந்த சூத்திரங்கள் என்று நமக்குக் கிடைத்துள்ள சிலவற்றையும், அகத்தியர் சொன்னதாகப் பிற்காலத்துப் புலவர்கள் சொன்ன வற்றையும் ஆய்ந்து பார்த்தால் அகத்தியர் இலக்கணம் செய்த காலத்தில் தமிழ் மக்கள் எவ்வளவு நாகரீகம் அடைந்தவர்களாகவும் மொழிவளம் உள்ளவர்களாகவும் இருந்திருக்கிருர்கள் என்பது தெரியவரும். அகத்தியர்,

அவருடைய இலக்கணத்தில் இசை நுணுக்கங்களைப் பற்றியும் நடன வகைகளைப்பற்றியும் விவரித்திருந்ததாகத் தெரிகிறது. அந்த விவரங்கள் முழுதும் நமக்குக் கிடைக்க வில்லை. ஆனால் 'அகத்தியர் சொன்னார்' என்று பின்வந்த புலவர்கள் சொன்னதைப் பாருங்கள்: இசையைப்பற்றிச் சொல்லவந்த ஒரு புலவர்,

> 'என்றைந்தும் பாலைத் திறம் என்றார்
> பூந்தார் அகத்தியனார் போந்து'

என்று பாடியுள்ளார். இந்த இரண்டு வரிகள்தாம் கிடைத் துள்ளன. இதில் 'பாலை' என்பதும் 'திறம்' என்பதும் இசைக் கலையைச் சேர்ந்த பழந்தமிழ்ச் சொற்கள். 'பாலை' என்பது இப்போது இசைப் புலவர்கள் சொல்லுகின்ற 'மேளகர்த்தா' என்பதைக் குறிப்பது. பாலை என்பது பாலைப்பண். 'திறம்' என்பது அந்த மேளத்திலிருந்து பிறக்கும் 'ராகம்' என்பதைக் குறிக்கும் பழந்தமிழ்ப் பெயர். 'பாலை' என்ற மேளகர்த்தாவிலிருந்து பிறக்கும் ஐந்து ஜன்ய ராகங்களைக் குறிப்பது இந்தப் பாட்டு. அந்த ஐந்து 'திறங்கள்' (ராகங்கள்) தக்கராகம், நேர்திறம், காந்தார பஞ்சகம், சோமதிறம் காந்தாரம் என்பனதான் என்று இசை ஆராய்ச்சிக்காரர்கள் ஒப்புக் கொள்கின்றார் கள். எனவே இந்தப் பாட்டின் பொருள் என்ன வென்றால், (தக்கராகம், நேர்திறம், காந்தார பஞ்சகம் காந்தாரம், சோமராகம்) என்ற ஐந்தும் 'பாலை' என்ற மேளத்தைச் சேர்ந்த ராகங்கள் என்றார் பூமாலை அணிந்த அகத்தியனார் வந்து.'- என்பதாம். இதிலிருந்து முன்ன, மேயே நாட்டில் வழங்கி வந்த இசைக் கலைக்கு அகத்திய னார் 'வந்து' இலக்கணம் வகுத்தார் என்பது விளங்கு கின்றது.

இசைக் கலையைப் பற்றி அகத்தியர் சொன்னதாகச் சொல்லுகிற இதை விட்டு, நாட்டியத்தைப் பற்றி அவர் சொன்னதாகச் சொல்லுகின்ற பாட்டைப் பாருங்கள்:

அவை தாம் சாந்திக் கூத்தும்
விநோதக் கூத்தும் என்று
ஆய்ந்துற வகுத்தனன்
அகத்தியன் தானே

இதன் பொருள்: அவைகள் தாம் 'சாந்திக் கூத்து' என்றும் 'விநோதக் கூத்து' என்றும் (இரண்டு பிரிவு களாக) ஆராய்ந்து (இலக்கணம்) வகுத்தான் அகத்தியன் —என்பது.

இதனால் அகத்தியர் அவருடைய இலக்கணத்தை இயற்றுவதற்கு முன்னாலேயே தமிழ் நாட்டில் இசைக் கலையும் நடனக் கலையும் சிறப்புற்று இருந்திருக்கின்றன என்பது தெரிகிறது. சங்கீதம், சாகித்தியம் இல்லாமல் இருந்திருக்க முடியாது. நாட்டியத்துக்கும் ஜதி, பதம், பாட்டு இவைகள் இன்றியமையாதவை. ஆதலால் மொழி இல்லாமல் இசையோ நடனமோ இருந்திருத்தல் இயலாது.

எனவே தமிழ் நாட்டில் ஏற்கனவே இருந்த மொழியை வளர்த்து அதற்குப் புதியதோர் இலக் கணத்தை வகுத்தார் அகத்தியர் என்பதுதான் பொருந் துமேயன்றி தென்னாட்டிற்குத் தமிழ் மொழியைக் கொண்டு வந்து கொடுத்தார் என்பது பொருந்தாது.

அன்றியும் அகத்தியர் தென்னாட்டிற்கு வந்த காலம் இராமாயண காலம் என்று சொல்லப்படுகிறது. அகத்தி யர் பொதிகையில் வந்து தமது ஆச்சிரமத்தை ஏற் படுத்தியதற்கு முன்னால் அந்தப் பகுதிகளில் இராவணன்

அடிக்கடி வந்து அட்டூழியங்கள் செய்து மக்களைக் துன்புறுத்திக் கொண்டிருந்தான் என்றும், அவனை ஆயுத பலத்தால் வெல்ல முடியாதென்று கண்ட அகத்தியர், அவனை யாழ் வாசிப்பதில் பந்தயத்துக்கு அழைத்தார் என்றும், இராவணனும் யாழ் வாசிப்பதில் மிக்க வல்லவன் . ஆனதால் அந்தப் பந்தயத்தை ஏற்றுக் கொண்டான் என்றும் சொல்லப்படுகிறது. அந்தப் பந்தயத்தில் அகத்தியர் தோற்றுவிட்டால் அவர் பொதிகையை விட்டு வடக்கே போய்விடவேண்டும் என்றும் இராவணன் தோற்றுவிட்டால் அவன் மறுபடியும் பொதிகை மலைக்கு வராமல் இலங்கைக்குப் போய்விட வேண்டும் என்றும் ஒத்துக்கொள்ளப்பட்டது. அந்தப் பந்தயத்தில் இராவணன் தோற்றுப் பொதிகையை விட்டுப் போய்விட்டான் என்று அகத்தியரைப் பற்றிய கதைகள் சொல்லுகின்றன.

இதற்குப் பிறகுதான் அகத்தியர் பொதிகையில் வசிக்கத் தொடங்கியது. இந்த இடத்தில்தான் ஆரணிய வாசம் செய்ய வந்த இராமனும் சீதையும் இலக்குமணனும் அகத்தியரைத் தரிசித்தது. அப்போதுதான் அகத்தியர், தம்மிடமிருந்த விஷ்ணுவின் வில், அம்பு, வாள் முதலியவற்றை இராமனுக்குக் கொடுத்து, இராவணனை வெல்லும்படி வாழ்த்தியது.இதை வால்மீகி, கம்பர் ஆகிய இரண்டு கவிஞர்களும் விரிவாகச் சொல்லுகின்றார்கள்.

மிற்க, சீதாபிராட்டியைத் தேடுவதற்குச் சுக்கிரீவன் இராம இலக்குமணருடன் இருந்துகொண்டு தன்னுடைய வானர வீரர்களை ஒவ்வொரு திசைக்கும் ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து அவர்கள் தேடவேண்டிய இடங்

களுக்கு வழி சொல்லி அனுப்புகிருன். தென்திசைக்கு அனுப்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனுமன், அங்கதன், ஜாம்பவன் முதலியவர்களுக்கு வழி சொல்லுகிருன். அதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்:

"...அவ்வாறே ஆந்திரம், புண்டரம், சோளம், பாண்டியம், கேரளம் முதலிய நாடுகளேயும் காண்பீர்கள். பின்பு தாதுக்கள் நிறைத்ததும், விசித்திரமான சிகரங்களே யுடையதும், பல வர்ணமான பூக்கள் நிறைந்த சோலைகளே யுடையதும், சந்தன வனங்கள் செறிந்ததுமான பெரிய அயோமுக மலையைத் தேடுங்கள். அதன்பின் தேவ ரம்பையர்கள் வந்து நீராடுகின்ற, திவ்வியமான தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர் கள். அந்த மலய மலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனி சிரேட்டரான அகத்தியரைக் காண்பீர்கள். பின்பு அந்த மகரிஷியிடத்தில் விடைபெற்றுச் சென்று முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபருணி நதியைத் தாண்டுங்கள். அந்நதி அழகிய சந்தனச் சோலைகளாலே மூடப்பட்ட துவீபங்களையுடைய தாய், தனது நாயகனிடத்திற் போகும் பெண்ணைப் போல, சமுத்திரத்தினிடத்திற் சென்று விழும். அதை விட்டு அப்பாற் சென்ருல் முத்தாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டி நாட்டின் 'கபாடபுரத்தைக்' காண்பீர்கள். அதன்பின் தென் சமுத்திரத்தையடைந்து பின்பு செய்யவேண்டி யதை நிச்சயம் பண்ணுங்கள்..." (வால்மீகி இராமாயணம் 41-ம் சருக்கம் பண்டித நடேச சாஸ்திரியார் மொழி பெயர்ப்பு)

இதிலுள்ள 'முத்தாலும் மணியாலும் அலங்கரிக்கப் பட்ட அழகிய பொன்மயமான பாண்டி நாட்டின் கபாட

புரத்தைக் காண்பீர்கள்' என்றது மிகவும் குறிப்பிடத் தகுந்தது.

கபாடபுரம் பாண்டி நாட்டின் தலைநகரமானது, தென்மதுரையில் அகத்தியர் தலைச் சங்கத்தை ஆரம்பித்து, அச்சங்கம் அங்கே 4440 வருடங்கள் நடந்த பிறகு. அதாவது 89 பாண்டிய மன்னர்களின் தலைமுறைகளுக்குப் பின்னால்.

வால்மீகி முனிவர் சொல்லுவதிலிருந்தும், அகத்தியர் யாழ் வாசிக்கும் பந்தயத்தால் இராவணனைப் பொதிகையிலிருந்துத் துரத்தினார் என்று சொல்லப்பட்ட கதையிலிருந்தும், இராமாயணம் நடந்த காலத்தில் அகத்தியர் பொதிகையில்தான் இருந்தார் என்பது தெரிகிறது. அப்படியானால் அகத்தியர் பொதிகையை விட்டுத் தென்மதுரைக்குப் போனதற்கு முன்னாலேயே 'முத்தாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டிய நாட்டின் கபாடபுரம்' இருந்திருக்கிறது.

இதிலிருந்து அகத்தியர் தென்மதுரைக்கு வருவதற்கு முன்பே பாண்டிய நாடு செல்வம் நிறைந்ததாகவும் மொழி வளம் உள்ளதாகவும் சிறப்புற்றிருந்திருக்க வேண்டும் என்பது காணக்கிடக்கிறதல்லவா?

இங்கே அகத்தியரைப் பற்றிப் பல குழப்பங்கள் உண்டாகின்றன. அகத்தியர் பொதிகையை விட்டுத் தென் மதுரைக்குப் போய்த்தான் அங்கே தலைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அச்சங்கத்தில்தான் அவர் 'அகத்தியம்' என்ற இலக்கணத்தை அரங்கேற்றினார். அங்கே 4440 ஆண்டுகள் நடந்த பிறகுதான் அச்சங்கம் கபாடபுரத்துக்கு மாற்றப்பட்டது. கபாடபுரத்தில் நடந்த இடைச்

சங்கத்திலும் அகத்தியர் இருந்ததாக இறையனார் அகப்பொருள் உரை சொல்லுகின்றது. அப்படியானால் இராமாயணம் நடந்தபோது அகத்தியர் ஏககாலத்தில் பொதிகையிலும் கபாடபுரத்திலும் இருந்தது எப்படி? ஒருக்கால் வால்மீகி முனிவர் காலத்துக்கு முன்னாலேயே அகத்தியர் பொதிகையை விட்டுத் தெற்கே வந்து, முதற் சங்கத்தை மதுரையில் ஆரம்பித்து, அங்கே அது 4440 ஆண்டுகள் நடந்தபின் கபாடபுரத்துக்கும் போய் அங்கே இடைச்சங்கத்தை நடத்திக் கொண்டிருந்து விட்டு, மறுபடியும் பொதிகைக்கே வந்துவிட்டாரா? என்பன போன்ற பல குழப்பங்கள் உண்டாகின்றன. இந்தக் குழப்பங்களைத் தெளிவிக்கக்கூடிய சரித்திர ஆதாரங்களைத் தேட முயல்வது வீண் முயற்சியாகும். புராணக் கதைகளிலிருந்து சிற்சில சரித்திர உண்மைகளைக் கண்டு விட முடியாது.

கபாடபுரத்தைப் பற்றி வால்மீகத்தில் காணப்படுவது, பூகோள சாத்திரப்படி சரியாக இருக்கிறது. அதனால் வால்மீகி முனிவர் காலத்தில் பாண்டிய நாடு செல்வத்திலும் நாகரிகத்திலும் மிகச் சிறந்ததாக இருந்திருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். வால்மீகத்தில் உள்ளபடி கபாடபுரம் பாண்டியனுடைய தலைநகராக இருந்த சமயத்தில் அகத்தியர் மலயமலை என்ற பொதிகையில்தான் வசித்துக் கொண்டிருந்தார். அங்கேதான் இராம இலக்குமணர்களும் சீதையும் அவரைத் தரிசித்து ஆசிபெற்றது. இதை வைத்துக்கொண்டு பார்த்தால் அகத்தியர் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்னாலேயே பாண்டிய நாட்டில் மொழி வளம் சிறப்புற்றிருந்திருக்க வேண்டும் என்று ஊகிப்பது சரித்திர உண்மைக்கு

ஓரளவு பொருந்தியதாக இருக்கலாம். ஆனால் இதையும் வெட்டிப் பேசப் புராணங்கள் இடங்கொடுக்கும். அதனால் தமிழ் மொழியின் ஆரம்பகாலத்தின் உண்மைகள் அந்தத் தமிழ் மொழியை உண்டாக்கினவன் என்று சொல்லப்படுகிற ஆதிசிவனுக்குத்தான் தெரியும்.

அகத்தியரை எளிதிற் காண முடியாதபடி மூடி மறைத்து அவரைச் சுற்றிலும் செழித்து வளர்ந்துவிட்டப் புராணப் புதரை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் அகத்தியர் என்ற பெரிய தவசி ஒருவர் வடக்கேயிருந்து தெற்கே வந்து தென்னாட்டிலிருந்த மொழியை அறிந்து அதை வளமுள்ளதாக வளரச் செய்து அந்த வளர்ச்சிக்குத் தகுந்தபடி புதிய ஒரு இலக்கணத்தையும் இயற்றித்தந்தார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

அவர் வட நாட்டார் என்பதோ, ஆரியர் என்பதோ நாம் பொருட்படுத்த வேண்டியதல்ல. அவர் தென்னாட்டிலிருந்த மொழி வளர்ச்சிக்குத் தன்னலமற்ற சேவைசெய்த சான்றோன். அவர் வடக்கேயிருந்து புது மொழியைத் தென்னாட்டுக்கே கொண்டு வந்துத் திணித்தவரல்ல. அவர் வடக்கேயிருந்து ஒரு மொழியைக் கொண்டு வந்திருந்தால் அம்மொழி சம்ஸ்கிருதமோ அல்லது அதையொட்டிய பிராகிருத மொழியோ இரண்டில் ஒன்றாகத்தான் இருந்திருக்க முடியும். ஆனால் அவர் தமிழுக்குத் தமிழ் மொழியில் இயற்றியதாகத் தெரிகின்ற இலக்கணத்தில் நமக்குக் கிடைத்துள்ள வெகு சில சூத்திரங்களைப் பார்த்தாலும் அவற்றில் வடமொழி இலக்கணத்தைப் புகுத்தியிருப்பதாகச் சொல்ல முடியாது. வடமொழி இலக்கணம் என்று சொல்லப்படுகிற பாணினி இலக்கணமே அகத்தியம் என்ற இலக்கணத்துக்கு நெடுங்

காலத்துக்குப் பிற்பட்டது என்பது ஆராய்ச்சிக்காரரின் தீர்ப்பு. அதுமட்டுமா? அகத்தியருடைய மாணுக்கர் என்று சொல்லப்படுகிற தொல்காப்பியர் இடைச் சங்கத்தில் அரங்கேற்றிய 'தொல்காப்பியம்' என்ற தமிழிலக்கணத் துக்கும் பிற்பட்டது பாணினி இலக்கணம் என்று ஆராய்ச் சிக்காரர்கள் சொல்லுகின்றூர்கள். அப்படிருக்கத் தொல் காப்பியருக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னுல் இலக் ணம் செய்த அகத்தியர் வடக்கேயிருந்து ஒரு மொழி யையோ அல்லது இலக்கணத்தையோ தென்னுட்டில் புகுத்தினுர் என்பது எப்படிப் பொருந்தும்?

அகத்தியர் அவர் காலத்தில் இருந்த வடநாட்டு மொழியை (அது பிராகிருதமோ வேறென்றே) அல்லது வடநாட்டு மொழிகளை அறிந்தவராக இருந்திருக்கலாம். அதனுலென்ன? அவர் வடநாட்டு மொழியைத்தான் தென்னுட்டில் புகுத்தி அதற்கு இலக்கணம் செய்தார் என்று சொல்லிவிட முடியுமா? இதாலியில் பிறந்து பல ஐரோப்பிய மொழிகளைமட்டும் கற்றுத் தமிழ் என்ன வென்பதே தெரியாதவராகத் தமிழ் நாட்டுக்குவந்த பெஸ்கி (வீரமா முனிவர்) என்றவர் இங்கு வந்த பின் தமிழைக் கற்று அதன் சிறப்பை உணர்ந்து, அதைத் தம் முடையதாய் மொழிக்கும் மேலாகப் போற்றி, அதற்குப் புதிய இலக்கணமும் இலக்கியங்களையும் செய்ய வில்லையா? அவர் தம்முடைய இதாலிய மொழியை யாவது அல்லது தாமறிந்த வேறு ஐரோப்பிய மொழியை யாவது தமிழில் புகுத்தியிருக்கிருரா? அவர் தமிழ் மொழிக்கு மாசு மருவற்ற தெய்வீகத் தொண்டல்லவா செய்தார்? அப்படித்தான் அகத்தியரும்.

# தென் மொழியும் வட மொழியும்

**தெ**ன் மொழியாகிய தமிழ், வடமொழியாகிய சம்ஸ்கிருதத்துடன் தொடர்பு கொண்டது எப்போது என்று நிச்சயிக்க முடியாது. நெடுங்காலமாகச் சிறுகச் சிறுக வடமொழிக் கருத்துக்களும் சொற்களும் தமிழில் இடம் பெறலாயின. பிற்காலத்தில் 'வடமொழியி லிருந்துதான் தமிழ் உண்டானது' என்று வடமொழி பக்தர்கள் சொல்லும் அளவிற்குத் தமிழர்கள் வடமொழி யோடு உறவு கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனாலும் தமிழ் மொழி வேறு, சம்ஸ்கிருதம் வேறு. தமிழர்கள் சம்ஸ்கிருதத்தை 'வட மொழி' என்ற பெயராலேயே குறிப்பிட்டு வந்திருக்கிற வழக்கமே, அது வேற்று மொழி என்பதைக் காட்டும். தமிழில் எவ்வளவு வடமொழிக் கருத்துக்கள் இருந்தாலும் வடமொழி வேறு. தமிழ் மொழி வேறு. தமிழ் மொழி இலக்கணம் வேறு. வடமொழி இலக்கணம் வேறு. தமிழரின் பழக்க வழக்கங்கள் வேறு; வடமொழிக் காரரின் பழக்க வழக்கங்கள் வேறு. தமிழ் வடமொழியினின்றும் பல விதங்களில் வேறுபட்டது என்று சொல்லும்போது வடமொழியைக் குறைத்துப் பேசுவதாகவோ, தமிழ் வடமொழியோடு தொடர்பு கொண்டதைப் பருப்பதாகவோ எண்ணிவிடக்கூடாது.

வடமொழி மிகச் சிறந்த மொழி. வேறு எந்த மொழியிலும் காணமுடியாத மெய்ஞ்ஞான நூல்கள் வட மொழியில்தான் இருக்கின்றன. இங்கே நாம் ஆராயப் புகுந்தது தமிழ் மொழியின் தனித் தன்மையையும், அதற்கேயுள்ள சில தனிச் சிறப்புகளையும் பற்றித்தான். தமிழின் வளர்ச்சிக்கு வட மொழி இலக்கியங்கள் மிகவும் உதவியிருக்கின்றன என்ருலும் இரண்டு மொழிகளுக்கும் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் மிக்க வேறுபாடுகள் உண்டு. இலக்கியங்களில் ஒற்றுமைகள் இருந்தாலும் இலக்கணத்தில் முற்றிலும் வேறுபட்டவை. வடமொழியிலுள்ள எல்லா இலக்கியங்களும் மொழி பெயர்ப்பாகவோ, வழிநூலாகவோ, சார்பு நூலாகவோ தமிழில் வந்திருக்கின்றன. ஆனல் வடமொழியிலுள்ள வேதங்கள் பகவத் கீதை போன்ற மெய்ஞ்ஞான சத்திய நூல்களைத் தவிர மற்றக் கதைகளெல்லாம் தமிழ்ப் பண்புகளுக்குப் பொருந்தும்படி மாற்றப்பட்ட வழி நூலாகவும் சார்பு நூலாகவும் வந்திருக்கின்றன. மொழிபெயர்ப்பாகச் செய்யப்பட்டவற்றிலும் விரும்பத்தகாத பகுதிகளைவிட்டு விட்டுத்தான் தமிழர்கள் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

ஆனுலும் தமிழர்கள் வடமொழியை மிகவும் விரும்பிக் கற்று அதிலுள்ள நல்லறிவுகள் அனைத்தையும் தமிழ் மொழியில் கூட்டிக் கொண்டிருக்கிருர்கள். பழங் காலத்துப் பெருந் தமிழ்ப் புலவர்கள் எல்லாரும் வடமொழி லுயிம் சிறந்த பண்டிதர்களாகவே இருந்திருக்கிருர்கள்.

ஆனல் தமிழர்கள் வடமொழியொடு அவ்வளவு நெருங்கிய உறவு கொண்டிருந்தும் வடமொழிக் கருத்துகளும் சொற்களும் தமிழில் கலந்திருக்கின்றனவேயன்றி,

5

தமிழ்ச் சொற்களோ கருத்துகளோ வடமொழியிற் கலந்த தாகத் தெரியவில்லையே என்ற கேள்வி உண்டாகலாம். அதற்குக் காரணம், வடமொழி, பேசும் மொழியாக இல்லாமல் வெறும் ஏட்டு மொழியாகவே இருந்திருக் கிறது என்பதே. இந்தக் காரணம் சரியல்ல, வடமொழி ஒருகாலத்தில் பேச்சு மொழியாக இருந்தது என்று சொன்னாலும் இன்னொரு முக்கிய காரணம் உண்டு. அது என்னவென்றால் வடமொழிக்காரர்கள் தமிழ் மொழிக் காரர்களைப்போல் பிற நாடுகளுக்குப் போய் அங்கங்கே உள்ள மக்களுடன் தாராளமாகப் பழகி, அவர்களுடைய மொழிகளைப்பற்றியும் அறிந்துகொள்ள ஆர்வங் காட்டி யிருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக அவர்கள் கடல் கடந்து பிற நாடுகளுக்குப் போவதே தகாத காரிய மாகத்தடை விதித்திருந்தார்கள். மிகப் பெரிய சீர்திருத்தக் காரரான ராஜாராம் மோகன்ராய் சீமைக்குப் போவதை ஆட்சேபித்தார்கள் என்பதும் ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகுலே சீமைக்குப் போனபோதும், ஸ்ரீ பால கங்காதர திலகர் சீமைக்குப் போக எண்ணியபோதும் இதே தடை எழுப்பப்பட்டது என்பதும் வரலாறு கண்ட உண்மை. இதே வடமொழிப் பழக்கம்தான், மகாத்மா காந்தி பாரிஸ்டர் தேர்வுக்குப் படிக்கச் சீமைக்குப் போனதைத் தடுக்க முயன்றது. காந்தியடிகளின் தாயாரும், தமையனும் இந்தத் தடையை மீறித்தான் காந்தியவர்களைச் சீமைக்கு அனுப்பினார்கள் என்பதும் வரலாற்று உண்மை. இந்தக் காலத்திலேயே இந்தத் தடை இருந்ததென்றால் இது ஒரு கட்டாய விதியாக செய்யப்பட்டு அதைப் பின் பற்றி வந்த பழங்காலத்தில் இது எவ்வளவு கண்டிப்பான சட்டமாக இருந்திருக்கும் என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

இப்படிப்பட்ட தடை பழந்தமிழர்களிடை இருந்த தில்லை. அவர்கள் வடநாட்டுக்கு மட்டுமன்றிக் கடல் கடந்த பல நாடுகளுக்கும் சென்று பல மொழிகளோடும் கலாச்சாரங்களோடும் உறவு கொண்டு அங்கங்கே சிறப்பாக இருந்த நல்லறிவுகளையும் தம்முடைய வாழ்க் கையிலும் இலக்கியங்களிலும் சேர்த்துக் கொண்டிருப் பதாகத் தெரிகிறது.

தமிழ் மொழிக்காரர்கள், தாங்களும் பிறநாட்டு மக்க ளோடு நெருங்கிப் பழகினார்கள்; பிறநாட்டு மக்களும் தங்களுடன் நெருங்கிப் பழக இடங் கொடுத்தார்கள். ஆனால் வடமொழிக்காரர்கள், தாங்களும் பிற நாட்டா ரோடு நெருங்கிப் பழகவில்லை. பிற நாட்டாரும் தம்முடன் நெருங்கிப் பழக இடங் கொடுக்கவில்லை.

இப்படித் தமிழ் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து வடமொழியிலுள்ள நல்லறிவுகளைத் தம் முடைய இலக்கியங்களில் கூட்டிக் கொண்டதனால் நாளடைவில் தமிழிலுள்ள எல்லாம் வடமொழியிலிருந்து வந்ததுதான் என்று பிற்காலத்துத் தமிழர்களே எண்ணும் படியாகிவிட்டது. வடமொழி இலக்கியங்களை வடக் கத்தியார் யாரும் மூட்டைகட்டிக் கொண்டு வந்து தமிழுக் குள் புகுத்திவிடவில்லை. நல்லறிவைப் பாராட்டும் தமிழர் கள் மிக்கப் பரந்த நோக்கத்துடன் அவர்களாகவே வட மொழியைக் கற்று அதிலுள்ள மிக நல்ல அறிவுகளைத் தம்முடைய இலக்கியங்களில் சேர்த்துக் கொண்டார்கள். அப்படிச் சேர்த்துக் கொள்வதற்குத் தமிழ் மன்னர்கள் மிகவும் ஆதரவாக இருந்தார்கள்.

வடமொழி அறிவைத் தமிழ் மக்களிடைப் பரப்ப வென்றே சேர, சோழ, பாண்டியராகிய மூன்று வேந்தர்

களும் வேத பாடசாலைகளை உண்டாக்கி, அவை நடந்து வரப் போதிய வருவாய்களுக்கு வகை செய்து, ஆதரித்து வந்தார்கள். அப்படி வடமொழியிலுள்ள வேத, சாத்திர, புராணங்களை ஆராய்வதற்கென்றே தமிழ் நாட்டு அந்தணர்களைப் பொறுப்பாளிகளாக்கி அவாகளுக்குச் சகல சலுகைகளும் கொடுக்கப்பட்டிருந்தன.

வடமொழி அறிவைத் தமிழ் நாட்டில் பரவச் செய்த பெருமை இந்த அந்தணர்களுடையதே. இவர்கள் வட மொழி இலக்கிய இலக்கணங்களை வெகு ஆர்வத்தோடு கற்றுக் கொண்டவர்கள் என்பது மட்டுமன்றி, ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் வடநாட்டுக்காரரைவிட மிக்கத் தெளி வாக, வேதப்பொருளை விளக்கக்கூடியவர்கள் என்ற புகழும் பெற்றவர்கள். வேதப் பொருளை விளக்கி மக்களுக்கு ஆன்மஞானத்தைப் புகட்டுவதும், அற வொழுக்கங்களை அறிவுறுத்தி அரசருக்கும் வணிகருக்கும் வேளாண்மை செய்வோருக்கும் அப்போதைக்கப்போது வேண்டிய ஆலோசனை சொல்லுவதுமே இவ்வந்தணர் களின் தொழிலாக இருந்தது. தூய எளிய வாழ்க்கை நடத்திக் கொண்டு, தெய்வநம்பிக்கைக்கு வழிகாட்டிக ளாகத் திகழ்ந்தவர்கள், தமிழ்நாட்டு அந்தணர்கள். அதனால் அந்தணர்கள் வணக்கத்துக்குரிய வகுப்பின ரானார்கள்.

ஆனால் அவர்கள் வடமொழியைக் கற்கும் தனி வகுப்பாகவே இருக்கநேர்ந்ததனால் நாளடைவில் அவர் கள், தாங்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என் பதையே மறந்து, தங்களை வடமொழிக்குச் சொந்தக் காரராகிய ஆரியர்களென்றே எண்ணிக்கொண்டார்கள். வடமொழி இலக்கியங்களையும் அதன் பழக்க வழக்கங்

களையும் பின்பற்றி, வாழ்க்கையை வகுத்துக் கொண்டார்கள். சிறுகச் சிறுகத் தமிழ் இலக்கியங்களையும் தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களையும் மறந்து விட்டார்கள். சமுதாயத்துக்கு அறிவு சொல்லும் தலையாய வகுப்பினராகிய அவர்களே தமிழ் இலக்கியங்களை மறந்துவிட்டு எல்லாக் காரியங்களுக்கும் வடமொழி இலக்கியங்களையே மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டிவரத் தொடங்கியதால் அவர்களுடைய அறிவுரைகளைப் பின்பற்றியே நடந்துவந்த மற்றவர்களும் சிறுகச் சிறுகப் பழந்தமிழ் இலக்கியங்களைப் புறக்கணித்துவிட்டுப் புது மொழியாகிய வடமொழியில் ஆர்வங் கொள்ளலானார்கள்.

அதனால்தான் பல சங்க இலக்கியங்கள் போற்றி வைப்பாரின்றி மறைந்து விட்டனவோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

தம்மை வடமொழிக்காரன் என்று எண்ணாமல் தமிழன் என்றே எண்ணிக் கொண்டுத் தமிழ்ச் சுவடிகளுக்காக அல்லும் பகலும் அலைந்து திரிந்து தமிழுக்கு ஒப்பரிய திருப்பணி செய்தவராகிய உயர்திரு உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் இல்லாது போயிருந்தால் இப்போதுள்ள சில பழந்தமிழ் இலக்கியங்களும் இல்லாது போயிருக்கும் என்பதை இப்போது நாம் நினைப்பூட்டிக் கொள்ளவேண்டும்.

தமிழ்த் தாத்தா எனப்படும் இப்பெரியார் பழந்தமிழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடி எவ்வளவு அலைந்தார் என்பது மறக்க முடியாத சரித்திரம். அதற்காக அவர் மேற்கொண்ட உழைப்பு ஒப்பரியது. அவர் ஏட்டுப் பிரதிகளாக இருந்த பல பழைய இலக்கியங்கள் சிதைந்தும் மறைந்தும் போனதைப்பற்றி மனம் நொந்து சொல்லு

வதைப் பாருங்கள். ஒரு சொற்பொழிவில், மனித சமுதாயத்தின் நன்மைகளுக்கான எல்லாக் கலைகளும் பழைய தமிழ் நாட்டில் மிகவும் சிறந்து விளங்கின வென்பதைத் தக்க ஆதாரங்களுடன் சொல்லிவிட்டுக் கடைசியாக:

"இவ்வாறு பலவகைக் கலைகளும் அவற்றிற்குரிய நூல்களும் தமிழ் நாட்டில் மலிந்திருந்தன. அவற்றில் வல்லாரும் பலர் இருந்தனர். பிறநாட்டுக் கலைவல்லார் இந்நாட்டில் வந்து தம் ஆற்றலைப் புலப்படுத்தி வந்தனர்.

'மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி'—மணிமேகலை.

வாழ்ந்து வந்தனர். பிற நாட்டாரிடமிருந்து கற்றவற்றை யன்றித் தமிழ் நாட்டாரே அறிந்து பயின்ற கலைகளும் நூல்களும் பல உண்டு......ஏட்டுச் சுவடிகளில் உள்ள கலை நூல்களை ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்தல் வேண்டும். நான் 'ஏடுதேடச்' செல்லும்பொழுது முதன் முறை கண்ட பலவகைக் கலைநூல்களிற் பெரும் பாலானவை மறு முறை சென்ற பொழுது, அருமை யறிந்துப் பாதுகாப்பாரின்மையால், சிதைந்து போயின; பல காணப்படவில்லை. அதை நினைக்கையில் இப்பொழுது கிடைப்பவற்றையேனும் அறிஞர் பாதுகாத்து ஆராய்ந்து வெளியிட்டால் நலமாயிருக்குமே யென்று தோற்று கிறது......சீவகசிந்தாமணியில் வந்துள்ள யானைப் பேச்சு இப்பொழுதும் வழங்கி வருகின்றனவாவென்று திருவிடை மருதூரிலிருந்த ஒரு யானைப்பாகனைக் கேட்டேன். அவன் அவை அப்படியே வழங்குகின்றனவென்றும், யானையின் இலக்கணங்கள் முதலியவற்றைப் பற்றித் தமிழில் எழுதப்

பெற்றுள்ள சுவடி ஒன்று உள்ளதென்றும் கூறினன். அதைப் பார்க்க வெண்ணிப் பெற முயன்றும் அது கிடைக்கவில்லை......" என்கிருர்.

இது ஐயரவர்கள் சொன்னது. இதில் குறிப்பிட வேண்டியது, அவர் தமிழ் நூல்களின் ஏட்டுப் பிரதிகள் 'அருமை யறிந்துப் பாதுகாப்பாரின்மையால்' சிதைந்தும் மறைந்தும் போயின என்பதே. வடமொழி ஆர்வத்தால் முற்காலத்திலிருந்த ஏட்டுப் பிரதி நூல்கள் மறைந்து போயின. ஆங்கில ஆர்வத்தால் பிற்காலத்து ஏடுகளும் இல்லாது போயின.

தமிழர்கள் வடமொழி இலக்கியங்களை ஆர்வத்தோடு அறிந்து கொண்டதையோ அல்லது ஆங்கில மொழியைக் கற்றுக் கொண்டதையோ நாம் குறை கூறவில்லை. வடமொழியால் தமிழ் அறிவு மிக்க வளம் பெற்றிருக் கிறது. ஆங்கில மொழியாலும் நாமடைந்த நன்மைகள் பலவாகும்.

ஆனல் தமிழர்கள் தங்களுடைய தாய்மொழியின் சிறப்பையும் அதிலுள்ளனவாகிய, என்றென்றும் உதவக் கூடிய நல்லறிவுகளையும் மறந்துவிடக் கூடாது என்பது தான் நாம் வலியுறுத்த விரும்புவது. காலப்போக்கால் ஒரு மொழியில் பிற மொழிப் பதங்களும் கருத்துக்களும் கலந்து விடுவதும், ஒரு நாட்டில் பிறநாட்டுப் பழக்க வழக்கங்கள் புகுந்துவிடுவதும் இயல்பேயாகும். பதங் களும் பழக்க வழக்கங்களும் காலத்தால் மாறிவிடக் கூடியவை. ஆனல் மனிதப் பண்புகளை உறுதிப்படுத்துகிற நல்லறிவுகள் மாறுவதில்லை. எல்லா மொழிகளிலும் நல்லறிவுகள் விரவியிருக்கின்றன. எனினும் தமிழிலுள்ள நல்லறிவுகள் நெடுங்காலமாகப் பல மொழிகளோடும்

பல நாட்டு மக்களோடும் பழகியதால் உண்டான அனுபவங்களின் பயனாக நிச்சயிக்கப்பட்டவை. பிறமொழிகளிலுள்ள நல்லறிவுக்கு ஒப்பானதும் உயர்வானதுமான நல்லறிவு அடங்கியது நம் தாய்மொழி என்பதைத் தமிழர்கள் மறந்து விடலாமா? உலகிலுள்ள எல்லா மொழிகளும் கற்கத் தக்கனவே. ஆனால் எந்த மொழியும் தாய்மொழிக்கு ஈடாகுமா? ஊரிலுள்ள எல்லாப் பெண்களையும் தாய்க்குச் சமானமாகக் கருதலாம். ஆனால் எல்லாப் பெண்களும் தாயாகிவிட முடியுமா?

பழைய தமிழ் நாட்டில் இருந்த பல கலைகளைப்பற்றிய ஏட்டுப் பிரதிகள் அவற்றின் அருமையறிந்துப் பாதுகாப்பாரில்லாமல் அழிந்தும் மறைந்தும் போனதைப்பற்றி உயர்திரு சுவாமிநாத ஐயரவர்கள் வருத்தப்பட்டார். பாதுகாப்பாரின்றி மறைந்தது மட்டுமல்ல. வடநாட்டார் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் நாட்டுக் கலைகளை வேண்டுமென்றே அழித்துவிட்டார்கள் என்று பண்டிதர் உயர்திரு வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் சொல்லுகின்றார். சூரியநாராயண சாஸ்திரியார் மிகப் பெரிய தமிழாராய்ச்சியாளர். தமிழ் மொழியின்மீது அளவுகடந்த காதலுடையவர். அந்தக் காதலால் தம்முடைய பெயரையும் வடமொழியிலிருந்து தமிழாக, 'பரிதிமால் கலைஞன்' என்று மாற்றிக் கொண்டவர். (பரிதி=சூரியன், மால்=நாராயணன், சாஸ்திரி=கலைஞன் — பரிதிமால் கலைஞன்). அவர் சொன்னதாவது:

"பழைய இசைத்தமிழ் நூல்களுட் பெரும்பாலன இறந்துவிட்டன. இரண்டொன்று மட்டில் ஆங்காங்கு காணப்படுகின்றன. அவை தாமும் சின்னாட்களில் வெளியிடப்படாவிடின் அழிந்துபடினும் படும். இவ்வாறு

இசைத்தமிழ் நூல்கட்குக் குறை நேரக் காரணம் யாது? இடைக் காலத்திலிருந்த மக்களுக்குள் ஒழுக்கச் சீர் திருத்தஞ் செய்யப் புகுந்த போலி ஆரியர் சிலரோரால் விளைந்த கேடாமிது. இவ்வுலக வாழ்க்கைக்கு அறம் பொருள் இன்பமென்ற மூன்றும் சிறந்தனவாமென்னும் உண்மையை நன்குணராது, 'அறமேயாவரும் பின்பற்றற் குரியது, மற்று இன்பம் கைவிடுதற் குரியது' என்று எண்ணி, இசையினுல் இன்பம் மிகுதலின் அதனையும் கடியவேண்டுமென்று புகுந்து, ஆரியரும் சைனரும் ஒருங்கு சேர்ந்து இசைத் தமிழைப் பெரிதும் அலைத்துத் தொலைக்க முயன்றனர். (இசை நாடகம் காமத்தை விளைக்குமென்று உரைத்தார் உரையாசிரியர்களுள் தலை நின்ற நச்சினர்க்கினியரும்). அம்முயற்சிகளில் அநேக நூல்கள் அந்தோ! அழிந்து போயின. இதுபோழ்து எஞ்சியிருப்பன மிகச் சிலவே. இவற்றை இறைவன் பாதுகாத்தருள்க. மேற்கூறிய மருட்கை யுணர்ச்சி இக்காலத்தினும் பலரிடம் குடிகொண்டிருக்கின்றது. இஃதென்னே!......''

இது, சூரியநாராயண சாஸ்திரியார் தமிழில் இருந்த இசைக் கலையைப்பற்றிய ஏட்டுப் பிரதிகள் மறைந்து போனதைப்பற்றியும் அந்தக் கலையைப் போலிச் சீர்திருத் தக்காரர்கள் இகழ்ந்து கெடுத்து விட்டதைப்பற்றியும் வருந்திச் சொன்னது.

இதைப் போலவே நாடகக் கலையைப்பற்றிய பழந் தமிழ் நூல்கள் இல்லாது போனதைப்பற்றி இவர் சொன்னதைப் பாருங்கள் :

'' நாடகத் தமிழென்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசமில்லாத வேலைக்காரர்களுக்கும்,

படிக்கத் தெரியாதவர்களுக்கும், நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது. அது கேட்போர்க்கும் பார்ப்போர்க்கும் இன்பம் பயவாவிடின், சாமானிய ஜனங்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின் அஃது இன்பச்சுவையோடு இயல்வதாயிற்று. உலகத்தின் இயல் பினை உள்ளதை உள்ளவாறே புனைந்து காட்டுவது—நாடகத் தமிழேயன்றி வேறில்லை.........தமிழ் நாடகம் முதலில் உண்டானது மத உணர்ச்சிக் காகவேயென்று துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல் பாடல் இரண்டையுஞ் சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று......இவ்வாறு தோன்றி வளர்ந்த நாடகத் தமிழ் வீழ்நிலையடையப் புகுந்தது. அதற்குற்ற காரணம் யாது? ஒழுக்கநிலை வகுக்கப்புகுந்த ஆரியரும் சைனரும் நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகு கின்றதென்ற போலிக் கொள்கையுடையராய்த் தமது நூல்களில், கடியப்படுவனவற்றுள் நாடகத்தையும் சேர்த்துக் கூறினர். அக்காலத்திருந்த அரசர்களுக்கும் இதனை அறிவித்து நாடகத் தமிழைத் தலையெழ வொட் டாது அடக்கிவந்தனர். ஒளவையாரும், திருவள்ளுவரும் ஒருங்கே புகழ்ந்த இல்லற வாழ்க்கையையே தீவினை யச்சத்தின்பாற்படுத்துக் கூறும் சைனர்கள் நாடகத் தமிழைக் கடிந்தது ஓராச்சரியமன்று. இவ்வளவு கட்டுப் பாட்டுக்கிடையில் நாடகத் தமிழ் எவ்வாறு தலையெடுத்து ஓங்கப் போகின்றது? இவ்வாறு நாடகத் தமிழுக்கு நாற் புறத்தினும் தடைகள் அமைக்கப்பட்டபின் அஃது அழிநிலை யடையத் தலைப்பட்டது. பண்டிதராயினோர் கடிந்து நாடகத் தமிழைக் கைவிடவே அது பாமரர் கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தளவிலே

நிற்கின்றது. அக்காலத்துச் சங்கப் புலவர்கள் செய்த 'பரதம்', 'அகத்தியம்', 'முறுவல்', 'சயந்தம்', 'குணநூல்', 'செயிற்றியம்', 'மதிவாணர்', 'நாடகத் தமிழ் நூல்', 'கூத்தநூல்' என்ற நாடகத் தமிழ் நூல்களெல்லாம் யாண்டுப் போய் ஒளிந்தன? சிலப்பதிகாரம் என்னும் நாடகக் காப்பியம் மட்டிலே தப்பித் தவறி வெளியேறிவிட்டது. அதனை வெளிப்படுத்திய பண்டித சிகாமணி சாமிநாதையர்க்குத் தமிழுலகம் செய்யக்கடவ கைம்மாறென்ன!"

இது சூரியநாராயண சாஸ்திரியார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னல் சொன்னது. இவர் சொன்னதைப் போலவே தமிழ் இலக்கிய ஆராய்ச்சியிற் சிறந்தவரும் 'யாழ் நூல்' இயற்றிய பேரறிஞருமாகிய சுவாமி விபுலானந்தர் சொன்னதைப் பாருங்கள்:

"ஒரு நாடகக் கணிகை அரங்கேற்றுவதற்கு அவசியமானவர்கள் வருமாறு: நாடகக் கணிகை, ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன், மத்தளக்காரன், குழலோன், யாழிசைப்போன்.

அரங்கேறுவது சம்பந்தமாகச் சிலப்பதிகாரத்திலுள்ள செய்யுட்களில் பல விவரங்களைக் காணலாம். அரங்கேற்று காதையில் 70-வது முதல் 94-வது வரி வரையில் யாழிசைப்போனைக் குறிக்கின்றன. அந்த வரிகளுக்குப் பூரணமாக அர்த்தம் தெரிந்து கொண்டால் பண்டைத் தமிழ் இசையின் பொக்கிஷத்துக்குத் திறவுகோல் கிடைத்துவிடும். ஐந்து வருட காலத்துக்கு மேலாக நான் ஆராய்ச்சி செய்ததன் பலனுகச் சிறிது ஒளி கிடைத்துள்ளது. அந்த அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் விளக்கவுரை எழுதவேயில்லை. அடியார்க்கு நல்லார்

காலத்திலேயே பண்டைத் தமிழிசை புறக்கணிக்கப்பட்ட தென்று தெரிகிறது. மத்திய காலத்தில் கலைவல்லவர்களாக இருந்த சமண சந்நியாசிகளும், பௌத்த சந்நியாசிகளும் ஆடல், பாடல் என்ற இரு கலைகளையும் புறக்கணித்தனர்.''

இது விபுலானந்தரின் சொற்பொழிவிலுள்ள ஒருசிறு பகுதி. சுவாமிநாத ஐயரவர்கள், அவர் கண்ணுற் கண்ட கலைநூல்களாகிய ஏடுகள் அவர் காலத்திலேயே சிதைந்தும் மறைந்தும் போனதைப் பற்றிச் சொல்லுகிறார்.

சூரியநாராயண சாஸ்திரியார் தமிழ் தமிழ் நாட்டிற் புகுந்தப் போலி சீர்திருத்தக்காரர்களும் ஆரியரும் தமிழ் நாட்டுக் கலைகளுக்குக் கேடு சூழ்ந்து கலைநூல்களான தமிழ் ஏடுகள் மறைந்தொழியக் காரணமானார்கள் என்று கடிந்துரைக்கின்றார். அத்துடன் தமிழரின் வாழ்க்கை மரபுக்கே அவர்கள் தீங்கிழைத்து விட்டதாகக் கூறுகின்றார்.

இனி, விபுலானந்தர், பௌத்த சந்நியாசிகளும் சமண சந்யாசிகளுமே தமிழ் நாட்டிலிருந்த இசைக்கலை பிற்காலத்தில் புறக்கணிக்கப்பட்டதற்குக் காரணமானவர்கள் என்று சொல்லுகிறார்.

# தமிழ் மரபு

இந்த மூன்று பேரறிஞர்களும் அவரவர் உணர்ச்சி வேகத்துக் கிணங்க வெவ்வேறு விதமாகச் சொல்கின்றார்களெனினும், மூவரும் தமிழ்மொழி வளர்ந்த வரலாற்றை அறிவிக்கக்கூடிய பழந்தமிழ் இலக்கியங்கள் பாதுகாப்பின்றி மறைந்துபோனதை உணர்த்துகின்றார்கள்.

இவற்றுள் சூரியநாராயண சாஸ்திரியாரும் விபுலானந்த அடிகளும், வடக்கேயிருந்து புகுந்த ஆரியரும், போலிச் சீர்திருத்தக்காரரும், சமண சந்நியாசிகளும், பௌத்த சந்நியாசிகளும் தமிழர்களுடைய வாழ்க்கை மரபுக்கே தீங்கிழைத்துவிட்டார்கள் என்று சொன்னது மிகவும் குறிப்பிடத் தகுந்தது.

வடமொழியிலுள்ள வேதங்கள், பகவத்கீதை முதலிய மெய்ஞ்ஞான நூல்கள் ஒருபுறமிருக்க, வடமொழிக்காரருடைய சமூகப் பழக்க வழக்கங்களுக்கும் தமிழர்களுடைய வாழ்க்கை வழிகளுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு.

வடமொழியிலுள்ள நல்லறிவுகளை யெல்லாம் தமிழர்கள் தம்முடைய இலக்கியங்களில் ஏற்றுக்கொண்டிருக்

கிறார்கள். என்றாலும், வாழ்க்கையின் நோக்கத்தில் வடமொழி வழக்கும், தமிழ் வழக்கும் முற்றிலும் வேறுபட்டவை. மிகவும் முக்கியமான வேற்றுமை, வீடு பெறும் நம்பிக்கைக்கான வழி. வடமொழி வழக்குப்படி கடவுளை உணர்வதற்கு ஒவ்வொரு மனிதனும் மனைவி மக்களைத் துறந்து, வீட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்று தவம் புரியத்தான் வேண்டும் என்பது. ஆனால், முத்தி பெறுவதற்கு மனைவி மக்களைத் துறந்து வனத்துக்குப் போக வேண்டியதில்லை; இல்லறத்திலேயே வீடு பெறலாம் என்பது தமிழ் வழக்கு. இதுமட்டுமின்றி துறவறத்தைக் காட்டிலும் இல்லறம்தான் சிறப்பும் பொறுப்பும் உள்ளது; அதனால் மக்கள் மேற்கொள்ள வேண்டியது இல்லறம்தான் என்பது தமிழ் மரபு. தமிழர்கள் துறவறத்தை அவமதிப்பவர்களல்லர். துறவிகளைத் தமிழர்கள் வணங்கிப் போற்றியே வந்திருக்கிறார்கள். ஆனாலும் இல்லறம்தான் மனிதருக்கு இயல்பானதும் சிறப்புடையதும் என்பதே தமிழரின் கொள்கை. இதைத் திருக்குறள் உறுதிப்படுத்துகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்) என்ற நான்கு உறுதிப் பொருள்களில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டும் விரித்துச் சொல்லி, 'வீடு' என்பதைப் பற்றித் திருவள்ளுவர் சொல்லாமல் விட்டு விட்டதற்கு முக்கிய காரணம் இதுதான் என்று ஊகிக்க இடமிருக்கிறது.

> அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
> பிறன் பழிப்பது இல்லாயின் நன்று

என்கிறார் திருவள்ளுவர். இதன் பொருள் : மனிதருக்கு தர்மம் என்று சொல்லப்பட்டதே இல்லற தர்மந்தான்.

ஆனாலும், இல்லறத்தானுக்குப் பிறன் ஆகிய துறவறத்தானை இகழாமல் இருப்பது நல்லது—என்பது.

**ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து**

என்கிறார். இதன் பொருள் : நடத்தவேண்டிய ஒழுங்குடன் நடத்தி, தருமங்களில் தவறாமல் செய்யப்படுகிற குடும்ப வாழ்க்கை, துறவறம் பூண்டு தவம் செய்கிறவர்களைக் காட்டிலும் பொறுப்பும் சகிப்புத்தன்மையும் உள்ளது— என்பது.

மேலும்,

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**
**போஒய்ப் பெறுவது எவன்?**

என்கிறார். இதன் பொருள் : தர்ம வழியில் இல்வாழ்க்கையை நடத்தினால் துறவு பூண்டு வானத்துக்குச் சென்று அடையக் கூடியது என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை—என்பது.

கடைசியாக,

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

என்கிறார். இதன் பொருள்: உலகத்தில் இல்லறம் நடத்தி, வாழவேண்டிய முறையில் வாழ்கின்றவன் (அவன் வேறு முயற்சி ஒன்றும் செய்யாமலேயே) வானத்திலுள்ள தெய்வத்தோடு (இரண்டறக் கலந்துவிடும்படி) சேர்த்து விடப்படுவான். அதாவது வீடு பெறுவான்—என்பது.

இந்தக் கருத்துக்களைப் பின்பற்றியேதான் மகாகவி சுப்ரமணிய பாரதியார், உலகத்தைப் பொய் என்றும் மனைவி மக்களைத் துறந்தால்தான் தெய்வத்தை அணுக

லாம் என்றும் சொல்லப்படுவதைக் கண்டித்து அறம்' பொருள், இன்பத்துடன் இல்லறம் நடத்தவேண்டியதே மக்களுடைய கடமை என்று, உலகத்தில் காணப்படுகிற பொருள்களை நோக்கி அவர் பாடியுள்ள பாட்டிற்கு முன்னுரையாக, வசன நடையில் மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார். அது என்னவென்றால் :

" 'இந்த உலகமே பொய்' என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கி வருகிறது. சந்நியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கட்டும்; அதைப்பற்றி இந்த நிமிஷம் எனக்குள் வருத்தமில்லை. குடும்பத்தி லிருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடு வீட்டில் உச்சரிக்கலாமா? அவச்சொல்லன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப் போன வீடும் வயலும் பொய்யா? தங்கச்சிலைபோல் நிற்கின்றாள் மனைவி; நமது துயரத்துக் கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சி யின் போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தை களை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குல தெய்வம் பொய்யா?

வீடுகட்டிக் குடித்தனம் பண்ணுவோருக்கு மேற்படி சாஸ்திரம் பயன்படாது. நமக்கு இவ்வுலகத்தில் வேண்டி யவை நீண்ட வயது, நோயின்மை, அறிவு, செல்வம் என்ற நான்கும். இவற்றைத் தரும்படி தம்தம் குல தெய்வங்களை மன்றாடிக் கேட்கவேண்டும். எல்லா தெய்வங்களும் ஒன்று. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காணவேண்டும். தெய்வத்தின் ஒளி கண்டால், நான்காம் நிலையாகிய வீடு (மோக்ஷம்)

தானே கிடைக்கும். இது பாரதியாரின் வாக்கு. இது மேலே சொல்லப்பட்ட குறள்களிலுள்ள கருத்தை முற்றிலும் ஒத்திருப்பது குறிப்படத்தக்கது.

வடநாட்டு ஆரியரும் போலிச் சீர்திருத்தக் காரரும் புகுந்து தமிழ் மரபாகிய அறம், பொருள், இன்ப வாழ்க்கைக்குக் கேடு செய்துவிட்டதாக சூரியநாராயண சாஸ்திரியார் கடிந்துரைத்ததும் இதுதான்.

சுவாமிநாதஐயரவர்களுடைய ஒப்பரிய உழைப்பினுல் அழிந்து மறைந்துபோகும் நிலையிலிருந்த சங்க இலக்கியங்கள் சில அச்சாகத் தொடங்கிய பிறகுதான் பல தமிழறிஞர்களுக்குச் சங்க நூல்களைப் பற்றிய கவலையுண்டாயிற்று. அதன்பிறகு பல அறிஞர்கள் தமிழ் வளர்ந்த மூன்று சங்கங்களைப்பற்றி எழுதியும் பேசியும் இருக்கிருர்கள். இவர்கள் எல்லாரும் ஒரு முகமாகச் சொல்லுகின்ற உண்மை 'எண்ணிறந்த சங்க இலக்கியங்கள் இருந்து மறைந்து போயின' என்பது ஒன்று தான். அப்படிச் சங்க இலக்கியங்கள் இல்லாது போனதற்குக் காரணம் என்னவென்பதைப் பலபேரும் பலவிதமாகச் சொல்லுகிருர்கள். சிலர் வடநாட்டாரால் செய்யப்பட்ட அழிவு என்று சீறுகின்ருர்கள்.

ஆனுல் விருப்பு வெறுப்பில்லாமல் அமைதியுடன் ஆராய்ந்து பார்த்தால், வடநாட்டிலிருந்து தமிழ் இலக்கியங்களை அழிக்கவேண்டும் என்று யாரும் வரவில்லையென்பதும் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்துத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தவர்களே தான் தமிழைப் புறக்கணித்திருக்கிருர்கள் என்பதும் விளங்கும்.

அகத்தியர் வடநாட்டுக் காரர்தான். அவர் தமிழைத் தமிழாக வைத்துத்தான் இலக்கணம் செய்திருக்கிருர்.

அவர் இயல், இசை நாடகம், என்ற மூன்று தமிழுக்கும் இலக்கணம் செய்தார் என்று தெரிகிறது. அவர் செய்த இலக்கணத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிற நாடகம், 'நாடகம்' என்ற வடமொழிச் சொல்லால் குறிக்கப்பட வில்லை. அவர் 'கூத்து' என்ற சொல்லைத்தான் கையாண் டிருக்கிறார். அவர்வடமொழிச் சொல்லையோ கருத்தையோ தமிழில் புகுத்தினார் என்று சொல்ல இடமில்லை. தமிழில் அவர் கண்ட இயல், இசை, கூத்துக்குத்தான் இலக்கணம் வகுத்திருக்கிறார்.

இனி, அவருடைய மாணாக்கர் என்று சொல்லப் படுகிற தொல்காப்பியர் வடமொழியை நன்றாக அறிந்த வராக இருந்திருக்கலாம். எப்படியெனில், (அவருடைய இயற்பெயர் நமக்குத் தெரியவில்லை யென்றாலும்) அவ ருடைய தந்தையின் பெயர் 'திரண தூமாக்கினி' என்றும் அவருடைய குலம் 'பார்க்கவ' குலம் என்றும் சொல்லப் பட்டிருப்பதால் அவர் வடமொழியையும் அறிந்த தமிழ் நாட்டு அந்தணராக இருக்கலாம் என்று ஊகிப்பதில் தவறில்லை. அவர் இயற்றிய தொல்காப்பியத்தில் சில வட மொழிச் சொற்களும் இருக்கின்றன. ஆனாலும் அவர் இயற்றிய தொல்காப்பியம் என்ற இலக்கண நூலில் வட மொழி இலக்கணமோ அல்லது வடநாட்டுப் பழக்க வழக் கங்களோ புகுத்தப்பட்டிருப்பதாகச் சொல்ல இடமில்லை. அவர் தமிழ் மொழிக்கு மட்டுமன்றி தமிழருடைய வாழ்க் கைக்கும் இலக்கணம் வகுத்திருக்கிறார். தொல்காப்பியத் துக்கு இணையான இலக்கண நூல் வேறு எந்த மொழி யிலும் இல்லையென்பது பல மொழிகளையும் ஆராய்ந்த அறிஞர்களுடைய தீர்ப்பு.

மேலும் வடமொழி இலக்கணமாகிய 'பாணினி' இலக்கணம் தொல்காப்பியத்துக்குப் பிறகு உண்டானது

என்றும் ஆராய்ச்சிக்காரர்கள் தீர்மானிக்கிறார்கள். அதனால்தொல்காப்பியரும், அவர் காலத்தில்தமிழ்நாட்டில் இருந்த மொழியையும் பழக்க வழக்கங்களையும் ஒட்டித் தான் இலக்கணம் செய்திருக்கிறாரேயன்றிப் பிறநாட்டு மொழியையோ பழக்க வழக்கங்களையோ தமிழ்மொழியில் புகுத்தியவரல்ல.

தொல்காப்பியம் வேதவியாசர் பாரதக் கதையைச் சொன்னதற்கு முற்பட்டது என்பதை "இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாசர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோருணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்" என்று தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் எழுதியிருப்பதால் அறியலாம்.

எனவே அகத்தியரும் அவருடைய மாணாக்கராகிய தொல்காப்பியரும் அவர்களுக்கு முன்பே தென்னாட்டிலிருந்த தமிழை வளமுள்ளதாக்கினார்களேயன்றி வேறு எங்கிருந்தும் கொண்டுவந்த எதையும் அதில் புகுத்தினவர்களல்லர்.

உயர்திரு சுவாமிநாத ஐயரவர்கள் அகத்தியரைப்பற்றி பற்றி 'தழற்பொலி விழிக்கடவுள் தந்த தமிழ் தந்தான்' என்று கம்பர் பாடியிருப்பதிலுள்ள 'தந்தான்' என்ற பதத்துக்கு விளக்கமாக, "இவர் வருவதற்கு முன்னமே இந்நாட்டிலிருந்த தமிழையும் அதன் இலக்கணத்தையும் இவர் தந்தாரென்று கூறியிருப்பது உபசார வழக்கு; இங்ஙனம் கூறியிருத்தற்குக் காரணம் தமிழ் பாஷைக்கு அக்காலத்திலிருந்த ஒரு மெலிவைப் போக்கி இவர் இலக்கணம் செய்ததும், மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லிப் பாதுகாத்ததையுமே. பிரமாஸ்திரத்தால் தங்களுக்கு நேர்ந்திருந்த ஆபத்தைச் சஞ்சீவி கொணர்ந்து நீக்கிய

அனுமானை நோக்கி இராமர் 'இன்று நாங்கள் உன் வயிற்றிற் பிறந்தோம்' என்று கூறினார் போல்வது இது'' என்று சொல்லுகிறார். இது சங்ககால இலக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் தலைசிறந்தவராகிய ஐயரவர்களின் வாக்கு.

எனவே அகத்தியர் காலத்துக்கு முன்பே தமிழ் மொழி சிறப்புற்றிருந்தது என்பது தெளிவாகின்றது.

இனி, தென்மொழியான தமிழுக்கு எப்போது வட மொழித் தொடர்பு உண்டானது என்பதை ஆராய்வோம். இந்த ஆராய்ச்சி மிகவும் கடினமாக இருக்கிறது. தமிழைப் பற்றிய சரித்திரமே அகத்தியரைக் கொண்டுதான் தொடங்குகின்றது. அகத்தியரே தமிழைக் கற்றுக் கொண்டது 'மாதொரு பாகனாகிய' பரமசிவனிடத்தி லிருந்து என்பதனாலும். அகத்தியர் ஏற்படுத்திய தலைச் சங்கத்தில் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்' 'குபேரன்' முருகன் முதலானவர்கள் அங்கத்தினர்களாக இருந் தார்கள் என்பதினாலும் தலைச்சங்க காலத்திலேயே வட மொழித் தொடர்பு தொடங்கியிருக்க வேண்டும் என்று எண்ணவேண்டியிருக்கிறது. ஏனெனில் திரிபுரம் எரித்த கதையும் மாதொரு பாகனான கதையும் வடமொழிப் புராணக் கதைகள்.

ஆனால் தலைச் சங்கத்தை உண்டாக்கிய அகத்தியர் இயற்றிய இலக்கணம் என்று சொல்லப்படுகிற 'அகத் தியம்' என்ற நூலில் இருந்ததாக நமக்குக் கிடைத்துள்ள சூத்திரங்களில் வடமொழிக் கலப்பு இல்லை என்பது பெரும்பாலும் ஆராய்ச்சிக்காரரின் தீர்ப்பு.

சில ஆராய்ச்சிக்காரர்கள் அகத்தியத்தில் வடமொழிச் சொற்கள் இருப்பதாக வாதிக்கிறுர்கள். அதற்கு ஆதாரமாக,

பலவின் இனத்தையும் ஒன்றெனப் படுமே
அடிசில் புத்தகம் சேனை அமைந்த
கதவம் மாலை கம்பலம் அனைய

என்ற சூத்திரத்தைக் காட்டுகிறுர்கள். (இதன் பொருள்: பல பதார்த்தங்கள் சேர்ந்த உணவை 'சாப்பாடு' என்ற ஒரு சொல்லால் குறிப்பது போலவும், பல ஏடுகளால் ஆக்கப்பட்ட ஒரு நூலைப் 'புத்தகம்' என்ற ஒருமையில் குறிப்பது போலவும், பல வீரர்கள் சேர்ந்த கூட்டத்தை 'சேனை' என்று ஒருமையில் சொல்லுவது போலவும், பல பலகைகளும் ஆணிகளும் சேர்ந்ததைக் 'கதவு' என்று ஒருமையில் குறிப்பதைம் போலவும், பல மலர்கள் சேர்ந்து உண்டானதை 'மாலை' என்பதுபோவும், எண்ணிறந்த உரோமங்கள் சேர்ந்துள்ள விரிப்பைக் 'கம்பலம்' என்பது போலவும் ஒரே இனத்தைச் சேர்ந்த பலவற்றின் தொகுதியை ஒருமையாகச் சொல்லலாம்— என்பது).

'இந்த சூத்திரம் 'அகத்தியம்' என்ற இலக்கணத்தைச் சேர்ந்தது என்று கொண்டு அகத்தியர் காலத்திலேயே புத்தகம், சேனை, கம்பலம் என்ற வடசொற்கள் தமிழில் புகுந்துவிட்டதாகச் சிலர் சொல்வதுண்டு.

ஆனல் பெரும்பாலும் ஆராய்ச்சிக்காரர்கள் இந்த சூத்திரம் தலைச்சங்கத்தை உண்டாக்கிய அகத்தியர் செய்ததாக இருக்க முடியாது; பிற்காலத்தில் யாரோ அகத்தியர் செய்ததென்று செறுகிவிட்டதாகத்தான்

இருக்கவெண்டும் என்று சொல்லுகிருர்கள். இவர்கள் சொல்லுவதில் உண்மை இருக்குமென்றுதான் எண்ண வேண்டும். ஏனென்ருல் 'அகத்தியம்' என்ற இலக்கண நூலில் 'பேரகத்தியம்' என்றும் 'சிற்றகத்தியம்' என்றும் இரண்டு நூல்கள் இருந்திருப்பதாகத் தெரியவருகிற தாகவும், ஆனல் அந்த இரண்டு 'அகத்திய'ங்களைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை என்றும் உயர் திரு சுவாமிநாத ஐயரவர்கள் சொல்லுகிருர்கள். அதனல் மேலே சொல்லப்பட்ட சூத்திரம் ஆதியில் செய்யப்பட்ட 'அகத்தியம்' என்ற இலக்கணத்தில் இல்லாமல் பிற்காலத்தில் உண்டான 'சிற்றகத்தியம்' என்பதைச் சேர்ந்ததாகத்தான் இருக்கவேண்டும் என்பதில் உண்மையிருக்கலாம்.

இதனல் அகத்தியர் ஏற்படுத்திய தலைச்சங்க காலத்தில் வடநாட்டு மொழியையும் அதிலிருந்த புராணக் கதைகளையும் அறிந்த புலவர்கள் இருந்திருக்கலாம் என்ருலும் தென்மொழியில் வடமொழிக் கலப்புண்டானது அக்காலத்தில் அல்லவென்று அனுமானிக்கலாம். ஆனல், அதை நிச்சயிக்கப் போதிய ஆதாரம் இல்லை.

# தொல்காப்பியம்

தொல்காப்பியம் என்ற தமிழ் இலக்கண நூல் இயற்றப்பட்ட காலம், என்று சொல்லப்படுகிற இடைச் சங்க காலத்தில் தென் மொழியில் வடமொழி கலக்கத் தொடங்கியிருப்பது தெரிகிறது. தொல்காப்பியம் ஒன்று தான் தலைச்சங்கம் இடைச்சங்கம் என்ற இரண்டு சங்கங்களிலும் அரங்கேறிய இலக்கியங்களுள் முழு உருப்படியாகக் கிடைத்துள்ள சங்க இலக்கியம். அகத்தியம் என்ற இலக்கண நூலைப்பற்றிய இரண்டொரு சூத்திரங்களே பிற்காலத்திய உரையாசிரியர்கள் மேற்கோள்களாக எழுதியிருப்பதால் காணக்கிடைத்தன. அதனால் அகத்தியம் என்ற இலக்கண நூலில் இருந்தது என்ன, இல்லாதது என்ன என்று நிச்சயிக்க ஆதாரமில்லை. அது இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் மிக்க விரிவான இலக்கணமாக இருந்திருக்கும் என்பது அனுமானந்தான். அத்துடன் ‘பேரகத்தியம்’ என்றும் ‘சிற்றகத்தியம்’ என்றும் இரண்டு அகத்திய இலக்கணங்கள் இருந்ததாகச் சொல்லப்பட்டிருப்பதன் உண்மை என்னவென்பதும் தெரியவில்லை.

தொல்காப்பியத்தைப் பற்றி அப்படிப்பட்ட ஐயம் திரிபுகளுக்கு இடமில்லை. முழு நூலும் கிடைத்திருக்

கிறது. இது தமிழ் மொழிக்கும் தமிழர் வாழ்க்கை முறைக்கும் மிகத் தெளிவான இலக்கணம் சொல்லு கின்றது. மொழியைப்பற்றிய இலக்கண நூல்களுக்குள் இதற்கு இணையான நூல் வேறு எந்த மொழிக்கும் இல்லையென்பது பல பேரறிஞர்களின் தீர்ப்பு. இதிலுள்ள எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் ஒப்பரிய தனிச் சிறப்புடையனவென்று தெரியவரும். அதைப் பற்றிச் சிறிது பின்னால் சொல்லுவோம்.

தொல்காப்பியத்தை இயற்றிய பேரறிஞரின் இயற் பெயர் இன்னதென்று எங்கும் சொல்லப்படவில்லை. 'தொல்காப்பியர்', 'தொல்காப்பிய முனிவர்' என்ற பெயர் களால்தான் அவர் குறிக்கப்படுகிறார். இவர் அகத்தியரின் பன்னிரண்டு மாணாக்கருள் முதல்வர் என்று சொல்லப் படுகிறது. தொல்காப்பியம் இயற்றப்பட்ட தென்னும் இடைச்சங்க காலத்திலும் அகத்திய முனிவர் தொல் காப்பிய முனிவருடன் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் சொன்னது வெறும் புராணக் கதை என்றுதான் எண்ணப்படும்.

தொல்காப்பிய முனிவருடன் அகத்திய முனிவரும் இருந்தாரா என்பது எப்படியானாலும், தொல்காப்பிய முனிவரிடம் அகத்திய முனிவர் செய்த அகத்தியம் என்ற இலக்கணம் இருந்திருக்க முடியும். தொல்காப்பியர் அவருடைய ஆசானாகிய அகத்தியர் கற்பித்த இலக்கணத் தையும் ஒட்டித்தான் தம்முடைய இலக்கணத்தைச் செய்திருப்பர். மேலும் தொல்காப்பியர் 'ஐந்திரம்' என்ற ஒரு இலக்கண நூலையும் ஐயந்திரிபறக் கற்றறிந் தவர் என்பது.

மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்தப் படிமையோனே

என்ற பாடலால் தெரிய வருகிறது. இந்தப் பாடல் தொல்காப்பியம் என்ற நூலுக்கு முன்னுரையாகப் பனம் பாரனார் என்ற புலவர் பாடியது. இதன் பொருள்:— கடல் சூழ்ந்த உலகில் ஐந்திரம் என்ற இலக்கண நூலின் கல்வி நிறைந்தவனாகத் தன் பெயர் தொல்காப்பியன் என்று தோன்றச் செய்து பெரும் புகழ் கொண்டவனாகியத் தவ வடிவத்தோனே—என்பது.

இதிலுள்ள 'ஐந்திரம்' என்ற சொல் ஐந்திர வியா கரணம் என்னும் வடமொழி இலக்கண நூலைக் குறிப்பது என்று சொல்லப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இந்த ஐந்திர இலக்கண நூலைக் கண்டவர் யாருமில்லை. ஐந்திரம் என்ற பெயரைத் தவிர அதைப் பற்றி வேறொன்றும் அறிய முடியவில்லை. அந்த இலக்கணம் வடமொழி இலக்கணமா, தமிழ்மொழி இலக்கணமா என்பதும் தெரியவில்லை. இந்த இலக்கணத்தைச் சிலர் 'ஐந்திர வியாகரணம்' என்று வடமொழிச் சொற்களால் குறிப்பிடுவதால் அது வடமொழியில்தான் இருந்திருக்கும் என்று தீர்மானித்துவிட முடியாது. இடைச் சங்கத்தி லேயே 'மாபுராணம்' என்றும் 'பூதபுராணம்' என்றும் இரண்டு தமிழ் இலக்கண நூல்கள் இருந்ததாகச் சொல் லப்படுகிறது. 'மாபுராணம்', 'பூதபுராணம்' என்ற இரண்டு பெயர்களும் வடமொழிப் பெயர்கள் என்பதில் ஐயமில்லை. அதனால் இந்த ஐந்திரம் என்பதும் தமிழில் இருந்த இலக்கணம்தானோ என்று ஐயங்கொள்ள இட மிருக்கிறது. மேலும் வடமொழி இலக்கணமாகிய

பாணினி இலக்கணம் தொல்காப்பிய இலக்கணத்துக்குப் பிற்பட்டது என்பது நிச்சயமானதால் பாணினிக்கு முன்னால் ஒரு வடமொழி இலக்கணம் இருந்ததா என்பதும் சிந்திக்கத்தக்கது.

ஐந்திரம் என்பது வடமொழி இலக்கணந்தான் என்றே வைத்துக்கொண்டாலும் தொல்காப்பியம் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றி எழுதப்பட்டதல்ல என்பதை தொல்காப்பியத்தின் மூலத்தை மட்டும் படித்தால் தெரிந்து கொள்ளலாம். ஆம்; தொல்காப்பியத்துக்கு எழுதப்பட்டுள்ள உரைகளைக் கொண்டு தொல்காப்பியரை அளக்கக் கூடாது. ஏனென்றால் தொல்காப்பியத்துக்கு உரைஎழுதியவர்களெல்லாம் தொல்காப்பிய முனிவருடைய காலத்துக்கு ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு (1500) ஆண்டுகளுக்குப் பின்னால் தோன்றியவர்கள். இந்த 1500 ஆண்டுகளில் தென்மொழியில் வடமொழிச் சொற்களும் கருத்துக்களும் ஏராளமாகக் கலந்துவிட்டன. உரையாசிரியர்கள் அவரவர் காலத்தில் தமிழில் கலந்துவிட்டிருந்த வடமொழிக் கருத்துக்களைப் புகுத்தித்தான் மூலத்தின் ஆசிரியர் எண்ணியிருக்க முடியாதனவற்றையெல்லாம் உரைகளில் கூட்டியிருக்கிறார்கள்.

[இதைப்போலவே திருக்குறளுக்கு உரை எழுதினை பலரும் திருவள்ளுவர் வாழ்ந்ததற்கு நெடுங்காலத்துக்குப் பின்னால் தோன்றியவர்கள். மிகச் சிறந்த உரை செய்த பரிமேலழகர் திருவள்ளுவருக்கு 1250 வருடங்களுக்குப் பின்னால் தோன்றியவர்.]

எனவே, தொல்காப்பியத்துக்கு உரை எழுதினவர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்துக்கு 1500 ஆண்டு முன்னால் இருந்த உண்மைகளை ஆராயாமல்தான் உரை

செய்திருக்கிறார்கள் என்பது தவறல்ல. அவர்கள் தாம் கற்றுக்கொண்ட பாடங்களைக் கொண்டு உரை மட்டும் எழுதினவர்களேயன்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்தவர்களல்ல. ஆராய்ச்சி என்பது முற்றிலும் வேறு. ஆராய்ச்சி செய்கின்றவர்கள் பிறர் சொல்லுவதை அப்படியே ஒப்புக் கொள்பவர்கள் அல்ல. பலர் சொல்வதையும் வைத்துக் கொண்டு உண்மையைக் கண்டறிய முயல்கின்றவர்கள். பிறர் சொன்னதில் பிழையிருந்தால் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டவர்கள்.

இப்படி நாம் சொல்லுவதால் உரையாசிரியர்களைக் குறைத்துக் கூறுவதாக எண்ணிவிடக் கூடாது. அவர்கள் செய்துள்ள உரைகள் முற்றிலும் தவறு என்று சொல்வதாகவும் கொள்ளக்கூடாது. அவர்கள் அனைவரும் நம்முடைய வணக்கத்துக்குரிய மிகப் பெரியவர்கள்.

ஆனாலும் உரையாசிரியர்கள் பல இடங்களில் மூல இலக்கியத்தின் ஆசிரியர்கள் எண்ணியிருக்க முடியாத கருத்துக்களையும் அவர்கள்மீது சுமத்தியிருக்கிறார்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது. அப்படிப்பட்ட இடங்களில் உரையாசிரியர்மீது குறை கூறுவது குற்றமாகாது.

இதற்கு ஒரு உதாரணம் இங்கேயே எடுத்துக் காட்டுவது மிகவும் பயனுள்ளது. எல்லாருக்கும் எளிதில் புரியக்கூடிய உதாரணம் ஒன்றைப் பார்ப்போம் :

**பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற**

என்பது திருக்குறளில் 'மக்கட்பேறு' என்ற அதிகாரத்தின் முதற் குறள். இதற்கு பரிமேலழகரே சொல்லும் பதவுரை என்னவென்றால் :

'பெறுமவற்றுள்=ஒருவன் பெறும் பேறுகளுள்: அறிவு அறிந்த மக்கள் பேறு அல்ல பிற=அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிறபேறுகளை; யாம் அறிவது இல்லை=யாம் மதிப்பதில்லை,'—என்பது பதவுரை.

இதற்கு விளக்க உரையாகப் பரிமேலழகர் தருவது:—'அறிவது' என்பது அறிதலைச் செய்வதெனை அத்தொழிலின் மேனின்றது. காரணமாகிய வுரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தே விடுமாதலான், அத் துணிவுபற்றி 'அறிந்த'வென இறந்த காலத்தாற் கூறினர். 'அறிவறிந்த' என்றதனுல் 'மக்கள்' என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது. இதனுல் புதல்வர்ப் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது."

இந்தப் பத உரையையும் விளக்க உரையையும் ஆராய்ச்சிக் கண்ணுடன் கூர்ந்து பாருங்கள்.

குறளிலுள்ள எந்தப் பதமாவது 'மக்கள்' என்பது ஆண் மக்களைத்தான் குறிக்கும், பெண் குழந்தைகளைக் குறிக்காது என்று பொருள் தருமா? மக்கள் என்பதற்குப் 'புதல்வர்' (ஆண் குழந்தைகள்) என்ற பொருள் எப்படி வரும்? மக்கள் என்பது பொதுப்பால் அல்லவா? மேலும் 'அறிவறிந்த' என்பதினுல் 'மக்கள்' என்பது பெண்ணை ஒழித்து நின்றது என்பது திருவள்ளுவருடைய கருத்தாக இருக்க முடியுமா?

இது நிற்க, இந்த அதிகாரத்துக்கு முன்னுரையாகப் பரிமேலழகர் எதற்காக ஆண்மக்கள் வேண்டும் என்று சொல்லுவதைப் பாருங்கள்:—

"(புதல்வரைப் பெறுதல்). அஃதாவது இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானுமல்லது இறுக்கப் படாமையின் அக்கடனிறுத்தற் பொருட்டு நன் மக்களைப் பெறுதல்." என்பது.

இதில், இருபிறப்பாளர்களாகிய பிராமணர், க்ஷத்திரியர் வைசியர் ஆகிய மூன்று வருணத்தார்கள் மட்டுந்தான் தென்புலத்தார் கடன் செய்யத் திவசம் கொடுக்க வேண்டியவர்களானதால் அந்த மூன்று வருணத்தார்களே ஆண் மக்களைப் பெற விரும்ப வேண்டியவர்கள்போல் சொல்லப் படுகிறது. (பிதுர்க்கடன் என்ற திவசம் செய்யப் பெண்மக்களுக்கு 'அறிவறிந்த' உரிமை இல்லை) 'இருபிறப்பாளர் மூவரானும்' என்றதினால் நான்காம் வருணத்தானாகிய சூத்திரன் தென்புலத்தாருக்குக் கடன் செய்ய வேண்டியவனல்ல என்பது மட்டுமல்லாமல் அவனுக்கு ஆண் குழந்தை இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை என்பது மறைமுகமாகச் சொல்லப்படுகிறது.

இது திருக்குறளுக்குப் பொருந்துமா ? இந்தக் கருத்துக்களைத் திருவள்ளுவர் சொன்னதாகச் சுமத்தலாமா? இப்படிப்பட்ட சாதி, மதச் சடங்கு சம்பிரதாயங்களுக்குத் திருக்குறளில் தினையளவாவது இடமிருக்கிறதா ? திருவள்ளுவர் 'மக்கட்பேறு' என்று அதிகாரத்திற்குப் பெயரிட்டு, அதிலுள்ள குறள்களுள் ஒன்றிலாவது 'புதல்வர்' என்ற பதத்தைச் சொல்லாமல் 'மக்கள்' என்ற பொதுப்பால் சொல்லையே சொல்லியிருக்க, அதிகாரத்தின் பெயரையே 'புதல்வரைப் பெறுதல்' என்று மாற்றிக்கொண்டு, 'மக்கள்' என்ற பதத்திற்குப்

'பெண்ணொழிந்த ஆண்மக்கள் மட்டும்' என்று வலிந்து பொருள் கூட்டிக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பரிமேலழகர் வடமொழியிலும் சிறந்த பண்டிதர்–வடமொழி சாத்திரங்களைப் பின்பற்றிய சடங்கு சம்பிரதாயங்களைத் தம் வாழ்க்கையில் மேற்கொண்டு ஒழுகிய தமிழ் அந்தணர். அவருடைய வடமொழி அறிவையோ, வடமொழி சாத்திரங்களில் அவருக்கிருந்த நம்பிக்கையையோ நாம் குறை கூறவில்லை; முன்னோர்களுக்குத் திவசம் செய்வதற்கு ஆண் குழந்தைகளைப் பெற வேண்டும் என்பது சரியா அல்லவா என்ற ஆராய்ச்சியிலும் நாம் இறங்கவில்லை.

நாம் சொல்லப் புகுந்தது, திருக்குறள் மூலத்தில் இல்லாதனவும், திருவள்ளுவருடைய கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமானவையுமான கருத்துக்களைத் திருவள்ளுவர் சொல்லுவதாக உரைகளில் புகுத்தப்பட்டிருக்கின்றன என்பது மட்டுந்தான். இது, நூலாசிரியர் வாழ்ந்த காலத்துக்கு ஆயிரத்து இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு அப்புறம் வந்த உரையாசிரியர் அவர் காலத்தில் பரவியிருந்த கருத்துக்களை உரைகளிற் புகுத்தியிருப்பதற்கு உதாரணம். இப்படிப் பல உதாரணங்கள் காட்டலாம்.

..............................................................

தொல்காப்பியத்திற்கு உரை செய்தவர்கள் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார், அரசஞ் சண்முகனார் என்பவர்கள். இவர்கள் எல்லாரும் மிகச் சிறந்த அறிஞர்களே. என்றாலும் இவர்களுடைய உரைகளைத் தனித் தனியே ஊன்றிப் பார்க்க முடிந்தால் இவர்கள் வாழ்ந்த கால

வேறுபாடுகளுக் கிணங்கக் கருத்து வேறுபாடுகளும் அங்கங்கே காணமுடியும்.

தொல்காப்பிய மூலத்தை மட்டும் ஆராய்ந்து பார்த்தால் அது எந்த பிறமொழி இலக்கணத்துக்கும் தொடர்புடையது அல்லவென்பதும் வேறு எந்த 'மொழி' இலக்கணத்துக்கும் இல்லாத தனிச்சிறப்புக்கள் உள்ளதென்பதும் தெரியவரும். தொல்காப்பிய முனிவர் அவருக்கு முன்னால் இருந்த தமிழிலக்கணங்களைத் தொடர்ந்து, அவர் காலத்தில் தமிழ் நாட்டில் வழங்கிய மொழியையும் சமுதாய வழக்கங்களையும் ஆராய்ந்து அவற்றிற்கிணங்கத்தான் இலக்கணம் செய்திருக்கிறார். இந்த உண்மையைத் தொல்காப்பியத்துக்கு முன்னுரை பாடிய பனம்பாரனார் மிகத் தெளிவாகச் சொல்லுகிறார். அது என்னவெனில்,

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி

என்பது. இதன் பொருள்: வடக்கில் வேங்கடமலை, தெற்கில் குமரிமுனை ஆகிய இவற்றுக்கிடையில் தமிழ் பேசுகின்ற நல்ல நாட்டில், பொதுமக்களுடைய பேச்சு, புலவர்கள் இயற்றிய செய்யுள்கள் ஆகிய இரண்டிலும் வழங்கிய எழுத்தையும் சொல்லையும் பொருளையும் ஆராய்ந்தறிந்து—தொல்காப்பியர் இலக்கணம் செய்தார் என்பதாம். இதனால் தமிழ்நாட்டில் ஏற்கனவே வழங்கி வந்த எழுத்துக்கும் சொல்லுக்கும் பொருளுக்கும்தான் இலக்கண வரையறைகள் உறுதிப்படுத்தப்பட்டனவேயன்றி வேறு எங்கிருந்தும் எதையும் புகுத்தவில்லை என்பது தெளிவாகிறது.

ஆனாலும் தொல்காப்பிய முனிவருடைய அபூர்வ மாகிய சொந்த புத்திகளும் சேர்ந்துதான் அந்த இலக் கணத்தை இவ்வளவு நிறையுள்ளதாக்கி யிருக்க வேண் டும். இந்த இலக்கணத்தின் ஒப்பரிய சிறப்புகளைப்பற்றிப் பல ஆராய்ச்சிக்காரர்கள் பலபடியாகப் புகழ்ந்திருக்கி ருர்கள்.

இதிலுள்ள எழுத்தியல் பஞ்சபூத தத்துவத்தையும் உடல்—உயிர் தத்துவத்தையும், வினைப் பயன்களின் தத்துவத்தையும் தெய்வ தத்துவத்தையும் உள்ளடக்கிச் செய்யப்பட்டிருப்பதைப் பற்றிக் காலஞ் சென்ற உயர் திரு. ப. வெ. மாணிக்க நாய்க்கர் என்ற அறிஞர் 40 ஆண்டுகளுக்கு முன்னல் மிகவும் வியக்கத்தக்க ஆராய்ச்சி நூல் ஒன்றை வெளியிட்டிருக்கிருர். அதற்கு ஆதரமாகத் தொல்காப்பிய சூத்திரங்களைத் தக்க மேற் கோள்களுடன் விளக்கியிருக்கிருர். திரு. மாணிக்க நாய்க்கரவர்கள், தமிழ் எழுத்துக்களாகிய அகர, உகர, மகரங்களின் வரிவடிவத்தில் தெய்வ இரகசியம் அடங்கி யிருப்பதாக விளக்குகின்ருர். இதற்கு அவர் காட்டும் பல ஆதாரங்களில்,

அரி வரி யிரகசியம் அறிந்து கூறவே
கரி முகனிருபதம் கருத்து ளிருத்துவாம்

என்ற அரிச்சுவடியிலுள்ள விநாயக வணக்கமும் ஒன் ருகும். இந்த அரிச்சுவடி பழங்காலத்திலிருந்து குழந்தை களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கத் தொடங்கும் போது குழந்தைகள் சொல்ல வேண்டிய சூத்திரம். இது வெகு சமீப காலம் வரையிலும் ஆரம்பப் பள்ளிக்கூடங் களில் பழக்கத்தில் இருந்தது. இந்த சூத்திரத்திலுள்ள 'அரி வரி இரகசியம்' என்பதுதான் தமிழ் எழுத்துக்க

ளாகிய அ, உ, ம என்பவற்றின் வரிவடிவத்திலுள்ள தெய்வ இரகசியம் என்று சுவைதர விளக்குகின்றார். திரு. நாய்க்கர் காட்டுகின்ற ஆதாரங்களையும் சொல்லு கின்ற நியாயங்களையும் பார்த்தால், தமிழ் மொழியானது வடமொழி வேதகாலத்துக்கு முன்னாலேயே தெய்வ தத்துவங்களை உணர்த்துவதாக இருந்ததோ என்று எண்ணச் செய்கிறது. அத்துடன் 'ஓம்' என்ற பிரண வத்தில் வடிவமும் தெய்வத்தன்மையும் தமிழிலிருந்து தான் பிற்காலத்தில் வடமொழிக்குப் போனதோ என்றும் எண்ணச் செய்கிறது. இதற்குச் சான்றாகத் திரு. மாணிக்க நாய்க்கரவர்கள் பிற்காலத்திய புலவர் யாரோ, தொல் காப்பியத்தை விளக்குவதுபோல் பாடியுள்ள,

> சுட்டத் தகுபொருள் மூலப்பொருளே
> அவையுட் பதிதான் அகாரமாகும்
> உகரம் பசுவாம்; மகார மெய்ப் பாசமாம்
> மகார மெய்யை இயக்கும் இகரத்துடன்
> அ, இ, உ அம்மூன்றும் சுட்டே

என்ற சூத்திரத்தை மேற்கோளாக விளக்குகின்றார்.

இதில் கவனிக்கத்தக்கது இதிலுள்ள பதி, பசு, பாசம் என்ற சொற்களே. இந்த மூன்றும் மெஞ்ஞான தத்துவச் சொற்கள். அகாரத்தைப் பதி என்றும், உகா ரத்தைப் பசு என்றும் மகாரத்தைப் பாசம் என்றும், மகாரம் தனியே இயங்கமுடியாத மெய்யெழுத்துக்களைக் குறிக்கு மானதால், மெய்யெழுத்துக்களை இக், இங், இச்...என்று இயங்கச் செய்வது இகாரம் ஆனதால் மகரத்துக்குப் பதிலாக இகாரம் சேர்ந்த அ, இ, உ என்று மூன்றும் சுட்டெழுத்துக்கள் என்பது பொருள். பதி, பசு, பாசம் என்ற மூன்றாலும் 'சுட்டத் தகுபொருள் மூலப்

பொருளே' என்று பரம்பொருளைச் சுட்டிக் காட்டப் படுகிறது. இதில் பரமாத்மா, ஜீவாத்மா, மாயை என்ற தத்துவ நுணுக்கங்கள் அடங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்தச் சூத்திரத்துடன் தொல்காப்பிய சூத்திரங்களைச் சேர்த்துக் காட்டி ஆராய்ச்சி செய்து, தமிழ் மொழியின் உயிர், மெய் என்ற எழுத்துக்களும், அவற்றின் புணர்ச்சி, சந்தி, விகாரம் முதலியனவும் உயிர், உடல், ஆன்மா என்பனவற்றின் இயல்புகளோடு மாறுத உண்மைகளை உள்ளடக்கியதாகத் தொல்காப்பியம் இயற்றப் பட்டிருப்பதாகத் திரு. மாணிக்க நாய்க்கர் பல ஆதாரங்களுடன் விளக்குகின்றுர்.

இந்த ஆராய்ச்சி நூலுக்கு முன்னுரை தந்துள்ள நீதிபதி உயர்திரு டி. சதாசிவ ஐயரவர்கள் இதை மிகவும் ருசிகரமான ஆராய்ச்சியென்று வாழ்த்தியிருக்கிருர். மேலுள்ள சூத்திரத்தில் காணப்படுகிற பதி, பசு, பாசம் (பரமாத்மா, ஜீவாத்மா, மாயை) என்ற தத்துவங்களைப் பற்றிச் சொல்லுகின்ற பழங்காலத் தமிழ் நூல் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட தத்துவங்களைப்பற்றிய நூல்கள் தென்ஞட்டில் உண்டானதெல்லாம் சங்கரர், இராமனுஜர், மெய்கண்ட தேவர் மூதலானவர்கள் தோன்றிய பிறகுதான் என்பது சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுவது. இவர்கள் மூவரும் குறைந்த பட்சமாக 2200 ஆண்டுகள் தொல்காப்பியர் காலத்துக்குப் பின்ஞல் தோன்றியவர்கள் என்பதும் ஆராய்ச்சியின் தீர்ப்பு.

அதுமட்டுமன்றி தொல்காப்பியம், வடமொழியில் கபிலர் இயற்றிய 'சாங்கிய தத்துவ' நூலுக்கும் பதஞ்சலி

முனிவர் இயற்றிய யோக நூலுக்கும் முற்பட்டது என்பதும் ஆராய்ச்சிக்காரரின் தீர்ப்பு. (இவை இரண்டும் ஆன்ம தத்துவ நூல்கள்.)

தொல்காப்பியமோ,'வேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்' செய்யப் பட்டது. அதனுல் தொல்காப்பிய முனிவருக்கு முன்னுலேயே இந்த பதி, பசு, பாசம் என்பது போன்ற தத்துவம் தமிழில் இருந்திருக்கலாமோ என்றும் எண்ணச் செய்கிருர், மாணிக்க நாய்க்கர்.

மாணிக்க நாய்க்கர் ஆராய்ச்சியை விரித்துரைக்க இங்கே இடமில்லை. அது தனியாகப் படித்து இன்புறத் தக்கது.

இனித் தமிழ் மொழிக்குள்ள இலக்கணம் பிறமொழி இலக்கணங்களுக்கு எப்படி வேறுபட்டது என்பதைக் காட்ட இரண்டொரு உதாரணங்களைப் பார்ப்போம் :

எல்லா மொழிகளிலும உயிரெழுத்து மெய்யெழுத்து போன்ற இரு வகை எழுத்துக்கள் உண்டு. ஆனுல் தமிழில் உயிரெழுத்து என்ருல் என்ன, மெய்யெழுத்து என்ருல் என்ன? ஏன் எழுத்துக்களை 'உயிர்' என்றும் 'மெய்' என்றும் குறிப்பிட்டிருக்கிருர்கள் என்பது சிந்திக்கத் தக்கது. உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்கும் தமிழில் இருக்கிறது போன்ற சுத்தமான வரையறை, மிகவும் சரியாகச் செய்யப்பட்டது என்ற காரணப் பெயருடைய (சமஸ்கிருதம் என்ற) வடமொழிக்கும் இல்லை. எப்படியெனில் :

'உயிர்' என்பதற்கு 'ஆவி' அல்லது 'மூச்சு' என்பது பொருள். (உயிர்ப்பு என்ருல் மூச்சு விடுதல்).

'மெய்' என்பதற்கு உடம்பு, அல்லது உடல் என்பது பொருள்.

உயிர் தானாக இயங்கக் கூடியது. ஆனால் உடல் உயிரில்லாமல் தானாக இயங்க முடியாது. இது மாற்ற முடியாத உண்மை.

தமிழில் உள்ள அ, ஆ, இ, ஈ......ஆகிய பனிரண்டு உயிரெழுத்துக்களும் உடலுறுப்புகளாகிய தொண்டை, நாக்கு, மூக்கு, அண்ணம், பல், உதடுகள் முதலிய வற்றின் உதவியில்லாமல் வெறும் மூச்சால் மட்டும் ஒலிக்கக் கூடியவை.

ஆனால் மெய்யெழுத்துக்களாகிய இக், இங், இச், இஞ், இட்......என்பன ஒரு உயிரெழுத்து சேராமல் ஒலிக்கக் கூடியவையல்ல.

வட மொழியில் 'ர்ரு', 'அம்', 'அஹா, என்ற மூன்றும் உயிரெழுத்துக்களோடு சேர்த்துச் சொல்லப் படுகின்றன. இந்த மூன்று எழுத்துக்களும் முறையே நாக்கு, உதடுகள், அடித்தொண்டை ஆகிய உடலுறுப்பு களின் உதவியில்லாமல் மூச்சால் மட்டும் உச்சரிக்க முடியாதவை. உயிர் சேர்ந்தால்தான் உடல் இயங்க முடியும் என்ற உண்மைக்கு மாறாக, இங்கே உடல் சேர்ந்தால்தான் உயிர் இயங்க முடியும் என்பதாகி விடுகிறது. இதை நாம் எடுத்துக் காட்டுவது, தமிழ் எழுத் துக்களின் இலக்கணம் எவ்வளவு உறுதியான உண்மை களின் மீது ஒழுங்காக வரையறுக்கப்பட்டிருக்கின்றது என்பதை விளக்கவும், தமிழ் இலக்கணம் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியது அல்ல வென்பதைக் காட்டவுமேயன்றி வடமொழியை இகழ்வதற்கல்ல.

தமிழில் 'ஃ' என்ற ஆய்த எழுத்து இருப்பதைப் பார்க்கிறோம். இது உயிரெழுத்துக்களோடு சேர்த்துக் கற்பிக்கப்படுகிறது. ஆனாலும் இது உயிரெழுத்துக் களைப் போலத் தனியே இயங்கத்தக்கதல்ல. ஒரு நீண்ட கோடு கிழிக்கப்பட்டால் அது பல புள்ளிகள் சேர்ந்து உருவானது என்பது உண்மை. இந்தக் கோடு கண் ணுக்கும் புலனாகலாம். ஆனால் இந்தக் கோட்டின் ஆரம் பத்தில் உள்ள ஒரு புள்ளி மட்டும் தனியே நின்றுவிட்டு மற்றப் புள்ளிகளும் சேர்ந்து கோடாக நீளாவிட்டால் அது கண்ணுக்குப் புலப்படாது. அப்படிப் போல உயிரெழுத்தாக நீண்டு ஒலியைப் புலப்படுத்துகிற மூச்சு, நீண்டு வெளியே வராமல் தொண்டைக் குழியிலேயே ஒரு புள்ளியாக நிற்கிற நிலை-தான் ஆய்தம். இது உடலின் சம்பந்தமில்லாத உயிர்ப்பின் (மூச்சின்) ஒரு துளிதான். ஆனாலும் இதற்கு உச்சரிப்பின் ஓசையில்லை. இதன் இயல்பை ஒலித்துக்காட்ட, மெய்யெழுத்தை இயக்க ஒரு உயிரெழுத்தைக் கூட்டுவதுபோல, இதற்கும் உயி ரெழுத்தைக் கூட்டவேண்டும். இதை வழக்கமாக 'அஃகன்னா' என்றுதான் சொல்லிக்காட்டுவது. அதை வாய்விட்டுச் செல்லும்போது 'அ' என்பதன் ஓசைக்கும் 'கன்னா' என்பதன் ஓசைக்கும் இடையில் உண்டாகிற அடித்தொண்டை ஓசைதான் ஃ என்ற ஆய்த எழுத்தின் உச்சரிப்பு.

இந்த ஆய்த எழுத்து தமிழுக்கே தனிச் சிறப்பு. வேறு எந்த மொழியிலும் இப்படி ஒரு எழுத்து கற்பனை செய்யப்படவில்லை. ஆம்! இதில் அதிசயிக்கத்தக்க கற்பனை அடங்கியிருக்கிறது. இது எதற்காகக் கற்பனை செய்யப் பட்டதென்றால், தமிழில் இல்லாத பிறமொழி ஓசைகளை

உச்சரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப்போது மற்றத் தமிழ் எழுத்துக்களோடு இலக்கண விதிப்படி இதைக் கூட்டினுல், மனிதனுடைய தொண்டையும் நாக்கும் மூக்கும் ஒலியுண்டாக்க உதவும் மற்ற உறுப்பு களும் சேர்ந்து என்னென்ன ஓசைகளை உண்டாக்க முடியுமோ அத்தனை ஓசைகளுக்கும் சொற்களை எழுத லாம் என்பதற்காக. இதைக் தொல்காப்பியம் மிகத் தெளிவாக்குகிறது.

இந்த அவசியம் ஏன் என்ருல், வலிந்து முயலாமல் இயல்பாகவும் எளிதாகவும் உச்சரிக்கக்கூடிய ஓசை களுக்கு மட்டும் வேண்டியபடிதான் மெய்யெழுத்துக்கள் தமிழில் அமைக்கப் பட்டிருக்கின்றன. வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்று வகை மெய் யெழுத்துக்களே இயல்பான ஓசைகளுக்குப் போது மானவை. என்ருலும் இயல்பான எளிய உச்சரிப்பு களுக்கு மீறிய அசாதாரண உச்சரிப்புகள் பிறமொழி களில் இருந்ததை அக்காலத்திலேயே அறிந்துதான் தொல்காப்பியர் அப்படிப்பட்ட உச்சரிப்புகளையும் எழுத் தால் எழுத இந்த ஆய்த எழுத்தைக் கற்பனை செய்திருக் கிருர். ஒரே ஒரு உதாரணம் காட்டுவோம் :

ஆங்கிலத்தில் F என்ற எழுத்து இருக்கிறது. இந்த எழுத்துக்குண்டான ஓசையை உண்டாக்கத் தமிழில் ஒரு எழுத்தில்லை. ஆனல் 'எவ்ஃ' என்று எழுதினுல் அது F என்ற எழுத்தின் ஒலியை உச்சரிக்க உதவு கின்றது. உச்சரித்துப் பாருங்கள். ஆங்கிலத்தில் *Father* என்ற சொல்லை உச்சரிக்கத் தமிழில் 'வஃஆதர்' என்று எழுதிப் படித்தால் ஆங்கில உச்சரிப்பே உண்டாகும். அதே மாதிரி 'பக்தி' என்ற வடமொழிச் சொல்லில் 'ப'

என்ற எழுத்து வடமொழி உச்சரிப்பின்படி மெல்லோசையில் தான் உச்சரிக்கப்படுவது. தமிழில் 'ப' என்ற எழுத்து வல்லினத்தைச் சேர்ந்தது. அதற்கு இயல்பாக மெல்லோசை கிடையாது. ஆனால் அதற்கடுத்தாற்போல் ஆய்தத்தைச் சேர்த்து 'ப்ஃஅக்தி' என்று எழுதினால் வடமொழி உச்சரிப்பான மெல்லோசைதான் உண்டாகும். இதைப் போலவே ஆய்த எழுத்தை முன்னாலோ பின்னாலோ வேண்டியபடி கூட்டினால் எப்படிப்பட்ட ஒலியையும் உச்சரிக்க உதவும்.

இந்த ஆய்த எழுத்து தொல்காப்பியர் காலத்திலும் அவருக்கு அடுத்த பிற்காலத்திலும் எழுத்தில் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதாகவும் அப்படி எழுதப்பட்ட கூட்டெழுத்துக்கள் இருந்ததற்குக் கல்வெட்டுகளில் ஆதாரங்கள் இருப்பதாகவும் ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகின்றார்கள். ஆனால் அது கொஞ்சம் கொஞ்சமாக வழக்கற்றுக்கொண்டே வந்து, வடமொழி கலந்த கிரந்த எழுத்துக்கள் வந்தபின் முற்றிலும் மறைந்துபோய் ஆய்த எழுத்து அவசியமில்லாததாகி விட்டது. இப்போது தமிழார்வமுள்ளவர்கள் மீண்டும் இந்த ஆய்த எழுத்தைப் பயன்படுத்த முயல்வதைப் பார்க்கிறோம்.

தமிழ் மொழியின் சொல் இலக்கணமும் தனிச் சிறப்புகளுடையது. ஒரு உதாரணம் பார்ப்போம்:

தமிழில், வந்தான், வந்தாள், வந்தது என்ற வார்த்தைகளில் ஒன்றைச் சொன்னால் அந்த ஒரே வார்த்தையில் ஒரு வாக்கியம் முடிவாகிறது. அத்துடன் அந்த ஒரே சொல் திணை, பால், இடம், காலம் என்றவற்றையும் காட்டுகிறது. இப்படிப்பட்ட சொல்லிலக்கணம் பிற மொழிகளில் இல்லை.

இனி, தமிழில் உள்ள மெய்யெழுத்துக்கள் உற்பத்தி யாகும் இடங்களின் வரிசைக் கிரமத்தைப் பாருங்கள் :

மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்துக்களின் உதவி யில்லாமல் உச்சரிக்க முடியாதவை. அவை உற்பத்தி யாகும் வரிசைக்கிரமத்தை நாம் உச்சரித்து அறிந்து கொள்வதற்காக க, ங, ச,......என்ற அகரம் சேர்ந்த மெய்யெழுத்துக்களை வைத்துக்கொண்டு அவற்றின் உற் பத்தியை ஆராய்வோம்.

உயிரெழுத்துக்கள் நெஞ்சிலிருந்து வெளிவருகின்ற ஆவியினல் (மூச்சினுல்) ஒலிக்கப்படுகின்றன. உயி ரெழுத்துக்கள் பன்னிரண்டையும் உச்சரித்துவிட்டபின் அந்த ஆவி தொண்டைக் குழியில் ஃ என்று நின்று விடுகிறது. அப்படித் தொண்டைக் குழியில் ஒடுங்கு வதற்குமுன் அந்த ஆவி உச்சரித்தக் கடைசி உயிரெழுத் தாகிய 'ஔ' என்ற உச்சரிப்புத் தொண்டைக் குழியை அடுத்திருப்பதும் இந்த 'ஔ' என்ற உச்சரிப்பின் முடிவில் அந்த ஆவி தானுகவே தொண்டைக் குழியில் போய் அமர்ந்து கொள்வதாக இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆவிமட்டும் தனியாக உச்சரிக்கக்கூடிய உயிரெழுத் துக்கள் தொண்டைக் குழியோடு நின்று விட்டன.

இனி இந்த ஆவி மெய்யோடு (உடலோடு) சேர்ந்து உச்சரிக்க வேண்டிய ஓசைகள் ஆரம்பமாக வேண்டும். பேச்சுக்கு உதவும் மெய்யுறுப்புக்கள் நாக்கு, அண்ணம், பல், உதடு என்ற நான்குமே. இவற்றுள் நாக்கே முக்கியம்.

இந்த நாக்கு உயிரைக் கூட்டிக்கொண்டு மெய் யெழுத்துக்களைக் கிளப்புகின்ற ஒழுங்கைப் பாருங்கள்.

உள்ளேயிருந்து வருகிற உயிர்ப்பை (ஆவியை) நாக்கு முதன் முதல் சந்திக்கிற இடம் நாக்கின் அடிப் பாகத்தில். அதாவது தொண்டைக் குழியை அடுத்து மேலுள்ள இடத்தில். நாக்கின் ஆரம்பப் பகுதியும் அண்ணத்தின் ஆரம்பப் பகுதியும் சேர்ந்து ஆவியை வெளியாக்குகிற முதல் இடத்தில் 'க' என்ற ஒலி உண்டாகிறது. அந்த இடத்துக்குமேல் நாக்கும் அண்ண மும் ஒட்டுகின்ற இடத்தில் ங, அதற்குமேல் நாக்கும் அண்ணமும் ஒட்டுகிற இடத்தில் ச, அதற்குமேல் ஞ, அதற்குமேல் ட, அதற்குமேல் ண, அதற்குமேல் அண்ணம் முடிந்து பல்லில் நாக்கு மோதுகின்ற இடத்தில் த, பல் லின் நுனியில் ந, என்றவை ஒலிக்கின்றன. அதன் பிறகு, அதுவரையிலும் திறந்திருந்த வாய்மூடி, உதடுகள் சேர்ந்து 'ப', 'ம' என்ற எழுத்துக்களை ஒலிக்கின்றன. அதன்பிறகு, ய, ர, ல, வ என்பன ஒலிகின்றன. அதன் பிறகு, முன்னே அடிநாக்கும் அண்ணமும் சேர்ந்து உண் டாக்க முடியாத ஒலியை உண்டாக்க நுனிநாக்கு வளைந்து அண்ணத்தின் அடிப்பாகத்துக்குப் போய் அங்கிருந்து ழ, ள, ற, ன என்ற எழுத்துக்களை முறையே ஒலித்துக் கொண்டே வளைவு நீங்கி நேராகிவிடுகின்றது.

இயற்கை விதிகளுக் கிணங்க இப்படிப்பட்ட அமைப்புகள் தமிழ் மொழியில் இருப்பது போற்றத் தகுந்ததல்லவா? இந்த அமைப்புகள் எவ்வளவு ஆழ்ந்த சிந்தனையால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணும்போதுதான் தமிழ் இலக்கணத்தின் சிறப்பை உணர முடியும்.

தொல்காப்பிய முனிவர் ஆழ்ந்த வடமொழிப் புலமை உள்ளவராக இருக்கலாம்; வடமொழியைக் கற்றுணர்ந்த

தமிழ் அந்தணராகவோ அல்லது தமிழ் மொழியையும் கற்றுணர்ந்த ஆரியராகவோ இருக்கலாம். சில ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுவதுபோல் அவர் அந்தணரும் அல்ல ஆரியரும் அல்ல. காப்பியக்குடி என்ற உயர்ந்த குடியிற் பிறந்த வெறும் தமிழர்தான் என்பதும் இருக்கலாம். இதைப்பிற்றி அறுதியிட்டுச் சொல்ல ஆதாரம் எதுவும் இல்லை. திருவள்ளுவர் எக்குடியிற் பிறந்தவர் என்று நிச்சயிக்கவே நமக்கு அவருடைய சரித்திர உண்மைகளைச் சொல்லக்கூடிய ஆதாரங்கள் இல்லை. அப்படியிருக்கத் திருவள்ளுவருக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தவர் என்று சொல்லப்படுகிற தொல்காப்பியரைப் பற்றிய சரித்திர உண்மையை எவ்வாறு நிச்சயிப்பது?

அது எப்படியிருந்தாலும் தொல்காப்பியம் என்பது தனித் தமிழ் இலக்கணம். அது வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியதுமல்ல; ஒட்டியதுமல்ல. தொல்காப்பியத்தின் பிற் பகுதிகளில் வடமொழிப் பதங்கள் காணப்படுகின்றன வென்றாலும், இலக்கணம் வடமொழி இலக்கணத்தை ஒட்டியதல்ல. (தொல்காப்பியப் பிற் பகுதிகளில் உள்ள பல சூத்திரங்கள் பிற்காலத்தில் செருகப்பட்டவை என்று சில ஆராய்ச்சிக்காரர்கள் ஐயப்படுகிறார்கள். ஆம், இது ஐயம்தான். மெய்யென்று சொல்லப் போதிய ஆதாரமில்லை).

தொல்காப்பியம் வடமொழியிலிருந்த இலக்கணத்தை ஒட்டிச் செய்யப்பட்டிருந்தால், அதிலுள்ள அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றிரண்டாவது பாணினியின் வடமொழி இலக்கணத்துக்கு வந்திருக்கவேண்டும்.

தொல்காப்பிய இலக்கணம் அதற்கு முன்னுலிருந்த அகத்தியம், மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கம், அவிநயம் என்ற இலக்கண நூல்களைப் பின்பற்றி எழுதப் பட்டதா அல்லவா என்று சொல்ல ஆதாரம் இல்லை. ஆனுலும் தொல்காப்பியம் முற்றிலும் புதுமையான இலக்கணமாக இருந்திருக்க முடியாது. முன்னிருந்த இலக்கணங்களின் தொடர்ச்சியாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

தொல்காப்பியத்துக்குப் பின்னுல் பல இலக்கண நூல்கள் தமிழுக்கு எழுதப்பட்டிக்கின்றன. அவைகள் வீர சோழியம், இலக்கண விளக்கம், நேமிநாதம், நன் னூல், தொன்னூல், முத்துவீரியம் முதலியன. இவைகள் யாவும் எழுத்திலக்கணத்திலும் சொல்லிலக் கணத்திலும் தொல்காப்பியத்தின் அடிப்படையில் சிறிதும் மாறுபட்டவை யல்ல. தொல்காப்பியத்தின் தொடர் புள்ளனவே.

ஆதலால் தொல்காப்பியம் வடமொழி இலக்க ணத்தை ஒட்டியதாக இருந்தால், அது எந்த வடமொழி இலக்கணத்தை ஒட்டி யெழுதப்பட்டதோ, அந்த வடமொழி இலக்கணத்தின் சாயல் சிறிதளவேனும் பின்வந்த வட மொழி இலக்கணமாகிய பாணினி இலக்கணத்தில் இருக்குமல்லவா?

எழுத்திலக்கணத்திலும் சொல்லிலக்கணத்திலுமன்றி பொருளிலக்கணத்திலும் தொல்காப்பியம் வடமொழி இலக்கணத்துக்கு வேறுபட்டது.

தொல்காப்பியருக்கு நெடுங்காலத்துக்குப் பின்னுல் தோன்றிய உரையாசிரியர்கள், அவர்கள் காலத்தில்

தமிழர் வாழ்க்கையில் கலந்துவிட்ட வடமொழிக் கொள்கைகளைத் தொல்காப்பியர் சொன்னதாகத் தோன்றும்படி உரைகள் செய்திருக்கிறார்கள். அதனால் சில இடங்களில் தொல்காப்பியம் வடமொழி வழக்குகளையே பின்பற்றியிருப்பதாக நினைக்க இடமுண்டாகிறது.

உதாரணமாக சாதிப்பிரிவினைகளைப்பற்றிச் சொல்லும் இடங்களிலெல்லாம் 'நான்கு வருணத்தார்' என்றே உரைகளிற் காணப்படுகின்றன. இந்த 'வருணத்தார்' என்ற சொல் மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லப்படுகிற வருணாச்சிரமங்களையே குறிப்பதாகத் தெரிகிறது. அத்தோடு நில்லாமல் களவியலின் 93-ம் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் சொல்லும் உரையில் 'ஒத்த கிழவனும் கிழத்தியும்' என்ற சொற்றொடரில் கிழவன் கிழத்தி என்ற சொற்கள் ஒருமையில் இருந்தாலும் அவை எல்லாச் சாதியிலும் உள்ள எல்லாத் தலைவனையும் தலைவியையும் குறிக்குமானதால் "நால்வகை நிலத்து நான்கு வருணத்தோர் கண்ணும் ஆயர், வேட்டுவர் முதலியோர் கண்ணுங் கொள்க" என்கிறார்.

இதில் நால்வகை நிலப் பிரிவுகளிலும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணத்தார்களும் அவர்களுடன் ஆயர், வேட்டுவர் முதலிய வேறு சாதியினரும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆயரும், வேட்டுவரும் மற்றுமுள்ள வேறு மக்களும் நான்கு வருணத்தார்களோடு சேர்ந்தவர்கள் அல்லவென்பதும் தெளிவாக்கப்படுகிறது. அப்படியானால் இந்த ஆயரும், வேட்டுவரும், 'முதலியோர்' என்ற சொல்லில் அடங்கியுள்ள மற்ற வகுப்பினரும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்கள் நான்கு வருணத்தா

ருக்கும் புறம்பான ஐந்தாம் வகுப்பைச் சேர்ந்த பஞ்சமர்களா? எனின் அவர்கள் தீண்டப்படாதவர்களாகி விடுகிறார்கள். இது பொருந்துமா? ஆயரும் வேட்டுவரும் நான்காம் வருணத்தாராகிய சூத்திரரைவிடத் தாழ்ந்தவர்களா?

கண்ணகியைக் கோவலன் அடைக்கலமாகக் கொடுத்துவிட்டுப்போன ஆயர்குலம் அவ்வளவு தாழ்ந்த குலமா? நச்சினார்க்கினியர், ஆயரையும் வேட்டுவர் முதலியோரையும் சூத்திரருக்குத் தாழ்ந்தவர்கள் என்ற கருத்தில் சொல்லியிருக்க மாட்டார். ஆனாலும் அவர்களைச் சூத்திரர்களினின்றும் வேறானவர்கள் என்று சொல்லியிருப்பது உண்மை. ஆயர்களும் வேட்டுவரும் தமிழ்நாட்டுக் குடி மக்கள். ஆனால் 'வருணாச்சிரமம்' என்பது தமிழ் நாட்டைச் சேர்ந்ததல்ல. வருணாச்சிரமத்தை உரையில் கூட்டியதால் இந்தக் குழப்பம்.

தொல்காப்பிய மூலத்தில் வருணாச்சிரம முறையோ ஆயர், வேட்டுவர், முதலிய சாதிகளோ சொல்லப்படவில்லை. தொல்காப்பியர் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கே பிரிவுகளைச் சொல்லுகிறார். இந்த நான்கு வேறுபாடுகளும் மக்கள் சமுதாயத்தில் நடைபெற வேண்டிய நான்கு தொழில்களைப் பற்றியதாகத்தான் சொல்லப்படுகின்றன. 'சூத்திரன்' என்ற பதம் தொல்காப்பியத்தில் இல்லை. 'வேளாளன்' என்ற சொல், வடமொழி வருணாச்சிரம முறைப்படி நான்காம் வருணத்தாராகிய சூத்திரனைக் குறிக்காது என்பதை எல்லாத் தமிழ் இலக்கியங்களும் காட்டும். தொல்காப்பியத்தை மிகவும் ஒட்டி எழுதப்பட்டுள்ள தமிழ் மறை

யெனப்படும் திருக்குறளில் வேளாளன் மிகச் சிறந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறன்.

நச்சினர்க்கினியர் காலத்திலும் அதற்குப் பின்னும் மனுதர்ம நூல் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டது என்பது உண்மை. அதனால் தம்மைப் பிராமணர் என்றோ, க்ஷத்திரியர் என்றோ, வைசியர் என்றோ தாமாகவே சொல்லிக் கொண்டவர்களைத் தவிர, மற்றெல்லாரும் சூத்திரர் என்றே ஆகிவிட்டது. இப்படித் தம்மை உயர்ந்த வருணத்தாராகச் சொல்லிக் கொண்டவர்களின் தொகை தமிழ் நாட்டின் மொத்த ஜனத்தொகையில் மிகச் சிறு பகுதியே.

பிற்காலத்தில் தம்மை இருபிறப்பாளர் என்று சொல்லிக்கொள்வதில் சிறப்பிருப்பதாகக் கருதி,'விஸ்வப் பிராமணர்' என்பது போலவும், 'வன்னியகுல க்ஷத்திரியர்' என்பது போலவும் 'பூவைசியர்' என்பது போலவும் குலப் பெயர்களைத் தாமாகவே சூட்டிக்கொண்டு பூணூலும் போட்டுக் கொண்டார்கள்.

இப்படியாக, வடமொழி எழுதப்பட்ட ஏட்டைக்கூடக் கண்ணல் பார்த்தறியாதவர்களும் வேதம் என்ன வென்பதைக்கூடக் காதால் கேட்டறியாதவர்களும் பிராம்மணர்களானர்கள். சண்டையென்றல் ஓண்டிக் கொள்பவர்களும் க்ஷத்திரியர்களானர்கள். உழுதுண்டு வாழ்வதைத் தவிர வேறென்றும் தெரியாத வேளாளரும் பூவைசியரானர்கள். ஆனல், தம்மைச் சூத்திரர் என்று சொல்லிக் கொள்ள மட்டும் யாரும் விரும்பவில்லை.

கொல்லர், கம்மியர், செக்கார், சேணியர், குலாவர் முதலிய பலரும் பூணூல் போட்டுக் கொண்டார்கள்.

இருபிறப்பாளர்களாகச் சொல்லிக்கொள்ள வசதியில்லாதவர்களிற் சில வகுப்பார் தம்மை 'தேவேந்திர குலத்தார்' என்றும் 'அருந்ததி குலத்தார்' என்றும் கூறிக்கொண்டார்கள். தேவேந்திரன் மழை பெய்விக்கும் தேவன். உழவர்களாகிய மள்ளர்கள் தேவேந்திர குலத்தவரானார்கள். அருந்ததி என்னும் பெயருடன் விளங்கும் நட்சத்திரம் கற்பின் உச்சமென்று சொல்லப்படுகிற சக்கிலிப் பெண். அதனால் சக்கிலியர் தம்மை அருந்ததிக் குலத்தவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொண்டார்கள். அப்படி ஒரு வடமொழிப் பெயரைக் கூட்டிக்கொள்ளவும் வசதி யில்லாதவர்கள் தம்மை 'நந்தன் குலத்தார்' என்ற தமிழ்ப் பெயரைத்தான் வைத்துக்கொள்ள முடிந்தது.

இப்படிப்பட்ட மாறுதல்கள் உண்டானது சரித்திரம். இதை நாம் ஏளனம் செய்யவில்லை. இது காலகதியின் வேலை. அந்தக் காலம் தமிழ் மக்கள் வடமொழியில் உள்ள நல்லறிவுகளையும், கதைகளையும் கற்கவும் கேட்கவும் விரும்பிய காலம். தமிழ் மன்னர்களும், வடமொழி தமிழ் நாட்டில் பரவுவதை ஆதரித்தார்கள். ஆங்கில ஆட்சிக் காலத்தில் புதிதாக வந்த ஆங்கில மொழிமீது ஆர்வம் உண்டானதுபோல் வடமொழியில் புது ஆர்வம் மிகுந்துவிட்ட காலம். வால்மீகி ராமாயணமும் வியாச பாரதமும் வடமொழியில் படிக்கப்பட்டுத் தமிழில் அர்த்தம் சொல்லுவதைப் பாமர மக்கள் கிராமாந்தரங்களிலும் பரிவோடு கேட்டுப் பயன் கண்ட காலம்.

நான்கு வருணங்களைப் பற்றிய பெயர்களோடு ஆயர், வேட்டுவர் என்ற பெயர்களும் நச்சினார்க்கினியர் வாழ்ந்த காலத்தில் வழங்கினவென்பது பொருந்தும்.

ஆனால், தொல்காப்பியர் காலத்துக்குப் பொருந்தாது. மனு நூலில் காணப்படுகிற பஞ்சமரோ, அல்லது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணங்களும் கலந்து பிறக்கின்ற கலப்புச் சாதிகளோ தொல்காப்பியத்தில் இல்லை.

மேலும் தொல்காப்பியத்திலுள்ள அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்குவகுப்புகளும் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என்ற நிலப் பிரிவினைகளாகிய ஐந்து திணைப் பகுதிகளோடு பிணைத்தே சொல்லப்படுகின்றன.

குறிஞ்சி என்பது மலையும் மலைச்சாரலும்; மருதம் என்பது வயல்களுள்ள சமநிலம்; முல்லை என்பது காடும் காட்டைச் சார்ந்த இடமும்; நெய்தல் என்பது கடலும் கடலைச் சார்ந்த இடமும்; பாலை என்பது நீரும் நிழலு மற்ற வறண்ட இடம். கடைப்பட்ட பாலை நிலம் மனித வாழ்க்கைக்குத் தகுதியற்றதாகையால், அதை நீக்கி மற்ற நான்கு நிலப் பிரிவுகளைமட்டும் குறிப்பதாகத்தான் உலகத்தை 'நானிலம்' என்று தமிழிலக்கியங்களில் கூறப்படுவது வழக்கம். மேலும் தமிழில் பாலை என்று குறிக்கப்படும் நிலப் பகுதி, 'பாலை' என்ற சொல் வழக்கமாக நம்முடைய மனதில் உருவாக்குகின்ற 'பாலைவனம்' என்ற விரிந்த மணற்பரப்பு அல்ல. நீரும் நிழலும் குறைந்த இடங்களைத்தான் தமிழில் 'பாலை' என்று சொல்லுவது. ஒரு காலத்தில் செழிப்பாக இருந்து பிறகு நீர்வளம் குறைந்துவிட்ட இடமும் 'பாலை' என்றுதான் கூறப்படும். பாலை, மனித வாழ்க்கைக்கு வேண்டிய வளங்களில் மிக மிகக் குறைந்தது என்றாலும் அதிலும் சிலவகை மக்கள் வசித்தார்கள் என்றும் அப்பாலை

நிலத்துக்குத் தெய்வம் காளி என்றும் இலக்கியங்களில் காணப்படுகிறது. குறிஞ்சி நிலத்துக்குத் தெய்வம் முருகக் கடவுள்; முல்லைக்குத் தெய்வம் திருமால்; மருதத்துக்குத் தெய்வம் இந்திரன். நெய்தல் நிலத் தெய்வம் வருணன்.

இந்த நிலப்பிரிவினைகளும் அவற்றில் வாழும் மக்களுக்குள்ள வெவ்வேறு பழக்க வழக்கங்களும் தமிழுக்கு உரியன. அவை வடமொழியில் இல்லை. மேலும் தொல்காப்பியத்தில் சொல்லப்படுகிற அந்தணர், அரசர், வாணிகர், வேளாளர் என்ற நான்கு பிரிவுகளும் அவர்கள் செய்த தொழிலைப் பொறுத்த வேறுபாடுகளாகத் தான் இருக்கின்றன. ஆனால், வருணாசிரம முறைப்படி இந்த வேறுபாடுகள் பிறப்பைப் பொறுத்தனவாகவே இருக்கின்றன. இந்த வேற்றுமையை விளக்குவதேபோல்,

**பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமையால்**

என்று வள்ளுவர் பாடியுள்ளார்.

தொல்காப்பியம் தமிழ் மொழிக்கும் தமிழருடைய வாழ்க்கைக்கும் கிடைத்துள்ள முழு இலக்கண நூல். இது தமிழ்மொழி வளர்ந்ததையும் தமிழர்களுடைய சமுதாய வழக்க ஒழுக்கங்களையும் சரித்திரம்போல் காட்டுகின்ற கண்ணாடி. இது எழுதப்பட்ட காலத்தைப் பல ஆராய்ச்சிக்காரர்கள் பலவிதமாகத் தீர்மானிக்கிறார்கள். சிலர் 5000 ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்டதென்றும் மற்றும் சிலர் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். 5000 ஆண்டுகளுக்கும் அதிகமாகச் சொல்லுகிறவர்களும் உண்டு.

மற்றதெல்லாம் எப்படியானாலும், தொல்காப்பியம் திருக்குறளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்பதில் அபிப்பிராய பேதமில்லை. திருக்குறள் கடைச் சங்க காலத்தை ஒட்டியதென்றும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இயற்றப்பட்டதென்றும் கொள்ளுதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. ஆதலால் தொல்காப்பியம் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதும் மிகையல்ல. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதும் உண்மையாக இருக்கலாம். 3000 என்பதே உண்மையானாலும் தமிழ்மொழி, இதைவிடச் சிறந்த இலக்கண நூல் இல்லையெனத் தகுந்த தொல்காப்பியத்தை, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே அடைந்திருக்கிறது என்பது பெருமைப்படத் தக்கதே. இப்படிப்பட்ட இலக்கணம் உண்டாவதற்குத் தமிழ் மொழியின் ஆரம்பம் எத்தனை காலத்துக்கு முற்பட்டதாக இருக்க வேண்டும்? இதற்குமுன் எத்தனை இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பனவெல்லாம் எண்ணிப் பார்க்கத்தக்கன.

தமிழ்மொழியின் இனிமையையும் அதிலுள்ள இலக்கியங்களின் சிறப்பையும் திருவாசகம் தேவாரம் முதலிய பக்தி நூல்களையும் கேள்விப்பட்டுத், தமிழை வெகு ஆர்வத்தோடு கற்றுணர்ந்துத் தேறினவராகி, அதை அடிக்கடி வியந்து புகழும் தவத்திரு விநோபா பாவே அவர்கள் தமிழ்நாட்டில் செய்த ஒவ்வொரு பிரசங்கத்திலும் திருக்குறளைப் பற்றியும் திருவாசகத்தைப் பற்றியும் குறிப்பிடாமல் பேசியதில்லை.

திருக்குறளைப் பற்றி ஒரு பிரசங்கத்தில்:—

"மனிதனுடைய மூளைக்கு எட்டியபடி கணக்கிட்டால் ஆங்கிலேய இலக்கியங்களுக்கு வயது 800; அமெரிக்கா இலக்கியங்களுக்கு வயது 400; திருக்குறளுக்கு வயது 2000 ஆண்டுகள். 800 ஆண்டுகள் வயதுடைய ஆங்கில இலக்கியங்கள் இந்தக் காலத்துக்குப் பொருந்த வில்லை. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளில் நான் மிகப் புதிய ஜீவனைக் காண்கிறேன். இப்போது உலகமெல்லாம் பேசத் தொடங்கியிருக்கிற 'பஞ்சசீலக்' கொள்கையைத்தான் திருக்குறளில் நான் காண்கிறேன். இத்தகைய திருக்குறளை உருவாக்குவதற்கு அதற்குமுன் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் தமிழுக்கு வயது இருந் திருக்க வேண்டும்!......" என்று சொல்கிறார்.

இது விநோபா அவர்களின் வாக்கு. இதே முறை யில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அவ்வளவு சிறப்புடைய தொல்காப்பிய இலக்கணத்தை உண்டாக்கிய தமிழ் மொழிக்கு அதற்கு முன்னால் எவ்வளவு வயது இருந்திருக்க வேண்டும் என்பதைத்தான் எண்ணிப் பார்க்கவேண்டும் என்றது.

அதனால் தமிழர்கள் வடமொழியைக் காண்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே, தமிழ் தனி மொழியாக வளர்ந்துச் சிறந்த இலக்கண முள்ளதாக விளங்கியது என்பது வெளிப்படை. இந்த உண்மையை நாம் வலியுறுத்துவதும் வெறும் தற்பெருமைக்காகவோ அல்லது வடமொழியின் பெருமையைக் குறைப்பதற் காகவோ அல்ல. தமிழ் மக்கள், சிறப்பாகத் தமிழ் மாணவர்கள், தம்முடைய தாய்மொழியின் தொன்மை யையும் அதன் இலக்கணச் சிறப்பின் தன்மையையும் உள்ளபடி உணர்ந்தால்தான் இக்காலத்துக்கு வேண்டிய

நவீனக் கலையறிவுகளையும் கற்பிக்கக் கூடிய இலக்கியங்களை உண்டாக்கித் தமிழுக்கு ஆக்கம் தருவதற்கான ஊக்கம் பெருகும்.

"நவீன கலைகளைப்பற்றிய நூல்களை இயற்றுவதற்கு வேண்டிய கலைச் சொற்கள் தமிழில் இல்லை. தமிழுக்குச் சொந்தமான அறிவு சொற்பந்தான். தமிழிலுள்ள அறிவு பெரும்பாலும் வடமொழியிலிருந்து வந்ததுதான்" என்று சொல்லுகின்ற வடமொழிப் பக்தர்களும் உண்டு.

இதற்கு எதிராக "வடமொழிக்குச் சொந்தமெல்லாம் நான்கு வேதங்கள்தாம். அந்த வேதங்களையும் எழுதி வைக்கத்தெரியாமல் வெகு காலம் வாய் மொழியாகப்பாடி மனப் பாடமாகத்தான் அவர்கள் வைத்துக்கொண்டிருந்தார்கள். தமிழ் மக்களிடமிருந்து வட்டெழுத்துக் கற்றுக் கொண்ட பிறகுதான் வேதங்கள் எழுத்தால் எழுதப் பட்டன. ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன் இலங்கை முதல் இமயம் வரையிலும் தமிழர்கள்தாம் வசித்து வந்தார்கள். சிந்து நதிப் பள்ளத்தாக்கில் ஆரியர்கள் குடியேறி அங்கே இருந்தபோது தமிழர்களுடைய தொடர்புகொண்டு அதன் பிறகுதான் அவர்கள் நாகரிகம் அடைந்தார்கள். பிறகு சிறுகச் சிறுகத் தெற்கே வந்துத் தமிழருடன் பழகித் தமிழிலிருந்துதான் ஆகமங்களையும் ஆலய வழியாடுகளையும் கற்றுக்கொண்டார்கள். ஆகமங்கள் முதலில் தமிழில்தான் இருந்தன. அவற்றை வடமொழியில் ஆக்கிக்கொண்டார்கள். பிறகு ஆரியர்களுடைய செல்வாக்குத் தென்னுட்டில் அதிகப்பட்டுத் தமிழில் இருந்த பல மெய்யறிவு நூல்கள் வடமொழி நூல்களாகவே மாறிவிட்டன. ஆதலால் வடமொழியிலிருந்து தான் பெரும்பாலும் அறிவு தமிழுக்கு வந்தது என்பது

உண்மையல்ல. தமிழில் இருந்துதான் பெரும்பாலும் அறிவு வடமொழிக்குப் போயிருக்கிறது என்பதுதான் உண்மையாக இருக்கமுடியும்'' என்று சொல்லுகின்ற தமிழ்மொழி பக்தர்களும் உண்டு.

இந்த இரண்டும் அளவுக்கு மீறிய உரிமை கோரு கின்ற ஆவேசப் பேச்சுகளாகத்தான் இருக்கின்றன.

ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் எட்டிய வரையில் இந்தியாவின் பூர்வீக மொழிகள் தமிழும் சம்ஸ்கிருத முந்தான். ('தமிழ்', சம்ஸ்கிருதம்' என்ற பெயர்களும் கூட பிற்காலத்தில் காரணப் பெயர்களாக அமைந்தன வாகத்தான் தெரிகிறது. இதைப் பின்னல் ஆராய்வோம்) இப்போது இந்தியாவில் வழங்கிவருகின்ற எல்லா மொழி களும் இந்த இரண்டு மொழிகளிலும் இருந்து கிளைத்த வைகளே. தமிழ் தென்னிந்தியாவிலும், சம்ஸ்கிருதம் வட இந்தியாவிலும் தனித்தனியே வந்தவை என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. வடநாட்டு மக்களும் தென் ளுட்டு மக்களும் நெருங்கிப் பழக நேர்ந்தபோது ஒரு மொழியிலிருந்த அறிவு இன்னெரு மொழியில் கலந்திருக் கலாம் என்பதில் வியப்பில்லை.

தமிழில் இருந்த அறிவுகளும் வடமொழிகளில் கலந் திருக்கலாம். எனினும் அதைப்பற்றிய உண்மைகளை அறிவிக்கக்கூடிய ஆதாரங்கள் தெரியவில்லை. வட மொழியை ஆராய்ந்தவர்கள்தாம் அதை அறியக்கூடும்.

ஆனல், வடமொழி அறிவுகளைத் தமிழில் சேர்த்துக் கொண்டிப்பது மிகவும் வெளிப்படையான உண்மை. நெடுங்காலத்துக்கு முன்னலேயே தமிழர்கள் வட மொழியை விரும்பிப் படித்தார்கள். உண்மையில் வட

மொழி வட நாட்டைவிடத் தென்னாட்டில்தான் அதிகம் சிறப்படைந்திருக்கிறது. இது தமிழர்கள் பெருமைப் படக்கூடிய காரியமேயன்றி வருத்தப்பட வேண்டிய தல்ல. ஏனெனில், தமிழிலிருந்த பல நல்லறிவுகள் வட மொழியில் கலந்து மறைந்துவிட்டனவென்று சொல்லு கின்றவர்களும் கூடத் தமிழிலிருந்து மறைந்துபோன நல்லறிவுகளைத் தமிழுக்கே மீட்டுக் கொண்டதில் மகிழ்ச்சி கொள்ளவேண்டியதாகின்றது. தமிழில் முன்னே இருந்து வடமொழிக்குப் போனதோ, அல்லது தமிழில் முன்னே இல்லாமல் வடமொழியில் இருந்தே வந்ததோ எது வானாலும், தமிழ் தமிழுக்கேயுள்ள தனிப் பண்பு களோடு கூடித்தான் முன்னிலும் சிறப்புடன் விளங்கு கின்றது.

சில உதாரணங்களைப் பார்ப்போம்.

வடநாட்டிலும் ஆலயங்கள், ஆகமங்கள், மந்திரங் கள், பூசைகள் இருக்கின்றன. தமிழ் நாட்டிலும் இருக் கின்றன.

வடநாட்டிலுள்ள மிகப் பெரிய ஆலயமும் தமிழ் நாட்டிலுள்ள மிகச் சிறிய ஆலயத்துக்கேனும் இணையா குமா? வடநாட்டு ஆலயம் ஒன்றாவது கண்ணைக் கவருமா? கருத்தை இழுக்குமா? (இங்கே வட நாட்டு ஆலயங்கள் என்னும்போது இக்காலத்தில் கல்கத்தா, டெல்லி, பம்பாய் முதலான நகரங்களில் புதிதாகக் கட்டப்பட் டுள்ள சில புதிய பளிங்குக் கோயில்களை எண்ணிவிடக் கூடாது. புராதன தலங்களிலுள்ள ஆலயங்களே நாம் குறிப்பிடுவது.)

அந்த ஆலயங்களில், நடைமுறைகளும் தமிழ்நாட்டில் நடப்பதுபோன்று ஆகம விதிகளை ஒட்டிய பூசைகளாக

இருப்பதில்லை யென்பது நேரிற் சென்று பார்க்கிறவர்களுக்குத் தெரியும். வட நாட்டிலும் தமிழ் நாட்டிலும் ஆகம விதிகளும் மந்திரங்களும் வடமொழியில்தான் ஓதப்படுகின்றன. ஏன் இவ்வளவு வேற்றுமை? ஏனென்றால் தமிழ் நாட்டு ஆலயங்களில் தமிழ்ப் பண்பும் தமிழ்க் கலைகளும் இருப்பதுதான்.

வடமொழியிலும் இராமாயணம் இருக்கிறது. தமிழிலும் இராமாயணம் இருக்கிறது. தமிழ் இராமாயணம் வடமொழி இராமாயணத்தைப் பார்த்துச் செய்யப்பட்டது தான். இரண்டும் இராமாவதாரக் கதையைத் தான் சொல்லுகின்றன. ஆனால் தமிழ் இராமாயணம் வடமொழி இராமாயணத்துக்கு முற்றிலும் வேறுபட்டது. அவதார சங்கல்ப்பத்திலிருந்து பட்டாபிஷேகம் முடிய ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கம்பராமாயணம் வால்மீகத்தினின்று மிகவும் மாறுபட்டதாகத் இருக்கிறது.வ டமொழி இராமாயணத்தில் சாதாரண மனிதனாகத் தோற்றமளிக்கும் இராமன் தமிழ் இராமாயணத்தில மூலமும் நடுவும் ஈறும் இல்லாத (ஆதிமத்தியாந்த ரகித) பரம்பொருளாய் விளங்குகின்றான். வடமொழி இராமாயணத்தில் இராவணனால் கூந்தலைப்பற்றித் தூக்கி அவமதிக்கப்பட்ட சீதை, தமிழ் இராமாயணத்தில் தீண்டாத கற்புத் தெய்வமாகக் காட்சி யளிக்கின்றாள். வடமொழி இராமாயணத்தில் மனமறிந்து கற்பு கெட்டவளாகக் காட்டப்படுகிற அகலிகை, தமிழ் இராமாயணத்தில் ‘நெஞ்சினால் பிழைப்பிலாத மாசற்ற கற்பின்மிக்க அணங்காகி’ விளங்குகின்றாள். வடமொழி இராமாயணத்தில், இராமனால் கொல்லப்பட்ட வாலியின் மனைவியாகிய தாரை, இலக்குமணன் கிட்கிந்தைக்குப் போனபோது சுக்ரீவனுடன்

கள்ளுண்டு காமக்களியாட்டத்தில் இருந்ததாகச் சொல்லப் படுகிறது; ஆனால் தமிழ் இராமாயணத்தில அந்த தாரை, கணவனை யிழந்த அமங்கல கோலத்துடன் இலக்குவ னுடைய கோபத்தைத் தணிக்க அவனை எதிர்கொண்டு வருகிருள். அவளுடைய அமங்கல கோலத்தைக்கண்ட இலக்குவன், (தசரதன் இறந்துபோய் விட்டதால்) தன் னுடைய தாய்மார்களுடைய கோசலை, சுமித்திரை முதலானவர்களும் இப்படித்தானே கைம்பெண்களாக இருப்பார்கள் என்ற எண்ணம் உதித்துத் 'தாயாரை நினைந்து நைந்தான்' என்று சொல்லப்படுகிறது. இப்படியே வால்மீகி இராமாயணத்தில் வருகிறஒவ்வொரு பாத்திரமும் அதனதன் தகுதிக்கு வேண்டியபடி தமிழ் இராமாயணத்தில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் இராமாயணத்தில் வட மொழியிலுள்ள பல்வேறு ஞான நூல்களின் கருத்துக்களும் மலிந்திருக்கின்றன. ஆனாலும் 'அது வேறு இது வேறு' என்னும்படி வடமொழி இராமா யணமும் தமிழ் இராமாயணமும் மாறுபடுகின்றன. ஏன்? ஏனென்ருல் தமிழ் இராமணத்தில் தமிழ்மொழியின் சொந்த அறிவும், வழக்கும், பண்பும் நிறைந்திருப்பது தான்.

இப்படிப் பல உதாரணங்கள் காட்டலாம். மொத் தத்தில் வட மொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ள இலக் கியங்களெல்லாம் தமிழ்ப் பண்புகளோடு சேர்ந்து முன்னினும் சிறப்படைந்திருக்கின்றன வென்றே சொல்ல லாம். வடமொழியின் சிறந்த அறிவுகளைத் தமிழாக்கிக் கொண்டதில் தமிழ் அளப்பரிய நன்மைகளை அடைந்தது மட்டுமல்லாமல் தன்னுடைய நற்பண்புகளையும் வட மொழிக்குத் தந்து அதற்கும் நன்மையுண்டாக்கியிருக்

கிறது. தமிழ் மொழியின் நல்லறிவும் வட மொழியின் நல்லறிவும் கலந்ததுதான் தமிழ்நாட்டின் நாகரிகம். தமிழ் நாட்டின் நாகரிகம் பாரத நாட்டின் மற்றப் பகுதிகளிலுள்ள நாகரிகத்தைவிடச் சிறந்ததாக இருப்பதற்கும் காரணம் இந்தக் கலப்புத்தான். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து பொதுக் கூட்டங்களில் பேசும் போதெல்லாம், "பாரத நாட்டின் நல்ல பண்பு களின் பரிபூரணத்தை நான் தமிழ் நாட்டிலேதான் பார்க் கிறேன். வட நாட்டில் அதைக் காணமுடியவில்லை. அதனால் முடிந்தபோதெல்லாம் இங்கே வருவதை நான் மிகவும் விரும்புகின்றேன்" என்று சொல்லுவதில் அடங்கி யுள்ள உண்மையும் அதுதான். வடநாட்டில் நேரு காண்பது வடமொழிக் கலாசாரம் மட்டும் தான். ஆனால் தமிழ் நாட்டில் நேரு காண்பது வடமொழிக் கலாசாரமும் தமிழ்மொழிக் கலாச் சாரமும் கலந்த ஒரு சிறந்த கலாசாரம். இந்தக் கலாச்சாரம் வடநாட்டில் ஏன் இல்லை? ஏனென்றால் தமிழ் மக்கள் வடமொழியை விரும்பிக் கற்றுக்கொண்டதைப் போல் வடநாட்டு மக்கள் தமிழைக் கற்கவில்லை. மேலும் நெடுங்காலமாகத் தமிழர் கள் வட மொழியைத் தமிழ்மொழிக்குச் சமானமாகவே மதித்து வந்திருக்கிறார்கள். இதை,

'இருமொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர்'

என்றும்,

'விடையுகைத்தவன் பாணினிக்கு இலக்கணம் மேனாள்'
'வடமொழிக் குரைத்து ஆங்கியன் மலயமா முனிக்குத்
திடமுறுத்தி அம்மொழிக்கு எதிராக்கிய்
தென் சொன் மடமகள்'

என்றும் பாடியிருப்பதே காட்டும். இதிலுள்ளபடி அகத்தி யரும் பாணினியும் ஒரே காலத்தில் சிவனிடத்தில்

தமிழுக்கும் வடமொழிக்கும் உபதேசம் கேட்டுக்கொண்டவர்கள் என்பது கருத்தல்ல. தமிழர்கள் இந்த இரண்டு மொழிகளுக்கும் தலைவன் பரமசிவன் என்ற பொருளில் தான் இரண்டையும் சமமாகப் பாராட்டி யிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

தமிழர்கள், வடமொழியையும் கடவுள் கொடுத்தது என்று போற்றி, அதைத் தம்முடைய தாய்மொழிக்குச் சமானமாகக் கருதிப் பாராட்டிக் கற்றது போல வடமொழிக்காரர்கள் தமிழைத் தம்முடைய மொழிக்குச் சமானமாகக் கருதினதாகத் தெரியவில்லையே? என்ற கேள்வி பிறக்கலாம். அதனாலென்ன? நாம் வடமொழி அறிவையும் சேர்த்துக்கொண்டு நம் அறிவைப் பெருக்கிக் கொண்டதில் என்ன பிழை? ஆங்கில மொழியை ஆர்வத்தோடு கற்றுக்கொண்டு அதிலுள்ள நல்லறிவுகளையும் கூட்டிக்கொண்டதில் என்ன குற்றம்? எந்த ஒரு மொழிக்கும் எல்லா அறிவுகளும் தனி மானிய மல்ல. எத்தனை மொழிகளைக் கற்கிறோமோ அத்தனையும் ஆதாயந்தான். அதனால்தான் வள்ளுவர்

> யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு

என்றார். இதன் பொருள்:-எந்த நாடும் சொந்த நாடாகும்படி, எந்த ஊரும் சொந்த ஊராகும்படி, ஏன் ஒருவன் சாகிற வரைக்கும் கல்வி கற்றுக்கொண்டே இருக்கக் கூடாது—என்பது. இதன் கருத்து, 'கற்றவனுக்கு எந்த நாட்டிலும் மதிப்புண்டு. எந்த ஊரிலும் மதிப்புண்டு. அதனால் ஒருவன் தன் ஆயுள் முழுதும் புதுப்புதுக் கல்விகளைக் கற்றுக்கொண்டே யிருக்கவேண்டும்' என்பது மட்டுமல்ல. இதில் அடங்கியுள்ள கருத்து இன்னும்

விரிவானது. என்னவென்றால், ஒருவன் தன் சொந்த நாட்டைவிட்டு வேறு எந்த அன்னிய நாட்டுக்குப் போனாலும் அங்கேயும் அவன் சொந்த நாட்டில் இருப்பது போல் சிறப்படைவதற்கு அந்த அன்னிய நாட்டு மொழியையும் இவன் அறிந்திருக்கவேண்டும். அந்த அன்னிய நாட்டு மொழியை அறியாதிருந்தாலும் அந்த அன்னிய நாட்டார் சிலராவது புரிந்து கொள்ளக்கூடிய வேறொரு மொழியையாவது தெரிந்திருக்க வேண்டும். உதாரணமாக, வெறும் தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் சிறிதளவுகூடத் தெரியாத ஒருவன் வ்ஃரான்ஸ் (France) தேசத்துக்குப் போவதாக வைத்துக் கொள்வோம். தமிழ் மொழியின் கரைகாணக் கற்றவனாக இருந்தாலும் அவன் அங்கே தன் சொந்த நாடாகிய தமிழ் நாட்டில் இருப்பதுபோல் எப்படி இருக்க முடியும்? இவன் தனக்கு வேண்டிய இருப்பிடமோ உணவோ எங்கே கிடைக்கும் என்று கேட்பதைக்கூட அங்குள்ளவர்கள் அறிந்து கொள்ள முடியாது. இவனைப்போல் ஒரே மொழிமட்டும் தெரிந்தவனாக இல்லாமல் தமிழும் தெரிந்தவனாக ஒரு துணைவன் அங்கே கிடைத்தாலன்றி இவன் அந்நாட்டில் ஒரு வேளை கூடத் தங்க முடியாது. ஆனால் இதே மனிதன், 'வ்ஃரெஞ்ச்' பாஷை தெரியாவிட்டாலும் ஆங்கில மொழியையாவது அறிந்திருந்தால் அங்கே தங்குவதில் சங்கடம் இருக்காது. அதற்குமேலும் இவன் அந்த நாட்டின் 'வ்ஃரெஞ்ச்' மொழியையே கற்றவனாக இருந்து விட்டால் அந்த நாடே சொந்த நாடுபோல் வாழலாம். ஏனென்றால் தன் தமிழ்ப் புலமையை அந்த மொழியில் பெயர்த்துச் சொல்லிச் சிறப்படையலாம். அப்படிப் பல நாட்டு மொழிகளையும் கற்றிருந்தால்தான் 'யாதானும் நாடாமால்'

என்பது பொருந்தும். அதுதான் இந்தக் குறளில் பொதிந் திருக்கும் உட்கருத்து. அந்தக் கருத்தை வலிவுள்ள தாக்கவே, ஒருவன் ஒருமொழி இரண்டு மொழிகளைக் கற்றவுடன் கல்வி முடிந்து விட்டதாக நின்று விடாமல் பின்னும் பிற மொழிகளையும் ஏன் கற்றுக் கொண்டே இருக்கக் கூடாது என்று 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு' என்றும் சொல்லுகிறுர்.

ஆதலால் முடிந்தமட்டிலும் பிறமொழிகளையும் கற்க வேண்டும் என்பதே நம் முன்னோர்களுடைய கொள்கை. நவீனப் போக்குவரவு சாதனங்களால் ஒரு நாட்டு மக்கள் இன்னொரு நாட்டு மக்களோடு அடிக்கடி பழகுகின்ற இக்காலத்தில் இந்தக் கொள்கை முற்காலத்தைவிட முக் கியமானதாகி விட்டது.

ஆனால் எந்தெந்த நாட்டுக்குச் சென்று எத்தனைப் பிறமொழிகளைக் கற்றுக்கொண்டாலும் அந்தந்த மொழியி லுள்ள புதுப்புது கலையறிவுகளையும் நற்போதனைகளையும் தமிழ்மொழியில் கூட்டிக்கொள்ள வேண்டுமென்ற நோக் கத்தை மறந்துவிடக் கூடாது.

ஒரு மனிதன் தன் வீட்டைவிட்டு எங்கெங்கே சென்று எந்தெந்த முயற்சிகளைச் செய்து எவ்வளவு பொருள் சம்பாதித்தாலும், அவனுடைய நோக்கமெல் லாம் அந்தப் பொருளைத் தன் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துத் தன்னுடைய குடும்பத்துக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் நலமுண்டாக்கப் பயன் படுத்த வேண்டும் என்பதே யல்லவா? அதைப் போலவே தமிழன் பிற மொழிகளைக் கற்பதிலும் தாய் மொழிக்கு ஆக்கம் கூட்டுவதே நோக்கமாக இருக்க வேண்டும்.

இந்தப் பெருநோக்குடன்தான் நமது முன்னோர்கள் பிற எந்த மொழியிலும் இல்லாத வடமொழி நல்லறிவுகளைத் தமிழில் கூட்டித் தமதாக்கிக் கொண்டார்கள். ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த ஆங்கில மொழியைக் கற்றுக்கொண்டதில் மகிழ்ச்சி யடைகின்றோம். ஆனால் அக்கம் பக்கமாக ஓட்டி வளர்ந்த வடமொழியறிவு தமிழில் கலந்து விட்டதை வேறு யாரோ வந்து தமிழைக் கெடுத்துவிட்டதாக நம்மிடம் சிலர் குறை கூறுகின்றோம். இப்படிக் குறைகூற நேர்ந்தது தமிழின் பெருமையை அறியாத சிலர் 'தமிழில் என்ன இருக்கிறது? தமிழில் இருக்கிற அறிவு முழுவதும் வடமொழியிலிருந்து வந்ததுதான்' என்று சொல்லுவதைப் பொறுக்க முடியாமல்தான். இது, இப்படிச் சொல்லுகின்றவர்களுடைய சிறுமையைத்தான் காட்டுமேயல்லாது தமிழின் பெருமையைக் குறைத்துவிடாது. இப்படிப் பேசுகின்ற குற்றம், பேசுகின்ற வரைச்சேர்ந்ததே யல்லாமல் வடமொழியைச் சேர்ந்த தல்ல. இவர்களை மனதிற்கொண்டு நாம் வடமொழியை இகழலாமா? இந்து மதத்தைக் காப்பதாக எண்ணிக் கொண்டு, பகவத்கீதையைக் கையிற் பிடித்துக்கொண்டு மகாத்மா காந்தியவர்களை ஒருவன் சுட்டுவிட்டான். இந்தக் குற்றம் இந்து மதத்தைச் சேருமா?

தமிழர்கள், தமிழ்மொழியைச் 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா என்றும்', 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்றும் பாரதியார் பாடியபடி தமிழே எல்லாமொழிகளிலும் சிறந்ததென்று பெருமைகொள்ளக் கூசவேண்டியதில்லை. பாரதியார்

பாடியது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல. ஆனால் அதே பாரதியார் அவருடைய நூல்களிற் பல இடங்களில் வடமொழிப் பதங்களையும், கதைகளையும், கருத்துக் களையும் வெகு உரிமையோடு ஏராளமாகச் சேர்த்திருக் கிறாரே! ஏன்?

ஏனென்றால் அவர் வடமொழி அறிவுகளையும் தமி ழறிவாகவேதான் கருதுகின்றார். வடமொழிக்கும் மேலானது தாகத் தமிழைப் போற்றி அவர் பாடுவதில் பூரிப்படை கின்ற நாம் அவர் கையாண்டிருக்கிற வடமொழிப் பதங் களையும் கருத்துக்களையும் மட்டும் வேறு கண் கொண்டு பார்க்கலாமா?

பாரதியார் மட்டுமா? பழம் புலவர்கள் பலரும் வட மொழிக் கருத்துக்களை உரிமையோடு சேர்த்துக்கொண் டிருக்கிறார்கள். சில உதாரணங்கள் பார்ப்போம்;

சிலப்பதிகாரம் ஒரு தனித்தமிழ்க் காவியம். அதில் வட மொழிச் சொற்கள் மிகச்சிலவே. அதிலுள்ள கதை முற்றிலும் சோழ, பாண்டிய, சேர நாடுகளாகிய தமிழ் எல்லைக்குள்ளேயே நடந்தது. தமிழ் நாட்டுக்கே சொந்த மெனச் சொல்லத்தகுந்த ஆடல், பாடல், அரங்கு, ஓவியம், சிற்பம், குழல், யாழ், தண்ணுமை முதலிய கலை களையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ்ச் சமுதாயத்தின் நாகரீகச் சிறப்பையும் சரித்திரம் போல் காட்டுகின்ற இலக்கியம் சிலப்பதிகாரம். அதில்

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம் மானுள் வருமேல் அவன் வாயிற்
கொன்றையம் தீங்குழல் கேளோமோ தோழி—என்றும்
பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்

ஆம்பலந் தீங்குழல் கேளோமோ தோழி—என்றும்
கொல்லையஞ் சாரல் குருந்தொசித்தெ மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளோமோ தோழி—என்றும்

*குரவைக் கூத்தாகப் பாடப்பட்டுள்ளன: இந்த மூன்று பாடல் களிலும் உள்ள 'மாயவன்' என்றது கிருஷ்ணனைக் குறிப்பது. மேலும்,*

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே--

*என்றும்,*

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்ற
தொடர்ந்தா ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே......

*என்றும்,*

மூவுலகும் ஈரடிரால் முறைதிறம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியோடும் கான்போந்து
சோவரணும் போர்முடியத் தொல்லிலங்கைக் கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே

*என்றும் ஆய்ச்சியர் குரவைக் கூத்தில் பாடப்படுகின்றன. இவற்றுள் முதற்பாட்டு அண்டகோடிகள் அனைத்தையும் தன் அணிவயிற்றில் அடக்கிக் காக்கும் கரியவனாகிய திருமாலைக் காட்டுகின்றது. இரண்டாவது பாட்டு கிருஷ்ணன் அவதாரத்தையும் பாரதக் கதையையும்*

காட்டுகிறது. மூன்ருவது பாட்டு இராமாவதாரத்தையும் இராமாயணக் கதையையும் காட்டுகின்றது. இந்த மூன்றிலும் அடங்கியுள்ள கதைகளும் கருத்துக்களும் வடமொழியில் வந்தனவே.

சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோ அடிகள் மட்டுமா? இவருக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களைப் பாடியுள்ள பல புலவர்கள் வடமொழிக் கருத்துக்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிருர்கள். சங்க நூல்கள் வடமொழிப் பதங்களே அதிகம் இல்லாத தனித்தமிழ் நூல்கள். அவற்றில் பல இடங்களில் இராமனைப்பற்றிய சேதி வருகின்றது. புறநானூற்றில் ஒரு புலவர் அரசனைப் புகழ்வதாக 'இராவணனுடைய நாட்டை இராமன் விபீஷணனுக்குக் கொடுத்ததுபோல நீ உன்னுடைய பகைவர்களுடைய நாடுகளைப் பிடித்து அவற்றைப் பிறருக்குத் தானமாகக் கொடுத்துவிடுவாய்' என்ற பாடியிருக்கிருர். அதேமாதிரி கண்ணனைப் பற்றியும் பலராமனைப் பற்றியும் புறநானூற்றில் சேதிகள் காணப்படுகின்றன. அத்துடன் கடைச் சங்கத்தில் தமிழில் ஒரு இராமாயணம் இருந்ததாகவும் தெரிகிறது.

இதனுல் எவ்வளவு காலத்துக்கு முன்னுலிருந்து நமது முன்னோர்கள் வடமொழி இலக்கணங்களையும் தமிழாக்கிக் கொண்டுத் தமிழை வளமுள்ள மொழியாக வளர்த்திருக்கிருர்கள் என்பது தெரியவரும். ஆதலால் வடமொழி அறிவு தமிழில் கலந்திருப்பதை அருவருப்பது நமது மூதாதைகளை அருவருப்பதேயாகும். பிரித்தெடுக்க முடியாதபடி தமிழில் கலந்திருக்கிற வடமொழிக் கருத்துக்களையே நாம் விலக்கிவிட விரும்பினுல் இக்காலத்திற்கு இன்றியமையாதனவாகவும் தமிழில் இல்லாதனவாகவும்

உள்ள ‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்’ என்று பாரதியார் பாடியதை எப்படி நாம் சாதிக்க முடியும்?

உலகத்திலுள்ள பல மொழிகளிலும் சிறந்தது நம் தமிழ்மொழிதான் என்ற பற்று நமக்கு இருக்க வேண்டியதுதான். ஆனால் அந்த மொழிப்பற்று மொழி வெறியாக மாறிவிடக் கூடாது. வெறி அழிவைத்தான் உண்டாக்கும்.

தமிழ் மிகச் சிறந்த மொழியாக இருப்பதற்குக் காரணமே அது எந்தப் பிற மொழியையும் இகழாமல் எதிர்ப்பட்ட எல்லா மொழிகளையும் தழுவி வளர்ந்திருக்கிறது என்ற ஒன்றுதான். தமிழ் எந்தப் பிறமொழியையும் தன்னுள் அடக்கிக் கொள்ளக்கூடிய சரித்திரமும் இலக்கணமும் உடையது.

# 'தமிழ்' என்ற பெயர்

தமிழ் என்ற பெயர் எப்போது எப்படி வந்தது என்பதைப் பற்றிப் பல ஆராய்ச்சிக்காரர்கள் பேசியும் எழுதியும் இருக்கிருர்கள். பத்திரிகைகளில் இதைப்பற்றிய வாதப் பிரதிவாதங்கள் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னல் வெகு காரசாரமாக நடந்ததுண்டு.'தமிழிலுள்ள அறிவு முழுதும் வடமொழியிலிருந்து வந்ததுதான்' என்று நினைத்த வடமொழி பக்தர்கள் தமிழ் என்ற பெயரே 'திராவிடம்' என்ற வடமொழிச் சொல்லின் சிதைவுதான் என்று சொன்னர்கள். எப்படி யென்ருல் 'திராவிடம்' என்பது 'திராமிடம்' என்று முதலில் மாறி, அதன் பிறகு 'திரமிடம்' என்று மாறி, அதன் பிறகு 'திரமிளம்' என்று மாறி, அதன் பிறகு தமிளம் என்று மாறிக் கடைசியாகத் 'தமிழ்' என்று வந்தது—என்பது அவர்கள் சொன்னது :

மகாமகோபாத்தியாய உயர்திரு. உ. வெ. சாமிநாத ஐயரவர்கள் அப்போதே இதை மறுத்து, ஒரு மொழிக்கு இன்னொரு மொழியில் பெயரிடப்பட்டது என்பது உண்மைக்குப் பொருந்தாது என்று பேசியிருக்கிருர். மேலும் ஐயரவர்கள் ''தமிழ் என்பதற்கு இனிமை என்ற பொருளும் உண்டு. அதுபற்றித் தமிழென்பதைக் காரணப் பெயராகக் கொள்ளுதலும் பொருந்தும்'' என்று பேசியிருக்கிருர்.

இராமாயண காலத்துக்கும் முன்னால் வடநாட்டில் இருந்தவர்கள் தென்னாட்டைத் 'திராவிட தேசம்' என்றும் தென்னாட்டு மொழியைத் 'திராவிட பாஷை' என்றும் சொல்லியிருக்கலாம். அதனாலென்ன? அங்கிருந்த அவர்கள் 'திராவிடம்' என்று சொன்னதற்காக இங்கிருந்தவர்கள் அந்தச் சொல்லால் தம்முடைய மொழிக்குப் பெயர் வைத்துக் கொண்டார்கள் என்று ஆகிவிடுமோ?

இங்கிலாந்திலுள்ள மக்களைத் தமிழர்கள் 'ஆங்கிலேயர்' என்று சொன்னார்கள். அதனால் 'ஆங்கிலேயர்' என்பது 'அங்கிலேயர்' என்று மாறி, அதன் பிறகு 'இங்கிலேயர்' என்று மாறி அதன் பிறகு 'இங்கிலீயர்' என்று மாறி, 'இங்கிலீசர்' என்று மாறிக் கடைசியாக 'இங்கிலீசு' என்று வந்தது என்றால் 'இங்கிலீஷ்காரர்கள்' ஒப்புக்கொள்வார்களா? இதைப் போலத்தான் 'திராவிடம்' தான் 'தமிழ்' என்று மாறியது என்று சொல்லுவதும்.

உலகிலுள்ள பல மொழிகளின் பெயர்களும் அந்தந்த மொழி வழங்குகிற நாட்டின் பெயரை ஒட்டிய காரணப் பெயர்களாகத்தான் இருக்கின்றன. இங்கிலாந்தில் பேசுவது இங்கிலீஷ். ஜெர்மனியில் பேசுவது ஜெர்மன். சீனாவில் பேசுவது சீனம். ஜப்பானில் பேசுவது ஜப்பானி. இவற்றைப் போலவே நம் இந்திய நாட்டில், பஞ்சாபில் பேசுவது பஞ்சாபி; வங்காளத்தில் பேசுவது வங்காளி; குஜராத்தில் பேசுவது குஜராத்தி; மகாராட்டிரத்தில் பேசுவது மராத்தி; என்பனபோல் இவற்றைக்கவனிக்கிறபோது நாட்டுப் பெயர்தான் மொழிக்குச் சூட்டப்பட்டிருக்கிறதேயன்றி மொழியின் பெயர் நாட்டுக்குச் சூட்டப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஆனல் 'தமிழ்' என்ற மொழிப் பெயர், நாட்டின் பெயரை ஒட்டி வந்ததாக இல்லை. தொல்காப்பியத்தில் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்' என்று 'தமிழ் பேசும் நல்ல உலகப் பகுதி', அதாவது 'தமிழ் மொழியைப் பேசுகின்ற நல்ல நாடு' என்று சொல்லப்படுகிறது. இது மொழியைக் கொண்டு நாட்டைக் குறிப்பிடுகிறதாக இருக்கிறது. இதனல் தமிழ் பேசும் நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் உண்டாகி யிருக்கிறது. தொல்காப்பிய காலத்துக்கு முன்னல் இதே 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' நாட்டை வால்மீகி இராமாயணத்தில் வானர வீரர்களுக்குச் சுக்ரீவன் தென் திசைக்கு வழி சொல்லும்போது, "......கோதாவரி நதி முதலியவற்றையும் காண்பீர்கள். அவ்வாறே, ஆந்திரம், புண்டரம், சோளம், பாண்டியம், கேரளம், முதலிய நாடு களையும் காண்பீர்கள்" என்றுதான் சொன்னதாக இருக் கிறது. இதிலுள்ள சோளம், பாண்டியம், கேரளம் ஆகிய மூன்றும் சேர்ந்ததுதான் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' நாடு. இதனல் தமிழ்மொழி வழங்கிவந்த காரணத்தால் சேர, சோழ, பாண்டி நாடுகளடங்கிய நிலப்பகுதிக்குத் 'தமிழ்நாடு' என்ற காரணப் பெயர் உண்டாயிற்று. நாட்டிற்குப் பெயருண்டாக மொழி காரணமாக இருந்திருக்கிறது.

ஆனல், மொழிக்குத் 'தமிழ்' என்று பெயர் வந்தது எப்படி? இது அர்த்தமில்லாத குருட்டுப் போக்காக வைக்கப்பட்ட இடுகுறிப் பெயர்தான? அப்படியானல் இதை இனியது என்றும், அழகியது என்றும், அழிவற்றது என்றும், பலபடியாக மிகச் சிறந்த அறிவாளிகள் நெடுங் காலமாகப் புகழ்ந்துவருவதெல்லாம் பொருளற்றவை

தானே? "தமிழுக்கு 'இனிமை' என்ற பொருள் உண்டு. அதுபற்றித் தமிழ் என்பதைக் காரணப் பெயராகக் கொள்ளுதலும் பொருந்தும்" என்று தமிழ் தாத்தா சாமிநாத ஐயரவர்கள் சொல்லுகின்றார்களே! அதில் ஏதேனும் உண்மை மறைந்திருக்கலாமே. தமிழ் என்பதற்கு இனிமை என்ற பொருள்தான் எப்படி வந்திருக்கும் என்றெல்லாம் எண்ணச் செய்கிறது.

இந்த எண்ணங்களைத் தொடர்ந்து தமிழ்மொழிக்குத் தரப்பட்டு வந்திருக்கிற சிறப்புப் பெயர்களையும் அடைமொழிகளையும் ஆராய்ந்தால் மிக்கச் சுவையுள்ளதான ஒரு ஊகம் உதிக்கின்றது. ஊகம்தான். உண்மை என்று அழுத்திச் சொல்ல ஆதாரங்காட்ட முடியாவிட்டாலும் ஏன் இதுவே உண்மையாக இருக்கமுடியாது என்று கேட்கத் தகுதியுடைய ஊகம். அந்த ஊகத்தை அறிவதற்குத் தமிழ் மொழிக்குச் சொல்லப்பட்டுள்ள சிறப்புகளைச் சிந்திக்கவேண்டும்.

1. 'தமிழ்' என்ற சொல்லுக்கு 'இனிமை' என்ற பொருள் இருப்பதை இலக்கியங்களில் பல இடங்களிற் காணலாம்.

2. 'தமிழ்' என்பதற்கு 'அழகு' என்ற பொருள் இருப்பதையும் அங்கங்கே காணலாம். ஒரு அழகு மிகுந்த பெண்ணை, 'தமிழ் தழீஇய சாயலவர்' என்றும், ஒரு பெண்ணின் இனிமையான பேச்சைப் புகழ்வதற்கு, 'தமிழினுமினிய தீஞ்சொற் றையல்' என்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

3. தமிழைக் 'கன்னித் தமிழ்' என்றே சொல்லுவதுண்டு. இதன் பொருள் தமிழ் என்றும் வாடாத இளமையுள்ளது என்பது.

4. தமிழை 'அமிழ்தனைய தமிழ்மொழி' என்றும் அதற்கு மேலும் 'அமிழ்தினும், இனிய தமிழ் மொழி' என்றும் சொல்லப்படுகிறது.

5. தமிழ் அழிவில்லாத தன்மையுடையது என்பதை 'என்றுமுள தென்றமிழ்' என்று கம்பன் பாடியது காட்டுகின்றது. இதன் கருத்து தமிழ் என்றென்றும் உண்மையாகக்கூடிய மெய்யறிவு நிறைந்த இலக்கணமும் இலக்கியமும் உள்ளது என்பதுதான். இதே கருத்தை உள்ளடக்கித்தான் கம்பன் 'நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்' என்று பாடியுள்ளது.

மேலுள்ள குறிப்புகளையெல்லாம் கூட்டிப்பார்த்தால், தமிழ் இனிமை, அழகு, என்றும் குன்றாத இளமை, என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய அழிவற்ற தன்மை ஆகிய இவையெல்லாம் ஒருங்கே கூடியுள்ள இயல்புடையதாகச் சொல்லப்படுகிறது.

இந்த குணங்களெல்லாம் ஒருங்கே கூடியுள்ளதாக உலகம் கற்பனையாகச் சொல்லுகின்ற பொருள் 'அமிழ்து' என்ற ஒன்றுதான். இப்படிப்பட்ட அமிழ்தினால் செய்யப் பட்ட வடிவமும் புகை படிந்து மங்கிவிட்டதே என்னும் படி, கம்பன் அசோக வனத்தில் வாடியிருந்த சீதையை,

தேவு தென்கடல் அமிழ்துகொண்டுஅனங்கவேள் செய்த
ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள்

என்று பாடுகின்றான். அமிழ்து என்ற இந்த அரிய பொருள் கடலைக் கடைந்து தேவர்களால் அடையப் பட்டது. அந்த அமிழ்தைப் புசித்ததனால் தேவர்கள் இளமையும் அழகும் என்றும் அழிவில்லாதிருக்கும் மரத்துவத்தையும் அடைந்தார்கள். அமிழ்தை உண்ட

தனல் தேவர்கள் அமரர்களானார்கள். அதே அமிழ்து தான் தமிழ். தமிழை உண்டவர்களும் அமரத்துவம் அடைவார்கள் என்று பாடுகின்றார் பாரதியார்:

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்.

இதன் பொருள்: தெளிவான தமிழ் என்னும் அமிழ்தத்தை உண்டவர்கள் இந்தப் பூவுலகிலேயே அமரர்கள் அடைந்த சிறப்புகளை அடைவார்கள்—என்பது.

இதனல் 'அமிழ்து' என்பதுதான் 'தமிழ்'.

ஆம் 'அமிழ்து' என்ற சொல்தான் 'தமிழ்' என்று வந்திருக்க வேண்டும். அதெப்படி? அதுதான் அந்த ஊகம். அந்த ஊகம் என்னவென்றால் :

கடலைக் கடைந்து 'அமிழ்து' வந்தது. இந்த 'அமிழ்து' என்ற சொல்லைக் கடைந்தால் 'தமிழ்' என்ற சொல்தான் வருகின்றது. கடைந்து பாருங்கள்: 'அமிழ்து என்ற சொல்லை இடையே நிறுத்தாமல் திருப்பித் திருப்பிச் சிறிது நேரம் உசசரித்துப் பாருங்கள். அமிழ்து அமிழ்து அமிழ்து அமிழ்து என்பதை வேகமாகத் தொடர்ந்து உச்சரிக்கும்போது, 'அமிழ்து' என்பதின் கடைசியிலுள்ள உகரம் தானகவே மறைந்து போகும். அப்போது அமிழ்தமிழ்தமிழ்தமிழ்தமிழ் தமிழ் தமிழ் — என்றுதான் ஒலிக்கும். அதுதான் தமிழ்.

இந்த ஊகம் பரிகசிக்கத் தக்கதாகவும் தோன்றலாம். ஆனல், தமிழுக்குச் சூட்டப்பட்டிருக்கிற சிறப்புகளையெல்லாம் சேர்த்துப் பார்க்கிறபோது இது மிகவும் பொருத்தமான ஊகம் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் தோன்றும்.

'தமிழ்' என்று பெயர் இப்படித்தான் வந்தது என்று உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய சான்றுகள் இல்லை யென்றாலும் இப்படி வந்திருக்க முடியாது என்று சொல்லி விட முடியாது.

'அமிழ்து' என்ற சொல்தான் 'தமிழ்' ஆயிற்று என்பதை மறுத்தாலும், தமிழ் மொழியை அமிழ்துக்கு ஒப்பாகவே ஆன்றோர்கள் நெடுங்காலமாகச் சொல்லி வந்திருப்பதை யாரும் இல்லையென்று சொல்லிவிட முடியாது.

'அமிழ்து' என்பது 'இனிமை'யின் உச்சத்தைக் குறிப்பது.

பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவரும்.

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பொருள்: தாம் பெற்ற குழந்தைகள் அவர்களுடைய இளங் கைகளைக் கொண்டு குழப்பிய உணவு கூழானாலும் அது அமிழ்தத்தை விட இனிமையாக இருக்கும்—என்பது.

இதில் 'அமிழ்து' என்பது இனிமைக்கு இணையற்ற பொருள் என்ற கருத்தில்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

தெய்வத் தன்மையும் எல்லையற்ற இனிமையும் சேர்ந்தது 'அமிழ்து.' அதைப் போலவே தெய்வத் தன்மையும் இனிமையும் சேர்ந்தது 'தமிழ்' என்ற பொருளில் தான் தமிழ் 'அமிழ்து' என்று போற்றப் பட்டு வந்திருக்கிறது. அதனால்தான் தமிழைத் 'தேமதுரத் தமிழ்' என்று வழங்குவது.

அப்படிப்பட்ட தமிழைத் தாய்மொழியாகப் பெற்றுள்ள நாம் மிக்க பாக்கியசாலிகளல்லவா? ஆனல் அந்தப் பெருமையை நெடுங்காலமாக நாம் மறந்திருக்கும்படியான பல சூழ்நிலைகள் நேர்ந்துவிட்டன. இப்போது அந்தச் சூழ்நிலைகள் மாறிச் சுதந்தரமாக எண்ணிப் பார்க்கவும் செயல்புரியவும் தொடங்கிவிட்டோம்.

ஆதலால், தமிழ் மொழியில் எப்போதும் இருந்து வந்திருக்கிற தெய்வீகத்தையும் இனிமையையும் பாதுகாத்து, அத்துடன் இக்காலத்துக்கு வேண்டிய புதுப்புது விஞ்ஞானக் கலைகள் யாவும் தமிழ் மொழியில் திகழச் செய்து 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை' செய்வோம்.

**வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!**

UNIVERSITY EXTENSION
14 AUG 1960